மலர் - 03 இதழ் - 11 - மே 2025

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

எல்லாம் தலையான பெருமாள்
- மாரிராஜன்

சிலப்பதிகாரம் காட்டும் மதுரை
-முனைவர் சி.முத்துச்செல்வி

மனிதத்தின் பன்முகம்
- முனைவர் தேமொழி

முருக வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்
- முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

கன்னித் தமிழின் கணினிப் பயணம்
- பேரா. ஏகாம்பரம்

“மதிகெட்டான்” என்னுமோர் நொண்டி நாடகம்
- முனைவர் சிவ இளங்கோ

இன்னும் பல

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் - 03 இதழ் - 11
மே 2025

சிறப்பாசிரியர்
பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
கிங்ஸ்டன் ஜெகநாதன் (இந்தியா)
தேமொழி (அமெரிக்கா)
அன்பு ஜெயா (ஆஸ்திரேலியா)
மின்னச்சன் இங்கர்சால் (நோர்வே)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
அருணேஷ்
செயற்கை நு ண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madhurai, Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97630

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. "அகோரம்" 3
– மா.மாரிராஜன்

2. எளிய முறையில் யாப்பறிவோம்! 7
– நெருப்பலையார். இராம இளங்கோவன்,

3. பெரியாழ்வார் அனுபவித்த கண்ணனின் பிள்ளை விளையாட்டுகள் 11
– ஜனக்புரி சீனிவாசன்

4. கன்னித் தமிழின் கணினிப் பயணம் 15
– பேரா. ஏகாம்பரம்

5. “மதிகெட்டான்” என்னுமோர் நொண்டி நாடகம் 19
– முனைவர் சிவ இளங்கோ

6. எல்லாம் தலையான பெருமாள்
– மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் பிறந்த நாள் – சித்திரை, மூலம் 25
– மாரிராஜன்

7. *Madurai And Athens* 29
– Dr. Mrs. C. Rajeswari

8. சாதனைத் துறவி வீரமாமுனிவர் 31
– பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே

9. ஆதிச்சநல்லூரில் நடந்த வழக்கு 42
– முத்தாலங்குறிச்சி காமராசு

10. மனிதத்தின் பன்முகம் 43
— முனைவர் தேமொழி

11. முருக வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் 45
– முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

12. *Tamilmagan's Gene Notes in Vengai Anchor* 65
–Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

13. சிலப்பதிகாரம் காட்டும் மதுரை 69
–முனைவர் சி.முத்துச்செல்வி

14. வரலாற்றில்போர்வாட்கள் –3 77
– அண்ணாமலை சுகுமாரன்

கிரேக்கப் பெண் கடவுள் ஏதெனா
மதுரை பெண்ணரசி மீனாட்சி

"அகோரம்"

– மா.மாரிராஜன்
கோயில் & கல்வெட்டு ஆய்வாளர்

அகோரம் என்பதன் பொருள் என்ன..? பொதுவாக அழகின்மை, நாகரிகமற்ற என்று பொருள் கொள்ளப்படுகிறது. இப்பொருள் சரியா..?

இல்லை..

பொதுவாக.. ஒரு வடசொல் முன்பு "அ" என்னும் சொல் சேர்ந்தால் பொருள் எதிர்ப்பதமாகும். *Antonyms* ... நீதி - அநீதி; நியாயம் - அநியாயம்.

இதுபோலலே கோரம் என்னும் சொல் முன்பு "அ" சேர்ந்தால் அகோரம். கோரம் என்பதன் எதிர்ச்சொல். கோரம் என்பது அழகற்ற என்ற பொருள் தருமானால் அகோரம் என்பது அழகிய என்னும் பொருள் தரும்.

அப்போ .. நாகரிகமற்ற தோற்றத்தில் இருக்கும் அகோரிகள் அழகானவர்களா என்று கேட்டால் .. ஆம் என்ற பொருளே பொருத்தமாகும்.

இந்த அகோரம் என்ற சொல் எங்கே துவங்குகிறது..?

சாட்சாத் சிவபெருமானின் பெயராகத் துவங்குகிறது.

சிவபெருமானின் வடிவங்களில் முதன்மையானது சதாசிவமூர்த்தம். ஐந்து முகங்களுடன் காட்சியளிப்பார். சிவபெருமானின் இந்த ஐந்து முகங்களின் பெயர்களாக லிங்கபுராணம் கூறுவது.

1. ஈசானம். 2. தத்புருடம். 3. அகோரம், 4. வாமதேவம். 5. சத்யோஜாதம்.

சிவபெருமானின் மூன்றாவது முகத்தின் பெயர் அகோரம். சதாசிவமூர்த்தம் ஐந்து தலைகளுடன் அமைந்திருக்கும்.

- உச்சியில் வான் நோக்கிய முகம் அருஉருவமாக பரந்த வெளியைக் குறிக்கும் ஈசானம்.

- கிழக்குத் திசையை நோக்கிய முகம் தத்புருடம். ஆன்மாக்கள் தோறும் ஆக்ரமித்து அருள் செய்யும்.

- தெற்கு நோக்கிய முகம் அகோரம். ஞானவடிவாய் அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞானத்தை அளித்தல்.

- வடக்குநோக்கிய முகம் வாமதேவம். அறம் பொருள் இன்பம் மூன்றின் உறைவிடம்.

- மேற்கு நோக்கிய முகம் சத்யோஜாதம். சூட்சும தூல தேகமாகிய உடல்களை படைத்து ரட்சித்தல்.

நான்கு திசைகளைப் பார்த்து நான்கு முகமும், வானத்தைப் பார்த்து ஒரு முகம், பத்துக்கரங்களுடன் இருப்பவரே சதாசிவ மூர்த்தி.

தெற்குதிசையை நோக்கி இருப்பவர் அகோரமூர்த்தி. இந்த அகோரமூர்த்தியின் தோற்றத்தை லிங்கபுராணம் இவ்வாறு கூறும்..

"சிவபெருமானை நோக்கி கடும் தவத்தில் ஆழ்ந்த படைப்பின் கடவுளான பிரம்மதேவனுக்கு, நெருப்பு மற்றும் வாள் ஆகியவற்றை தாங்கிய கரிய உருவத்தில் காட்சியளித்த உருவமே அகோரம்."

சிற்ப சாஸ்த்திர நூல்களில் காணப்படும் சதாசிவ மூர்த்தத்துக்கான இலக்கணப்படி அமைந்த தமிழ் பாடல் ஒன்று இவ்வாறு கூறுகிறது.

"உச்சிமுக மீசான மொளிதெளிய பளிங்கு
யுத்தரபூ ருவதிசையை நோக்கியுறு முகந்தே
நிச்சயித்த முகத்தின் கீழ் பூர்வதிசை நோக்கி
நிகழுமுகத் தத்புருடங் கோங்கலர்போ னிறமே
யச்சுறுத்து மகோரமுக மறக்கரிது கராள மவிழ்தாடி
வலத்தாவிற் றென்னோக்கி யமருஞ்
செச்சை நிறந் தெரிவைமுக மிடத்தோண்மேல் வாமஞ்
சிறுபுறத்தின் முகஞ்சத்தி யோசாதந் திகழ்பால்"

திருஉருவ தெளிபளிங்கு சடாமகுடத் திகழி சிறுபிறையு மூவைந்து திருநயனம் வலப்பாற் கரத்தலத்திற் சத்தியப் யஞ்சூல நீண்ட கட்டங்கந் தமருகமு மற்றையிடக் கரத்தின் வரதமுமா துளங் கபலம் போசி செபமாலை மணமலிநீ லோற்பல ம முடையர்வய தீரெட் குறுவிரட்டி யுறுப்பிரண்டு பதம்பதுமா தனந்தா அறவிருப்பர் சதாசிவந்தத் துவத்ததவிசினுகந்தே

நான்கு திசைகளுக்கும் நான்கு முகங்களும், உச்சியில் ஒரு முகமும் ஆக ஐந்து முகங்களையும், முகங்கள் தோறும் மூன்று கண்களையும் உடையவராய் இருப்பார்.

உச்சியிலுள்ள ஈசான முகம் திசையை நோக்கி சுத்த பளிங்கு நிறமாயிருக்கும்.



கிழக்கிலுள்ள தத்புருஷம் முகம் கிழக்கு நோக்கியதாய் கோங்கின்பூ நிறமாயிருக்கும்.

தெற்கில் உள்ள அகோரமும் வலத்தோள் மேல் தென்திசை நோக்சி அவிழ்ந்த தாடியும் கரு நிறத்துடன் பயங்கரத் தோற்றம் உடையதாய் இருக்கும்.

வடக்கிலுள்ள வாமதேவ முகம் இடத்தோள் மேல் வடக்கு நோக்கி பெண் முகத் தோற்றத்துடன் சிவப்பு பவள நிறமாயி இருக்கும்.

மேற்கிலுள்ள சத்யோசாத முகம் மேற்கு நோக்கி குழந்தை முகத் தோற்றத்துடன் பால் நிறமாக இருக்கும்.

திருமுடியில் பிறைச்சந்திரனையும் கொன்றை மாலையை சூடி சடாமகுட முடையவராய், கழுத்தின் கீழ் சுத்த பளிங்கு நிற திருமேனியையும் பத்துக் கைகளையும் உடையவராயிருப்பார்.

வலப்பக்கத்தில் ஐந்து கைகளில் அபயம், சூலம், வேல், மாத் திரைக்கோல், தமருகம் இவற்றையும்.

இடப்பக்கத்து ஐந்து கைகளில் வாதம், மாதுளம்பழம் நாகம், செபமாலை, நீலோத்பலம் ஆகிய இவற்றையும் உடைவராய் இருப்பார்.

இதுதான் சதாசிவ மூர்த்திக்கான இலக்கணமாகச் சிற்பநூல்கள் கூறுவது.

ஐந்து முகங்களுடன் கூடிய சதாசிவ மூர்த்திபடிமங்கள் கோவில்களில் ஏராளமாக உள்ளன. ஐந்து முக சிவலிங்கமும் சதாசிவ வடிவமாக உள்ளன. விரிஞ்சிபுரம் கோவிலில் உள்ள சதாசிவலிங்கவடிவம் சிறப்பான ஒன்று. தஞ்சைப் பெரியகோவிலில் சதாசிவடிவமும் ஐந்து மூர்த்திகளும் தனித்தனி கோட்டத்தில் உள்ளனர்.

தாராசுரத்தில் உள்ள அமர்ந்தநிலையில் உள்ள அகோரமூர்த்தி. தஞ்சைப் பெரியகோவிலில் உள்ள நின்ற நிலை அகோரமூர்த்தி. திருவெண்காடு வதம் செய்யும் அகோரமூர்த்தி சிறப்பான மூர்த்தங்களாகும். சாட்சாத் சிவபெருமானின் அகோரமூர்த்தியின் தோற்றம்..

"கருப்பாக இருப்பார். கலைந்த கேசத்துடன் இருப்பார். தீச்சுடரை கொண்டிருப்பார். அச்சமூட்டுபவராக இருப்பார். கையில் சூலத்துடன் இருப்பார்.

எதிரிகளை வதம் செய்வார்.

இந்த அகோரமூர்த்தி உங்களுக்கு எல்லா நன்மைகளையும் வழங்கட்டும்.

எளிய முறையில் யாப்பறிவோம்!

– நெருப்பலையார். இராம இளங்கோவன்,
பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூரு.

பாடம்: 30.
புதுவகை இசைப்பாடல்களான தனிப்பாடல்கள் -1.

சங்க இலக்கியங்களில் பரிபாடல் என்ற இசைப்பாடல் உண்டு. இசைப் பாடல்களின் தொகுப்பே பரிபாடலாகும். பண்டையத் தமிழரிடையே நாயன்மார், ஆழ்வார், சித்தர் ஆகியோராலும், அதன்பின், முக்கூடற் பள்ளு, குற்றாலக் குறவஞ்சி போன்ற இசை நாடகங்களாலும் இசைப் பாக்கள் இருந்து வந்தன என்பதும், சிந்து வகைப் பாக்கள் பயன்பட்டன என்றும், இசை வரலாறு நினைவூட்டுகிறது.

இடையில் வந்த நாயக்கர் ஆட்சியாலும், மராத்தியர் ஆட்சியாலும், தமிழின் இசைப் பாடல்களைத் தவிர்த்து, கருநாடக இசை என்ற ஒன்றைப் புகுத்தினர். பின்னர் பதினெட்டாம் நூற்றாண்டில் முத்துத் தாண்டவர், அருணாச்சலக் கவிராயர், கவிக்குஞ்சர பாரதியார் ஆகியோர் தமிழிசைப் பாடல்களுக்கு மறு உயிர் தந்தனர். அதன்பின் நூற்றுக் கணக்கானோர் நிகழ்கால நூற்றாண்டில் தமிழிசைப் பாடல்களுக்குப் புத்துயிர் தந்தனர். இசை ஞானம் மிக்கத் தமிழ்ப் பெண்டீர் பாடித் திரிந்த இசைப்பாடல் கும்மி எனும் இசைப் பாடல் முதல், இனி ஒவ்வொன்றாக அறிவோம்.

கும்மி:

பெண்கள் வட்டமாகக் குழுமிக் கைகொட்டி, ஆடும்போது பாடும் பாட்டெனினும் தமிழ்ப்பெண்கள் இசைஞானம் மட்டுமல்ல இலக்கண ஞானமும் உடையவர் என்று புலனாகிறது. ஆம்! கும்மிப் பாட்டில் வெண்டளை நழுவாமல் ஓரெதுகைக் கொண்டு, எழுசீர் கழிநெடிலடிப் பாடலாக வந்ததாகும். இப்படி தளைப் பார்த்துப் பெண்கள் பாடி வந்த பாக்களே கும்மியாகும். அடியின் முதல் சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமைய இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை இணைந்து வேறு தளைகளின்றி, ஈற்றுச்சீர் பெரும்பாலும் கூவிளங்காய்ச் சீராகவோ, கருவிளங்காய்ச் சீராகவோ வருவதாகும். நான்கு சீர்கள் ஒரு வரியாகவும், மூன்று சீர்கள் இரண்டாம் வரியாகும். இரண்டடிக்கோர் எதுகை வரும். இப்படி வரும் பாட்டே கும்மியாகும். கும்மி எனும் இப்பாடல் வகையானது வெண்பா இனமாகும்.

இந்தக் கும்மிப் பாட்டில் இரண்டு வகையுண்டு. ஒன்று இயற்கும்மி, இரண்டாவது ஒயிற்கும்மி யாகும். மேலே கூறிய இலக்கணப்படி வெண்டளை அமைந்து பாடுவது இயற்கும்மி ஆகும். எடுத்துக் காட்டாக இயற்கும்மியில் என்னுடைய ஒரு பாட்டைக் கீழே காண்போம்.

இயற்கும்மி:

வையம் செழித்தே அறமும் தழைக்க
வகையாய் உழைத்தே பொருளீட்டு!
ஐயமகற்றி ஆண்மைத் திறத்துடன் வாழ
அகிலமெல்லாம் சுற்றிப் பொருளீட்டு!

(நெருப்பலையார்)

இப்பாட்டில் முதலடியிலும் ஈற்றடியிலும் காய்ச்சீரின் ஈற்றில் "ஈட்டு" "ஈட்டு" என்று ஒவ்வோரடியின் ஈற்றில் இயைபுத்தொடை வந்ததை அறிக. "ஈட்டு" என்று இணைந்த சீரான "பொருளீட்டு" "பொருளீட்டு" என்று இரண்டும் புளிமாங்காய்ச் சீர்களாக விளங்காய்ச் சீர்கள் வந்துள்ளன என்றும் உணர்க. அடுத்து, ஒயிற் கும்மியைப் பற்றி அறிவோம்.

ஒயிற்கும்மி:

பாட்டின் இரண்டாமடியில் முதல் நான்கு சீர்களும் முடுகி வருதலே ஒயிற்கும்மி ஆகும். முடுகியலடி முதலடியின் மோனையைப் பற்றியபடி வரும். முடுகியலடியின் மோனையாக அடுத்த அரையடியின் முதற் சீரில் வரும். முடுகுச் சீர்களில் வெண்டளைப் பார்க்கத் தேவையில்லை. ஒயிற்கும்மிக்காக என்னுடைய எடுத்துக் காட்டுப் பாட்டொன்றைக் கீழே காண்போம்.

ஒயிற்கும்மிப் பாட்டு:

சினத்தினால் எத்தனை நாடு மழிந்து
சிதைந்தே போன கதையுண்டு!
சிறுமையைத் தந்திடுமே - சீர்மை
வறுமையைத் தந்திடுமே! - உணர்ந்தே
அனலாய்ச் சினத்தையும் அள்ளித் தெளித்தால்
அறமும் வளரா; தடுத்திடுமே!

(நெருப்பலையார்)

இப்பாட்டில் முடுகியலின் முதற்சீரான "சிறுமையைத்" என்ற சீருக்கும், முதலடியின் முதல் சீரான "சினத்தினால்" என்ற சீருக்கும் "சி, சி" என்ற மோனைப் பெற்றுள்ளது. சிறுபான்மையாக "தடுத்திடுமே" என்ற கருவிளங்காய்ச் சீராக வந்துள்ளது. அடுத்து, "சிறுமை" "வறுமை" என்ற எதுகை எடுப்பாக வந்து அமைந்ததையும் உற்று நோக்குக.

தொடர்ந்து, ஓரடிக் கும்மி ஒன்றைக் காண்போம். இந்த ஓரடிக்கும்மி இலக்கணம் பிறழாமல், கழிநெடிலடியில் ஒரே பொருளில் முதிர்ச்சி அடைந்தால் அது ஓரடிக் கும்மி யாகும். இந்த ஓரடிக் கும்மிக்காக என்னுடைய ஒரு எடுத்துக்காட்டுப் பாடலைக் கீழே காண்போம்.

ஓரடிக் கும்மி:

பாலில் இணைந்தே இருந்திடும் நெய்யெனப்
பாங்காய் இருப்பவளே பண்புடையாள்!
(நெருப்பலையார்)

ஓரடிக் கும்மியில், கும்மிக்கான இலக்கணம் மாறாமல் வெண்டளைப் பொருந்தி வந்து, அடியில் பொருள் முற்றிப் பாட்டு முடிந்தது. முதல் சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமைந்துள்ளது. அடுத்து,

சிந்து:

இரண்டடிகள் ஓரெதுகையைக் கொண்டு, அளவொத்து வருவதே சிந்து எனப்படும். நான்கடிகள் ஓரெதுகைப் பெற்று வருதலும் உண்டு. முதலடியின் ஈற்றில் தனிச்சொல் பெற்றும் பெறாமலும் வரும். ஓரடியின் மோனைத் தொடை எடுப்பின் முன்னும் பின்னும் உள்ள அரையடியை அடி என்றே கணக்கில் எடுத்துக் கொள்ளல் வேண்டும். சிந்து பாட்டில் இரண்டு வகையுண்டு. ஒன்று சமனிலைச் சிந்து என்றும், வியனிலைச் சிந்து என்றும் உண்டு. சிந்து பாட்டிற்கு எடுத்துக் காட்டாக என்னுடைய ஒரு பாட்டினைப் பார்ப்போம்.

சமனிலைச் சிந்து:

உயர்ந்த நிலையிருந்தும் -சிறிதும்
உளத்தில் பொறுப்பில்லாள்;
துயர மில்லாமல் - துணிந்து
துயரில் துடித்திடுவாள்!
(நெருப்பலையார்)

இந்தச் சிந்து பாட்டில், “உயர்ந்த நிலையிருந்தும்"- என்பது குறளடி. இதேபோல், “உளத்தில் பொறுப்பில்லாள்"- என்பதும் குறளடி. "சிறிதும்" - என்பது தனிச்சொல்லாகும். இது குறளடி முதல் எல்லா அடியிலும் வரும். தளை வரையறை இல்லை. எனவே சிந்துவில் தளைப் பார்க்கத் தேவையில்லை. மோனைத் தொடையானது எடுப்பின் முன்னும் பின்னும், (அதாவது, எடுப்பு என்பது தனிச்சொல்லின் முன்னும் பின்னும் என்று பொருள்.) உள்ள அடிகள் ஒத்து வருதலாகும். இதனை சமநிலைச் சிந்து என்றும், இந்த இலக்கணத்திற்குள் வராததை வியனிலைச் சிந்து என்றும் பெயர் பெறும். "உயர்ந்த பொறுப்பிருந்தும்" "உளத்தில் பொறுப்பில்லாள். " என்னும் இவ்விரண்டும் குறளடியால் வந்ததால் இது சமனிலைச் சிந்து ஆயிற்று. தொடர்ந்து,

வியனிலைச் சிந்து:

நிலவும் தண்ணொளியும் - இரவில்
நிலத்தில் நல்ல இணக்கங் கொள்ளும்!
நிலத்தில் செங்கதிரோன் - கதிரை
நிறுத்தி நல்ல இணக்கங் கொள்ளும்!
(நெருப்பலையார்)

இச் சிந்துவில் முதலடி குறளடியாகவும், அடுத்த அடி நான்கு சீர்கள் கொண்ட அளவடியாகவும் வந்ததால் இது வியனிலைச் சிந்து எனப்படும். சமநிலைச் சிந்துவின் பெயர்களையும், வியனிலைச்சிந்து பெயர்களையும், வேறு சில சிந்து வகைகளையும் இனிக் கீழே கண்டறிவோம்.

சமனிலைச் சிந்து பெயர்கள்:

1)குறளடி இரண்டு வருதல் - இரண்டு சீர் இரட்டை .
2)சிந்தடி இரண்டு வருதல் - மூன்று சீர் இரட்டை.
3)அளவடி இரண்டு வருதல் - நாற்சீர் இரட்டை.
4) நெடிலடி இரண்டு வருதல் - ஐஞ்சீர் இரட்டை.
5)கழி நெடிலடி இரண்டு வருதல் - அறு சீர் இரட்டை.
6)எழுசீர் இரட்டை, எண்சீர் இரட்டை அந்தந்தச் சீர்த் தொகையால் பெயர் பெறும்.

குறளடி என்பது ஓரடியின் மோனைத் தொடை எடுப்பின் முன்னும் பின்னும் உள்ள, அதாவது தனிச்சொல்லின் முன்னும் பின்னும் உள்ள அரையடி என்று நினைவில் கொள்க. இந்த அரையடியைச் சிந்து பாட்டில் ஓரடியாகவே கணக்கிடல் வேண்டும். இனி, வியனிலைச் சிந்துவின் பெயர்களை அறிவோம்.

வியனிலைச் சிந்து பெயர்கள்:

1)குறளடியும் சிந்தடியும் வருதல் - இருமுச்சீர் இரட்டை.
2)குறளடியும் அளவடியும் வருதல் - இருநாற்சீர் இரட்டை.
3)சிந்தடியும் அளவடியும் வருதல் - முந்நாற் சீர் இரட்டை.
4)சிந்தடியும் குறளடியும் வருதல் - முவ்விரு சீர் இரட்டை.
5)அளவடியும் குறளடியும் வருதல் - நாலிருசீர் இரட்டை.
6)அளவடியும் சிந்தடியும் வருதல் - நாமுச்சீர் இரட்டை.

இவை ஒவ்வொன்றும் மண்டிலம் முதலிய பாவினங்கள் போல, வெவ்வேறு ஓசையுடையதாக வருகின்ற சிந்து இசைப்பாடலே யாகும். இன்னும் வேறு சில சிந்து வகைகளையும் அறிவோம்.

வேறு சில சிந்துகள்:

1)காவடிச் சிந்து.
2)தங்கச் சிந்து.
3)நொண்டிச் சிந்து.
4)வழிநடைச் சிந்து.
5)ஆனந்தக் களிப்பு.
6)தெம்பாங்கு.

இவைகள் யாவும் இலக்கணத்தால் அமைந்த சிந்துகளாகும். நாடோடிப் பாட்டினத்தில் சிந்து அடங்கும். ஒவ்வொரு பெயரிலும் அமைந்த சிந்து பாடல் வரிகள் தம்மை அடுத்தடுத்த பாடத்தில் கற்போம். இப்பொழுது பயிற்சிக்குள் செல்வோம். அடுத்த பாடத்தில் இப்பாடத்தில் உள்ள அனைத்து கும்மிகளின் எடுத்துக் காட்டுப் பாட்டுகளைப் பாடியறிவோம்.

யாப்பிலக்கணம் வளரும்.

பெரியாழ்வார் அனுபவித்த கண்ணனின் பிள்ளை விளையாட்டுகள்

– ஜனக்புரி சீனிவாசன்
தமிழாசிரியர், டில்லி

கண்ணன் வாழ்ந்த காலம் வேறு. ஆழ்வார் வாழ்ந்த காலம் வேறு. பெரியாழ்வார் கண்ணனின் லீலைகளை பிறர் சொல்லக் கேட்டிருக்க வேண்டும். குழந்தைகளின் சேட்டிதங்கள் யாருக்குத்தான் பிடிக்காது!

யசோதைக்கு மட்டுமா குழந்தையாக இருந்தான் கண்ணன். ஆயர்பாடிச் சேரிக்கே குழந்தையாக அன்றோ அவன் விளங்கினான்.

அவன் செய்யும் குறும்புகளைப் பொறுக்கமுடியாமல் ஆய்ச்சியர்கள் யசோதையிடம் முறையிடுகின்றனர். அவன் செய்த குறும்புகள், சேட்டிதங்கள் ஒன்றா இரண்டா! ஒருநாள் இரண்டு நாள்களா! பலநாள்கள் தொடருகின்றன. அவனைக் கையும் களவுமாகப் பிடிக்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் அவர்களால் முடியவில்லை. ஊராருக்குத் தீம்பன். தாய்க்கு நல்லபிள்ளயாக நடிக்கிறான்.

கண்ணனுக்குத் தெரியக் கூடாது என்று உச்சியில் உறி கட்டி வைத்தாலும் பொத்த உரலைக் கவிழ்த்து அதன்மேலேறி மெத்தவயிறாற வெண்ணெய் விழுங்கி உண்பான். தான்மட்டுமன்றி நண்பர்கள் பலருடன் சேர்ந்தே கூட்டுத் திருட்டு!

அவனது சேட்டிதங்களையெல்லாம் உள்வாங்கிய ஆழ்வார் பாசுரங்களாக வடித்துக் காட்டுகிறார். கண்முன்னே சேட்டிதங்களை நினைவு கூர்கிறார். கண்ணனிடத்தில் அவ்வளவு ஈடுபாடு அவருக்கு!

ஆய்ச்சிமார்களுக்குத் தாங்கள் மறைத்து வைப்பதெல்லாம் கண்ணனுக்குத் தெரியக்கூடாது என்பதல்ல. கண்ணன் வந்து கண்டுபிடிக்கட்டும் பார்க்கலாம் என்கிற எதிர்பார்ப்புதான். முறையிடுவதும் நடிப்புதான். ஒருநாள் கண்ணன் வரவில்லை யென்றால் அவர்களே கண்ணனைத் தேடி வந்துவிடுவார்கள்.

வெண்ணெய் களவாடல் முதலான பிள்ளை விளையாட்டினையும் ஆய்ச்சியர் முறையீட்டினையும் ஆழ்வார் இரண்டாம் பத்து 9, 10 ஆம் திருமொழிகளில் பாடிப் பரவச மெய்துகிறார்.

ஓர் ஆய்ச்சி, யசோதை பிராட்டியிடம், யசோதை நங்காய்! உன்மகன் செய்த காரியத்தைக் கேள். பானையில் வைத்திருந்த வெண்ணெய் முழுவதையும் விழுங்கிவிட்டு வெறும் பாத்திரத்தை மேலே வீசி எறிந்து உடைத்து விட்டான். அந்த ஓசைகேட்டு ஓடிவந்தேன். புண்ணில் புளி கரைத்து விட்டது போல எரிச்சலூட்டும் தீமைகள் பல செய்கிறான். உன்மகனைக்கூப்பிட்டுக் கண்டித்துவை எனமுறையிடுகிறாள்.

எல்லாம் செய்தகண்ணன் ஒன்றும் செய்யாதவன் போல படுத்திருக்கிறான்.

நங்கையே! இவன் எனக்கு அருமையானவன். சூதுவாது தெரியாதவன் எனக்கூறி, கரியகுழல் செய்யவாய் முகத்துக் கண்ணா! அயலகத்தார் பரிபவம் பேச நான் பொறுத்துக் கொள்ளமாட்டேன். நீ எங்கும் போகாதே எனக் கண்டிக்கிறாள். ஏதேனும் சொல்லி அசலகத்தார் பரிபவம் பேச நான் தரிக்க மாட்டேன்" என்கிறாள்.

அவள் சென்றபின் இன்னொருத்தி வருகிறாள்.

வெண்ணெயை உருக்கி நெய்யை ஒருகுடத்தில் நிரப்பி மூடி வைத்திருந்தேன். உன்மகன் என்னசெய்தான் தெரியுமா? அதுமுழுவதையும் உறிஞ்சிக் குடித்துவிட்டு பாத்திரத்தை உடைத்துவிட்டுச் சென்று விட்டான். அருகிருந்தார் தம்மை அநியாயம் செய்வதுதான் வழக்கோ? உன்மகனை அழைத்துக் கேள் என்றாள்.

யாராவது பால் கொடுத்தாலும் இப்போதுதான் குடித்துவிட்டு வந்தேன் என்று சொல்லக்கூடிய நீயா இதுபோல செய்தாய்.இனி அவர்கள் வீட்டுக்கெல்லாம் போகாதே எனக் கண்டிக்கிறாள்.

"உண்டுவந்தேன் அம்மமென்று சொல்லி ஓடியகம்புக ஆய்சிதானும்

கண்டெதிரே சென்றெடுத்துக்கொள்ளக் கண்ணபிரான் கற்றகல்விதானே"

என ஆழ்வார் வியக்கிறார்.

மற்றொருத்தி, பாலைக்கறந்து அடுப்பேறவைத்துப் பல்வளையாள் என்மகள் இருப்ப, மேலையகத்தே நெருப்பு வேண்டிச் சென்று இறைப்பொழுது அங்கே பேசிநின்றேன். அதற்குள் உன்மகன் என்னசெய்தான் தெரியுமா? அந்தப் பாலைச் சாய்த்துவிட்டு ஓடிவிட்டான் என்கிறாள். அதுமட்டுமல்ல யசோதை நங்காய் இன்னும் சொல்கிறேன் கேள் என மேலும் தொடர்கிறாள்.

செந்நெலரிசி, சிறுபருப்பு (பயத்தம்பருப்பு) சேர்த்து அக்காரம் நறுநெய்சேர்த்து பன்னிரண்டு திருவோண நாள்கள் செய்தேன். அது உன்மகனுக்கும் நன்றாகத் தெரியும். இன்றும் அதுபோலத்தான் செய்தேன். இன்னும் உகந்து சாப்பிடுவேன் எனச்சொல்லி அனைத்தையும் விழுங்கி விட்டான். உன்மகனை அழைத்துக்கேள் என முறையிடுகிறாள்.

யசோதை பிராட்டி, கண்ணா! இனி நேசமில்லார் அகத்திற்கு நீ விளையாடப் போகவேண்டாம் தூசனம் சொல்லும் தொழுத்தைமாரும் தொண்டரும் இருக்கும் இடத்திற்குப் போகாதே. தாய்ச்சொல்லைக் கேட்பது உனக்கு நல்லதாகும் என்கிறாள்.

யசோதாய்! இவை மட்டுமல்ல இன்னும் கேள் என புகார்பட்டியலை நீட்டுகிறாள்.

சுவைமிக்க லட்டு, வத்தல், சீடை, எள்ளுருண்டை, சூய்யன் இவையெல்லாம் செய்து ஒரு பாத்திரத்தில் வைத்திருந்தேன். என்வீடுதானே யார்வந்துவிடப்போகிறார்கள் என வைத்திருந்த அத்தனையும் உன்மகன் கொஞ்சம்கூட மீதம் வைக்காமல் தின்றுவிட்டான். அவை போதாதென்று உயரத்தில் உறியில் வைத்திருந்த வெண்ணெயையும் நோட்டமிட்டிருக்கிறான் எனக் குற்றப்பத்திரிகை நீட்டி அவள் சென்றபின் மற்றொருத்தி வருகிறாள்.

பேச்சுத்திறமை கொண்ட யசோதையே! உன்மகன் என் இல்லம் புகுந்து என்மகளைக் கூவிஅழைத்து அவள் கைவளையலைக் கழட்டிக் கொண்டுபோய், வீட்டுத் தோட்டத்திலிருந்து நாவற்பழங்களைப் பறித்து விற்கவந்த பழக்காரியிடம் அந்த வளையலைக்கொடுத்து நல்ல நாவற் பழங்களை வாங்கித் தின்றான். கேட்டதற்கு நான் ஒன்றும் அப்படிச் செய்யவில்லை என சாதிக்கிறான்; சிரிக்கிறான். கண்டித்துவை என முறையீட்டுப் பத்திரத்தை முடிக்கிறாள்.

இவர்களுக் கெல்லாம் சமாதானம் சொல்லியனுப்புகிறாள் யசோதை பிராட்டி. திடீரென சில ஆயர் சிறுமியர்கள் வருகின்றனர். கண்ணனுடைய தீம்புகளைக் கூறி முறையிடுகின்றனர்.

அம்மா! ஆற்றிலிருந்து விளையாடுவோங்களை சேற்றாலெறிந்து எங்களுடைய வளை, துகில்களை எடுத்துக் கொண்டு காற்றின் கடியனாய் ஓடிப்போய் வானளாவி வளர்ந்த மரத்தின்மேல் ஏறிக் கொண்டான். நாங்கள் எவ்வளவோ வேண்டியும் தர மறுக்கிறான்.

அங்கிருந்த தாமரைப் பொய்கையைக் கலக்கிக்கொண்டிருந்த விஷம்கக்கும் நாகப்பாம்பின் தலையில் குதித்தான். அதன் வாலைப் பிடித்திழுத்தான். ஐந்து தலைநாகம் அவனை விழுங்க வாய்பிளந்தது. இவன் உடம்பை அசைத்து அதன் தலைமேலேயே நடனமாடத் தொடங்கிவிட்டான்.

ஆய்ச்சியர் சேரிக்கு வந்தான் அன்னையர் வைத்திருந்த அளைதயிர் பாலுண்பதைக் கண்டு அவர்கள் அவனைக் கையும் களவுமாகப் பிடிக்க, அவர்கள் பிடியிலிருந்தும் தப்பிஓட, சிலர் பிடியிலிருந்தும் தப்பமுடியால் அவர்களிடம் பிடிபட்டு அடியுண்டு அழுது கொண்டிருந்தான் என முறையிட்டனர்.

கண்ணனின் பிள்ளைமை விளையாட்டுச் செயல்களில் மனதைப் பறிகொடுத்த பெரியாழ்வார் பாசுரங்களைப் பாடி பரவசமெய்தினால் கண்ணனின் பிள்ளைவிளையாட்டு பேரின்பம் தருமல்லவா!

ஆய்ச்சிமாரும், ஆயர் சிறுமியரும் யசோதையிடம் முறையீடு செய்தாலும் கண்ணனின் தீம்பு கண்டு உகந்தனர்.

கன்னித் தமிழின் கணினிப் பயணம்

(மாணவர்களுக்குத் தமிழின் அழைப்பு)

– பேரா. ஏகாம்பரம்
கனடா

தமிழ் வணக்கம்:

முக்கனிச் சாறுடன் முப்பாலைச் சேர்த்ததும்
திக்குகள் எட்டிலும் தீந்தமிழ் - ஒக்கலே!
தக்கார் கணக்கும் கணினியும் செந்தமிழும்
முக்கனி என்பேன் முகந்து!

முன்னுரை:

தமிழ் பட்டப்படிப்பு சேரும் மாணவர்கள் பெரும்பான்மையோர் வேலை வாய்ப்பு இல்லை வேறு வழியும் இல்லை என்றே படிக்கிறார்கள். தமிழ் முது கலை பட்டம் பெற்றவர்கள் கடைகளில் பணியாற்றுகிறார்கள் என்பது வருந்தத்தக்கது. இக்கட்டுரையின் நோக்கம் தமிழில் மென்பொருள் ஆற்றலும் ஆக்கமும் பெருகவேண்டும். இந்த பொறுப்பை ஏற்றுத் தமிழ் மாணவர்கள் முயன்றால் "யாதும் ஊரே" என்று உலகளவில் உலா வருவார்கள் என்பது திண்ணம். செயற்கை அறிவு என்ற புதிய மென்பொருள் தன்னை நெறிப்படுத்தி தமிழ் வாழ்வியலை உலகத்தில் விரிக்க வேண்டும்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். ஏன்? எண்ணும் எழுத்தும் இரண்டு கண்கள் போன்றவை? எண்ணையும் எழுத்தையும் பார்ப்பதற்குக் கண்கள் வேண்டும். எழுத்தும் எண்ணும் தோன்றும் முன்னர் கண்களே கண்டறியும் கருவியாக இருந்தது. இருளையும் இருள் என்று அறிந்ததும் ஒளியையும் ஒளி என்று அறிந்ததும் கண்கள் தான் 'இருள் வெளி இரண்டுக்கும் ஒன்றிடம் என்ன' என்பார் ஒளவையார்.

கணிதம்:

காட்சியை நமக்குக் காட்டுவது கண்கள். காணும் திறன் உடைய பொறிகள் கண்கள். பிறந்த குழந்தை அம்மா, அப்பா என்ற காட்சியைப் பார்த்துத்தான் அறிந்து கொள்கிறது. கண்கள் தான் முதலில் காட்சியைப் பார்த்து அறிவு பெறுகிறது. வாழ்க்கையில் புற உலகைப் புரிந்து இயங்குவதற்கு ஐம்புலன்களில் கண்களே இன்றியமையாதது. கண்கள்தான் உயரம் என்றால் என்ன என்று காட்சியால் பார்க்கிறது நீளம் அகலம் உயரம் இடம் காலம் எல்லாவற்றையும் அறிந்து கொள்கிறது.

கணிதம் என்ற சொல்லும் கண் என்ற சொல்லின் வேர். இப்போது புலனத்திலும் குறுஞ்செய்தியிலும் நீங்கள் பயன்படுத்துவது உருவக் குறியீடுகள் தானே. எழுத்துகள் மறைந்து

கொண்டே வருகின்றன. திரைப்படங்களால் தான் நற்றமிழும் கலப்புத் தமிழும் புழங்கும் வட்டாரத் தமிழும் இன்னும் தமிழ் உண்டு என்பதைக் காட்டுகிறது.

கண், காண், காட்சி இம்மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள இயல்புடையன. கண்கள் காண்பது காட்சி என்ற குறியீடாக சொற்கள் மலர்ந்தன. மனிதன் ஒரு மரத்தைப் பார்க்கிறான் அவன் அதிலே காய்த்துத் தொங்கும் கனியைப் பார்க்கிறான். அது எவ்வளவு உயரத்தில் இருக்கிறது என்று கண்கள் கணிக்கின்றன. எவ்வளவு நீளமான கொம்பு வேண்டும் என்று அவன் நீளத்தைக் கணிக்கிறான். நீளம் அகலம் உயரம் என்ற அளவீடுகள் தோன்றியது. இயற்கைப் பொருள்கள் பரிமாணங்களுடன் தோன்றுகின்றன. பரிமாணங்களுக்குள் விதிகளும் மறைந்திருக்கின்றன. நெறி முறைகளையும் விதிகளையும் மனிதன் கணித்து நிரூபணம் செய்யும் கலையே கணிதம்!

இன்னுமொரு எடுத்துக் காட்டு சொல்கிறேன். ஒரு குகையில் ஐந்து மனிதர்கள் சேர்ந்து வாழ்கிறார்கள். ஆதி மனிதர்கள் அவர்கள். காலையில் அனைவரும் வேட்டைக்குச் செல்கிறார்கள். எல்லோரும் திரும்பி வந்து விட்டார்களா என்று எப்படி ஆதி மனிதன் அறிந்து கொள்வான்? ஒன்று இரண்டு ... என்று எண்ணவும் தெரியாதே. ஒவ்வொருவரும் ஒரு கல்லைக் குறியீடாக எப்போதும் குகை வாசலில் ஒரு பக்கத்தில் வைத்திருப்பர். காலையில் குகையை விட்டு வெளியே செல்லுமுன் வலது பக்கம் இருக்கும் கல்லை ஒவ்வொருவரும் இடது பக்கம் வைப்பார்கள். திரும்பி வருங்கால் மறுபடியும் காலையில் வைத்த கல்லை எடுத்து முன்பிருந்த பக்கத்தில் ஒவ்வொருவரும் வைத்து விடுவார்கள். இதுதான் கணித்தல் என்னும் கணிதம். ஐந்து கல்லும் முன்பிருந்த இடத்தில இருந்தால் அனைவரும் திரும்பி விட்டனர் என்று ஐயம் திரிபறக் காட்டிவிடும்.

ஆதி மனிதனின் குறியீடு கல். அவன் தந்த அறிவியலே குறியீடு. உங்கள் பெயர் ஒரு ஊர், வீட்டு எண் அனைத்தும் ஒரு குறியீடு. ஒரு பொருளுக்கு ஒரு குறியீட்டு உருவம். தமிழில் உள்ள பன்னிரு உயிரெழுத்தும் பதினெண் மெய்யெழுத்தும் குறியீடுகளே! ஆதிமனிதன் கற்பித்த குறியீடு (Notation), கணிதத்தின் அடிப்படை என்று சொன்னால் நம்ப முடியாது. ஆயினும் உண்மை.

கணி, கணிதம் இயற்கையால் இயல்பாக மேலெழுந்தது. புதியதாகக் கண்டுபிடித்தது கணிதம் அல்ல. இயற்கையில் இருந்ததே வெளிப்பட்டது. மனிதன் அறிந்து கொண்டான். கல் என்ற குறியீட்டு முறை தோன்றியது. கல்வி என்ற சொல்லின் வேராகவும் ஆனது. ஆதி மனிதன் கல்லை ஒரு மனிதனுக்குக் குறியீடாக வைத்ததுதான் இன்றைய எண்ணிற்கும் எழுத்திற்கும், ஏன், அறிவியலுக்கே மூலம். குறியீடு இல்லாமல் அறிவியலே இல்லை. நீளம் அகலம் உயரம் என்ற முப்பரிமாணங்களை இயற்கை வெளிப்படுத்தியது. குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் போன்ற நிலத்தைத் திருத்தி ஒரு கூட்டமாக வாழும் நாகரிகம் தோன்றியது. ஒரு வீதி தோன்றியது. இதைக் கட்டமைக்க அளவீடுகள் செய்யும் நெறிமுறை தேவைப்பட்டது. அப்போது இயற்கை தன்னுள் ஒளிரும் விதிகளை அவனுக்கு ஊட்டியது. கணிதம் பிறந்தது. இயற்கை விதிகளை அறிந்தான். ஒரு முக்கோணம் பெரியதோ சிறியதோ மூன்றுகோணங்களின் கூடுதல் 180 பாகை அளவு என்று வியந்தான். கூட்டல் பிறந்தது. இருளும் ஒளியும் போல் கூட்டலில் இருந்து கழித்தல் பிறந்தது. இயற்கையால் இயல்பாக மேலெழுந்தது. கூட்டலில் இருந்து தொடர் கூட்டல் பெருக்கலின் அடிப்படையானது. வகுத்தல் பெருக்கலில் இருந்து பிறந்தது. கூட்டலும் கழித்தலும் வகுத்தலும் தொகுத்தலும் (பெருக்கல்) கணிதத்தின் அடிப்படை நெறி முறைகள் ஆயின. இவை அனைத்து நெறி முறைகளும் இந்தியாவிலிருந்து உலகில் பரவியது.

சுழியமும் 1, 2, ...,9 என்னும் 10 எண்களும் நாம் உலகுக்குத் தந்த கொடை என்பது உலகம் வியக்கும் உண்மை. இங்கு ஒன்று குறிப்பிடுவது முழுமையாக இருக்கும். எல்லையற்றதையும் அளவிடும் ஆற்றலைக் பாலிற் படு நெய் போல் கணிதம் தன்னுள் வைத்திருக்கிறது. பற்பல கேள்விகளின் தீர்வை மனிதன் கணிதத்தில் தேடுகிறான். 'பேரண்டத்தின் மூலம் என்ன' என்ற

கேள்விக்குள் நுழைந்து யானையை எறும்பு அளப்பது போல் மனிதன் முயற்சி செய்கிறான். கணிதம் என்பது பேரறிவின் ஒரு புள்ளி. இருபுள்ளிகளின் இணைப்பே நேர்க்கோடானது. மூன்று புள்ளிகள் முக்கோண உருவம் பெற்றது. வானம் பார்த்தான். வட்டம் பிறந்தது. நான் வாழும் கணக்கு தவறாகலாம். நீங்கள் போடும் கணக்கும் வாழ்வில் தவறாகலாம். பேரறிவின் கணக்கு என்றும் பிழையாகாது.

கணினி:

கூட்டல் என்ற ஒன்றை மட்டுமே வைத்து கணிதத்தின் நுண்ணறிவால் உருவமைக்கப் பட்டதே கணினி. ஆயிரமாயிரம் கூட்டல் கணக்கை கண்ணிமைக்கும் நேரத்தில் செய்யும் எளிமையான கருவியே கணினி. இன்று சொல்லற்கரிய ஆற்றல் பெற்று வளர்ந்திருக்கிறது. கணினி கைக்குள் அடங்கும் கருவியாக மக்கள் வாழ்வில் பயன்பட வேண்டும் என்ற எண்ணமே இன்றைய தொழில் நுட்பத்தின் அடிப்படைக் காரணம். அளப்பரிய கணினிவளர்ச்சி, வணிக வளர்ச்சியாக மாற்றப்பட்டது. பஞ்சபூதங்கள் அடிப்படை. பேரண்டம் பஞ்ச பூதங்களின் மலர்ச்சி. கணினியும் வணிகமும் இன்று அந்த நிலையில் ஒன்றி உறவாடுகின்றது.

ஐந்து என்ற எண்ணை எப்படிக் கணினி புரிந்துகொள்ளும்? கணினி மின் ஆற்றலால் இயங்குவது. இரும இலக்கம் *(BINARY DIGIT)* என்பது சுழியம், ஒன்று என்ற இரண்டு எண்களாகும். எண்களைக் கணினியில் குறிப்பிட மின்சாரம் எப்படி உதவும்? ஒரு பொத்தானை அழுத்தினால் மின்சக்தி செல்லும் இணைப்பு ஏற்பட்டு நம் வீட்டு மின்விளக்கு ஒளிவீசுகிறது. தடை செய்ய அதே பொத்தானை மறுபடியும் அழுத்தினால் போதும். தடை ஏற்பட்டு மின் சக்தி தொடர்ந்து செல்லாமல் நிற்கும். எனவே;

ON = 1 = மின் தொடர்பு
OFF = 0 = மின் தடை

ஒரு குறியீடு உலகையே புரட்டிப் போடுகின்றது. இதுவே சுருக்கமான கணினியின் அடிப்படை அறிவியல். கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஒளியின் வேகத்தை விட அதிவேகமாக வளர்கின்றது. செயற்கை அறிவு என்ற புதிய இயந்திர மொழியும் இன்று நம்மோடு இணைந்து விட்டது. இன்றைய மாணவர்கள் வாழும் உலகம் சிறந்த பொறகாலம்; இன்றைய தமிழ் மாணவர்கள் கணினியின் செய்யறிவு வளர்ச்சியை சீரமைத்து செய்யறிவு மெய்யறிவாக மேம்படச் செய்யலாம்.

மனிதனுடைய ஆற்றலால் செய்யக்கூடிய அனைத்தையும் கணினி செய்யலாம். இயற்கை தன்னுள் இலை மறைவு காய் மறைவாக இருந்ததைத் தேற்றமாக உணர்த்தி ஊட்டியது. ஆதி மனிதன் சிந்தனைச் சிற்பியானான். மண்ணிலிருந்து விண்ணையும் வணங்கி அளந்தான். இற்றைய நாளில் அந்த தேடல் தொடர்கின்றது. அந்த தேடலில் கணினி என்ற கருவியை இன்று கைக்குள் அடங்கும் அளவுக்கு மனிதன் கைவசப்பட்டது.

அறிவியலாளர்களும் ஆட்சியாளர்களும் எவ்வாறு பயனுறுவார்கள் என்பதே இற்றைய நாளின் புரியாத புதிராக இருக்கிறது. அன்று இயற்கையை வணங்கி அளந்தவன் இன்று வணிக நோக்கில் அளக்கிறான். இடம், காலம், நீளம், அகலம், உயரம், ஆழம், பரப்பு , கொள்ளளவு, என்று சொல்லிக் கொண்டே போகும் அளவுக்கு அளவீடுகள் பெருகிவருகின்றன. கடந்த ஐம்பது ஆண்டுகளில் அறிவியல், தொழில் நுட்பம், மக்களின் வணிகப் பேராசை இம்மூன்றும் கணிணிப் பயன்பாட்டை மாற்றிவிட்டது! கணினி இயற்கை விதிகளை செயற்கையாக பயன்படுத்தும் பேராசை நிலைக்குச் சென்றுவிட்டது. கணினி செய்ய வேண்டும் என்ற நிலையிலே நாம் சிக்கிக் கொண்டிருக்கிறோம். திறன் பேசி ஒரு கைக் கணினி. அதுவே நம்மை ஆட்டுவிக்கிறது இன்று! இயற்கையை செயற்கையாக

மாற்றுவது இன்றைய தீவிரமான முரண்தொடை முயற்சி. தன்னழிவுக்கும் காரணியாக மாறிவிட்டானோ என்ற ஐயம் எழுகிறது.

கன்னித் தமிழ்:

தமிழின் பெருமை பேசுவதால் பயனில்லை. தமிழ் மொழி நேற்று இன்று நாளை என்று நாம் பேசுவதை விட இன்று இந்த நொடியில் சிந்திப்போம். ஒருவர் முனைவர் பட்டம் பெற்ற பின்னர் எழுத்துகளை உருவாக்கம் செய்யவில்லை. இயற்கையாக, வாயைத் திறந்ததும் வரும் காற்றோடு ஓசை இணைந்ததும் "அ" பிறந்தது . அதுதான் தமிழ் என்ற மொழியானது. இப்போது புரிகிறதா? கணிதம் படிப்பவர்களும், கணினி பிரிவு படிப்பவர்களும், தமிழ் படிப்பவர்களும் எண்ணும் எழுத்தும் என்ற பெற்றோரின் குழந்தைகள். இன்று தமிழ் மாணவர்கள் சீரிளமைத் திறம் வியந்து தமிழ் படிக்கின்றார்கள்.

தமிழ் அன்பர்களே! மாணவர்களே! கன்னித் தமிழோடு ஒரு சொட்டு கணிதமும் இரண்டு சொட்டு கணினியும் சேர்த்து நீங்கள் இயக்க நிலையில் இருத்தல் வேண்டும். ஏனென்றால் இம்மூன்றும் முக்கனி போன்றது. உலகத்தில் எங்கு சென்றாலும் தமிழர்கள் இருக்கிறார்கள். தமிழ் இலக்கிய வளமும் வாழ்வியல் அறமும் வான்புகழ் வள்ளுவமும் உலகுக்குத் தெரிய வேண்டும். பொருளும் இன்பமும் அறவழியில் வரவேண்டும். அறம் முன்னத்தி ஏர். ஆங்கிலம் இருந்தால் உலகை வலம் வரலாம் என்பதை மறந்து விடாதீர்கள். நாறப்து ஆண்டுகளாக நான் கனடாவில் வாழ்கின்றேன். உங்களுக்கு நான் எடுத்துக் காட்டு. எனவே சொல்வதற்கு உரிமையும் கடமையும் உள்ளது. நீங்கள் அனைவரும் இம்மூன்றும் தெரிந்து கொள்ள ஒரு சிறு முயற்சி எடுத்தாலே உங்கள் தமிழ் பேராசிரியர்கள் கற்பிக்கும் பாடங்கள் கைவசப் படும்.

புதுவை, பாரதிதாசன் மகளிர் கல்லூரி, தமிழ்த் துறை ஒரு எடுத்துக்காட்டு. இற்றைய நாளில் பல தமிழ்ப் பேராசிரியர்கள் கணினிவழியாகத் தமிழ் இலக்கிய வளத்தை விரலசைவில் தெரிந்துகொள்ள மாணவர்களை ஊக்குவித்து வருகிறார்கள். பாடத்திட்டத்தில் இருக்கின்றதா? மதிப்பெண் உண்டா? சான்றிதழ் உண்டா? என்று கேட்பதற்கு உங்களுக்கு நேரமில்லை. எதிர்காலத் தலைவர்கள் நீங்களே. ஒவையார் இருந்தால் அறம் செய விரும்பு என்றபின்,

"கன்னித் தமிழையும் கணினி வழி ஊட்டு"
என்று சொல்வார்கள். வள்ளுவர் கூட
"கற்க கணினியை; கற்றபின் வையத்தில்
நற்றமிழ் வாழ்வியலை நாட்டு"

என்று கூறியிருப்பார்.

தமிழ் படிக்கும் மாணவர்கள் கவிதை , கட்டுரை, உரை வீச்சு, ஆய்வுத் துறை என்று நான்கு பரிமாணங்களில் ஒன்றில் புலமை பெறலாம். தமிழ் மென்பொருள் மலரும், மேம்படும் பொருளாக அது விரியும். இது உங்கள் கையில் காத்துக்கொண்டிருக்கிறது என்பதை நம்புங்கள். கணிதமும் கணினியும் ஊறுகாய் போல சிந்தனையில் ஊர்ந்தால் தமிழ் வானில் தாரகையாய் தமிழ் மாணவர்கள் மின்னுவதற்கு வழி வகுக்கும்!

"மதிகெட்டான்" என்னுமோர் நொண்டி நாடகம்

– முனைவர் சிவ இளங்கோ,
புதுச்சேரி.

மதி என்றால் நிலவு என்று பொருள். முழுமதி என்றால் முழு நிலவு. பெண்டிரின் முக அழகை, முழுமதியனையாள் என்று இலக்கியங்கள் மொழிகின்றன. மதி என்பது அறிவையும் குறிக்கும். அறிவழகன் என்ற பொருளில் மதியழகன் என்று தமிழர்களுக்குப் பெயரிடும் பழக்கத்தை நாம் அறிவோம். ஆகவே மதி கெட்டான் என்ற சொற்றொடர் அறிவு இழந்தவனைக் குறிக்கின்றது என்று சொல்லாமலே விளங்கிவிடும். அதேபோல் அறிவிற் சிறந்தோரை மதிவாணர் என்று குறிப்பிடுவது சங்க கால வழக்கம். "மதிவாணர் பிள்ளைத் தமிழ்" என்றொரு நாடகம் இருந்ததாக உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். இந்த நீண்ட நெடிய வரலாறில், பிற்காலத்தில், சிற்றிலக்கியக் காலங்களில் இயற்றப்பட்ட ஒரு நாடகமே நாம் தலைப்பில் குறிப்பிடும் "மதிகெட்டான்" என்னும் நாடகம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி.17ஆம் நூற்றாண்டு புதிய வரவுகளையும், தரவுகளையும் ஏற்படுத்திய காலமாகும். பக்தி இலக்கிய கால இறுதியில் சிற்றிலக்கியங்கள் தோன்றி இலக்கிய உலகை நிரப்பிய காலத்தின் நீட்சியாகும். பாமரர்களின் பாடல்களும் இலக்கிய மதிப்புப் பெற்ற காலமாகும். வேற்று மொழி இலக்கியங்களும் தமிழில் தாக்கத்தை ஏற்படுத்திய காலமும் ஆகும். இசுலாமியர், நாயக்கர் காலப் படையெடுப்புகள், ஐரோப்பியர்களின் படையெடுப்புகளால் தமிழர்கள் சிதறுண்டு இருந்த காலம். தமிழில் இசுலாமிய, கிருத்துவ மதத்துடன் தொடர்புடைய இலக்கியங்கள் தோன்றிய காலம். ஆட்சியாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடன் கைகோர்த்துக் கொண்ட உயர் சாதியினர், பிற சமூகத்தினரை அடிமையாக நடத்திய காலம். ஐரோப்பியர்களின் ஆட்சியில் அரசியல் செய்ய வழி இல்லாத தமிழர்கள், பக்தியைத் தவிர வேறு எந்த வழிகளிலும் புத்தியைச் செலுத்தாத காலம். புராணக் கடவுள்களை வணங்கிக் கொண்டு, பஞ்சபூதக் கோட்பாடு வழி பொருள் முதல் வாதம் சொன்ன சமயங்களைச் 'சிற்றின்பச் சமயங்கள்' என்று புறந்தள்ளிய காலம். அதனால் சிற்றின்பத்தால் வரும் கேடுகளை, அதற்குக் காரணமான, புலவர்களே பாடித் தள்ளிய காலம்.

இசையும், கூத்தும், நாடகமும் வரலாற்றுக் காலத்தில் இருந்தே வழங்கி வருவதைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இவை அரசவை, அரசு சார்ந்து இயங்கும்

நிறுவனங்களால் இயக்கப்படுபவை. அதே நேரம் மக்களிடையே தன்னிச்சையாக முகிழ்த்த கலைகளாக இவை வளர்ச்சியையும், வரவேற்பையும் பெற்றன. கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோர் தொழில்முறைக் கலைஞர்களாக மக்களிடையே மகிழ்வூட்டி வந்தனர். வயிர் என்னும் சங்கு போன்ற இசைக்கருவியை இசைத்த வயிரியர், கோடு எனப்படும் ஊதுகொம்பை வாசிக்கும் கோடியர், மாதங்கி நடனம் ஆடிய மதங்கர், கழைக்கூத்தாடிய ஆரியர், மகளிர் கூத்தினை முனைப்புடன் ஆடிய துணங்கைக் கூத்தினர், மலை நடனம் ஆடிய குரவைக்கூத்தினர், கோலம் என்னும் வெறியாட்டம் ஆடிய கூத்தினர், சாந்திக் கூத்தினர், வினோதக் கூத்தினர் என்று காலந்தோறும் இசையும், கூத்தும், நாட்டியங்களும் நிகழ்ந்து கொண்டும், மாறிக் கொண்டும் வந்திருக்கின்றன. கால மாறுபாடுகளுக்கு ஏற்பப் பொருளிலும், கதையிலும் இவை மாற்றம் பெற்றும் வளர்ந்தன. காலப்போக்கில் பழையன அழிவதும், புதியன உருவாவதும் இயல்பாகின.

சங்க காலத்தில் ஆடல் மகளிர் அரசவை சார்ந்து இயங்கி வந்தனர்; கோயில்கள் இல்லாததால் தேவரடியார்கள் என்று யாரும் இல்லை. சங்ககாலத்தில் தேவரடியார்கள் இருந்ததற்கான சான்றுகளைச் சங்க இலக்கியங்களும் குறிப்பிடவில்லை. ஆனால் ஒளிவு மறைவின்றிப் பேசப்பட்ட பரத்தையர், அக்காலச் சமூகத்தின் ஓர் அங்கமாக இருந்துள்ளதைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவர்களைப் பொருட்பெண்டிர், வரைவின் மகளிர், மாய மகளிர் என்பார் திருவள்ளுவர் (குறள்: 911 - 920). பல்லவர்கள் காலத்தின் போதுதான் மன்னர்களின் இசைவுடன் தென்னாட்டில் கோயில்கள் உருவாக்கம் பெற்றன. முன்னரே சமுதாயத்தில் நிலவி வந்த சமண, ஆசிவகப் பள்ளிகளும், பௌத்த மடங்களும் சைவ, வைணவ மடங்களாக மாற்றம் பெற்றன. இதற்குப் பிறகுதான் கோவிலுக்கென்றே தம்மை ஒப்புவித்துக் கொண்ட ஆடல் மகளிர், ‘தேவர் அடியார்கள்’ என்ற பெயரில் கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் இடம் பெற்றனர் (மதிகெட்டான் நாடகம்:பக்.18). பிற்காலச் சோழர்கள் காலத்திலும் இவை தொடர்ந்து நிகழ்ந்தன. இக்காலத்தில் நாடகத்தை விடவும் நாட்டியமே முதன்மை பெற்றது. அதனால் இசையும், பாடலும் போற்றப் பட்டன.

இராஜராஜ சோழன் காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலில் நானூருக்கும் மேற்பட்ட தேவர் அடியார்கள் நாட்டியமாடிய செய்திகள் கிடைக்கின்றன. முதலாம் இராஜேந்திர சோழனின் காதலியாக ‘பரவை நங்கை’ என்ற தேவர் அடியார் இருந்திருக்கிறார். சமயக்குரவர்களில் ஒருவரான சுந்தரரின் மனைவி ‘பரவை நாச்சியாரும்’ தேவர் அடியார் குடியில் வந்தவர் தான். தேவரடியார்கள் தங்களின் கலைத்திறனால் அரசாங்க விருதினையும், பரிசில்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர். இது பதினேழாம் நூற்றாண்டு வரையில் நீடித்திருந்தது (ரகுநாத நாயக்கர் காலக் கல்வெட்டு - கி.பி.1614 ஆம் ஆண்டு - மதிகெட்டான்:32). அதற்குப் பிறகு தெலுங்கிசையும், தெலுங்கு நாட்டிய மகளிரின் நிகழ்ச்சிகளும் அரசாங்க மதிப்பைப் பெற்றன. விஜயநகர மன்னர் ஆட்சிக் காலத்திலும், நாயக்கர்கள் ஆட்சியிலும் தெலுங்கு வகைத் தேவரடியார்கள் தமிழகத்தில் பெருகிய பின் அவர்களைச் சமூகம் கொண்டாடியும்,

ஒதுக்கியும் வைக்கும் நிலை ஏற்பட்டது. அவர்கள் இழி சொற்களால் ஏசப்பட்டனர். தேவரடியார்களைப் பழிப்பதற்கென்றே உருவானவை தான் நொண்டி நாடகங்கள் (மதிகெட்டான்:33). நொண்டி நாடகங்களை மக்கள் விரும்பிப் பார்த்துக் களித்து நாட்டிய மங்கையரை வேசியர்கள் என்று பழித்த போதிலும் சரி, அவர்கள் பொது வேசியராக மாறிப் போன சூழலிலும் சரி, அவர்கள் நாட்டியத்தை மறந்தாரில்லை.

பொதுவாகத் தேவர் அடியார்களுக்குக் கற்பு வற்புறுத்தப்படவில்லை என்பது ஒரு சமூகச் செய்தி. அரண்மனை ஆடலரசிகளாக அவர்கள் வாழ்ந்த போதும், பிற்காலங்களில் கலையை தெய்வீகத்தோடு இணைத்துக் கூறி, கலை வளர்க்கக் கோயில்களுக்கு அனுப்பப் பட்டும், வறுமையால் நேர்ந்து விடப்பட்டும் ஆன சூழலில் பார்ப்பனர்களிடம் கற்பைப் பறி கொடுத்த போதும் அவர்களின் கற்பைப் பற்றிச் சமூகம் கவலைப்படவில்லை. இதற்காகவே அவர்கள் தெய்வீகத்தோடு வலிந்து தொடர்பு படுத்தப்பட்டு அதற்கான இலக்கியங்களும் உருவாகின. இப்படிப்பட்ட தொடர்பினால் பிற சமூகத்தவர்களுக்கும், தேவரடியார்களுக்கும் ஏற்பட்ட அவப்பெயர்கள், இதற்கெல்லாம் காரணமாக அமைந்த பார்ப்பனர்களுக்கு எந்தக் காலத்திலும் ஏற்படவில்லை என்பதுதான் இந்தியச் சமயங்களின் தனித்தன்மை. அதே நேரம், தேவரடியார்கள் கற்புடன் நோக்கப்பட்ட காலமும் இருந்தது என்பதைப் புதுக்கோட்டை வட்டம், மலையடிப்பட்டி, வாகீசுவரர் கோயிலில் உள்ள கி. பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது (மதிகெட்டான்: 23). இருபதாம் நூற்றாண்டில் சென்னை மாகாணச் சட்டமன்றத்தில் நீதிக்கட்சி ஆட்சியின் (1923-1926) போதுதான் தேவதாசி ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. தற்போது உயர் குடிப் பெண்கள் தேவரடியார்களிடம் நாட்டிய வகைகளைப் பயின்று, அவற்றிற்குப் (பரதர், பதஞ்சலி புண்ணியத்தில்) பரதக்கலை என்று பெயரும் சூட்டி, நாட்டியக் கலாச்சாரத்தின் முன்னணியில் நிற்கின்றனர்.

பல்லவர் காலம் முடிவுற்றுப் பிற்காலச் சோழர்கள் காலம் வரையில், தமிழகத்தில் சமயச் சண்டைகள் பெருகி இருந்தன. பொதுவாக, சமணர்கள் என்ற பெயரில் வலம் வந்த சைனர், பௌத்தர், ஆசிவகர் ஆகியோர்களுக்குள்ளும் உட் சண்டைகள் மிகுந்திருந்தன. ஒவ்வொரு பிரிவினரும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டும், இன்னொரு பிரிவினரை ‘அறிவிலிகள்’ (மதிகெட்டான்) என்று வசைபாடியும் வந்தனர். முதலாம் மகேந்திரவர்மன் சமண சமயத்தில் இருந்தபோது, “மத்த விலாசப் பிரகடனம்” என்னும் ஒரு நையாண்டி நாடகத்தை எழுதியிருக்கிறார். இது பௌத்தர்களைக் கடுமையாக ஏளனம் செய்யும் வகையில் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளது. சைவ, வைணவச் சண்டைகள் மிகுந்திருந்த அந்தக் காலத்திலும் இன்னொரு பிரிவினரை அறிவிலிகள் (மதிகெட்டான்) என்று அழைப்பதே வழக்கத்திலிருந்தது. சமயக் குரவர்களில் ஒருவரான ஞானசம்பந்தரும் அடுத்த பிரிவினரைத் தாக்க அறிவிலிகள் என்றே தனது பாடல்களில் பயன்படுத்துகிறார் (மதிகெட்டான்:10). அதற்கு மேலும் சென்று சமண சமயத்தவரை மிக அதிகமான வசைச் சொற்களாலும் பாடி இருக்கிறார்.

கி. பி. 15,16,17 ஆம் நூற்றாண்டுகளில் நாடகங்கள், நாட்டியம், இசை நிகழ்ச்சிகள் எல்லாம் பொது மக்களின் ஆதரவுடன் சிற்றிலக்கியங்களாகப் பெருகி வளர்ந்தன. நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தைச் சிற்றிலக்கியங்களின் காலம் என்றும் கூறுவர். சிற்றிலக்கியங்கள் நூற்றுக்கணக்கில் பெருகினாலும், பொதுவாகச் சிற்றிலக்கியங்களை 96 வகையாகவும், குறிப்பாக ஆற்றுப்படை, அந்தாதி, உலா, பரணி, கலம்பகம், பதிகம், சதகம், தூது, மடல், கோவை, மாலை, பிள்ளைத்தமிழ், பள்ளு, குறவஞ்சி ஆகிய பதினான்கு வகைச் சிற்றிலக்கியங்களைச் சிறப்பு வாய்ந்தவையாகவும் குறிப்பிடுவர்.

இவற்றுள் பள்ளு, குறவஞ்சி ஆகியவை மகளிர்க்குச் சிறப்பிடம் தந்து உருவாக்கப்பட்டவை. சிங்கன் தன் மனைவி சிங்கி மீது கொண்ட காதலால் அவளை ஐயுறுவதான கதை அமைப்புடன் உருவாவது குறவஞ்சி நாடகங்களின் பொது இயல்பு. பள்ளு நாடகங்கள் தலப்பெருமையைக் கூறும். ஊடே சைவ, வைணவப் போராட்டங்களின் தன்மையை நையாண்டியுடன் குறிப்பிடுகின்றன. நொண்டி நாடகங்கள் ஆடவர்க்குச் சிறப்பிடம் தருபவை. நொண்டி நாடகம் என்பது தாசியின் மோகத்தால் களவுத் தொழில் மேற்கொண்டு, அதில் பிடிபடும் போது மாறுகை, மாறுகால் வாங்கப்பட்ட ஓர் ஆடவன், தன் வரலாறைத் தானே நடித்துக் காட்டுவதாகும். இது ஒற்றைக்கால் நாடகம் என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வகை நாடகங்கள் பொதுமக்கள் பார்த்து இன்புறும் வண்ணம் எளிய நடையும், நையாண்டியும் கொண்டு எழுதப்பட்டதுடன், பார்வையாளர்களுக்கு அறவொழுக்கத்தையும் அறிவுறுத்தின. நொண்டி நாடகங்கள் தாசிகளைப் பழித்துக் கூறினாலும் முடிவில் ஒருவனுக்கு ஒருத்தி என்று கொள்கையை நிலை நாட்டுவதாக முடிகின்றன.

மதிகெட்டான் என்னும் நொண்டி நாடகம் சிந்துப் பாவினத்தை அதிகமாகப் பெற்றிருக்கிறது. சிந்து என்பது தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். சிந்து வகைப்பாக்கள் இசைத்தற்கென்றே உருவாக்கப்பட்டமையாகும். சிந்துப் பாடல்களில் ஒரு வகைதான் நொண்டிச் சிந்துப் பாடல்களும். இந்நாடகத்தில் விருத்தம், அகவலைத் தொடர்ந்து இன்னிசை என்ற தலைப்பில் தாழிசை, துறை விருத்தங்கள் இடம் பெற்றுள்ளன. சில முக்கியமான திருப்பங்களைக் கூறும் போது வெண்பா, அகவற்பா, கலித்துறை ஆகியவற்றில் பாடல்கள் உள்ளன. தேவையான சில இடங்களில் வசனங்களும் பயின்று வந்துள்ளன. நாடக இசைக்குத் தகுந்தாற் போல் தரு அல்லது தருக்கம் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இவை பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற விதங்களில் அமைந்துள்ளன.

இத்தனைப் பீடிகையும் மதிகெட்டான் என்னும் ஓர் நொண்டி நாடகத்திற்காகத்தான். இந்த நாடகம், கிபி 17ஆம் நூற்றாண்டில் தொண்டை நாட்டில் கூவைப் புலவர் என்பவரால் இயற்றப்பட்டது. இதன் ஓலைச்சுவடியைப் பழைய தருமபுரியில் வாழ்ந்த அமரர் காவேரிப் பூசாரி என்பவரிடமிருந்து, தொல்லியல் அலுவலராகப் பணி புரிந்த திரு ச. கிருஷ்ணமூர்த்தி என்பவர் பெற்று, அதை 2001 ஆம் ஆண்டில் நூலாக்கம் செய்திருக்கிறார். அதில் நாடகம் குறித்த ஆய்வுரையையும், சொற்பொருள் அகராதியையும் இணைத்திருக்கிறார். “இது நவீன நாடக அமைப்பைக் கொண்டது.

மொத்தம் 95 பாடல்கள் இதில் உள்ளன. இதில் நடிக்க நான்கு பாத்திரங்களும் இசைக் குழுவினரும் தேவை'' என்றும் ஆய்வுரையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதிகெட்டான் நாடகக் கதை இதுதான். அயோத்தியில் அரசாண்டிருந்த குந்தி மகாராசன் எனும் மன்னன், கோயில்களைத் தரிசிக்க நாட்டு வலம் வருகின்றான். திருவத்தியூரில் வல்லி என்ற தாசியின் அழகில் மயங்குகிறான். மந்திரி கூறிய அறிவுரையைப் பொருட்படுத்தாது தாசியே வாழ்க்கை என்று காலம் கடத்துகிறான். பொருள் எல்லாமும் இழந்த நிலையில், தாசியின் தாயினால் விரட்டப்படுகிறான். அதனால் ஏற்பட்ட விரக்தியில் தன்னை 'மதிகெட்டான்' என்று கூறிக் கொள்கிறான். மந்திரி அரசனைத் தேடி வந்து, அவன் தோற்றத்தைக் கண்டு வருந்தி, தன்னுடன் வருமாறு அழைக்கிறான். மதிகெட்டானோ வல்லியை விட்டு உயிர் வாழ முடியாது என்று கூறி அவளை அழைத்து வர மந்திரியிடம் மன்றாடுகிறான். மன்னன் நிலை கண்டு மந்திரியும் தாசியைத் தேடிக் கண்டுபிடித்து, அவளிடம் பேசி, மன்னன் முன் அழைத்து வருகிறான். அவன் நிலை கண்ட தாசியோ பணம் இன்றி மதிகெட்டானுடன் கூட மறுக்கிறாள். இனி அவளுடன் சேர்வதற்கு வழியில்லை என்று திட்டவட்டமாக அறிந்து கொள்ளும் மதிகெட்டான் என்கிற மன்னன் இறுதியாக, ''தாசியை நம்பி மோசம் போக வேண்டாம்'' என்று அறிவுரை வழங்கி விட்டுப் பக்தி வழியில் திருவண்ணாமலை செல்கிறான்.

தீயவழியில் செல்லாதே என்னும் பொதுவான நீதி சொல்லும் நொண்டி நாடகக் கட்டமைப்பிலிருந்து விலகாத மதிகெட்டான் நாடகம், நாடகப் பயனாக பல வரலாற்றுத் தகவல்களை அள்ளித் தருகிறது. பதினேழாம் நூற்றாண்டில் கூவைப் புலவர் என்பவரால் எழுதப்பட்டதாதலால் அன்றைய காலத் தகவல்களின் கிடங்காக இந்நாடகம் உள்ளது. கோயில் தரிசனங்களுக்காக மன்னன் நாடு வலம் வருவதால் புகழ்பெற்றதும், பெரியதுமான கோயில் நகரங்கள் இதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அயோத்தி தொடங்கி மரக்காணம், மதுராந்தகம், திருக்காளத்தி, காஞ்சிபுரம், ஆற்காடு, திருப்பதி, சித்தூர், போளூர் என்று கோயில் நகரங்கள் குறித்த வரலாறும், பண்பாட்டுச் செய்திகளும் நிரம்பி உள்ளன. கதைக் களத்தின் இறுதிப் பகுதியாக இடம் பெறும் திருப்போரூர் பற்றியும், தாசி வல்லியின் சொந்த ஊரான திருவத்தியூர் பற்றியும், நாடக ஆசிரியரின் சொந்த ஊரான கூவம் பற்றியும், நாடகத்தில் குறிப்பிடப்படும் திருக்கழுக்குன்றம், தொண்டை மண்டலம், சென்னப் பட்டினம் பற்றியும் இந்நாடகம் வழி பல வரலாற்றுச் செய்திகளை அறிய முடிகிறது.

விஜயநகர மன்னர்களின் ஆட்சி, அதைத் தொடர்ந்து நடந்த நாயக்க மன்னர்களின் ஆட்சி ஆகியவற்றின் சர்வாதிகாரப் போக்கும், பொதுமக்களைத் தங்களுடன் அண்ட விடாத் தன்மையும், உள்ளூர்க் கலைஞர்களின் கீழ்த்தர நிலையும், அதே நேரம் கலை வளர்த்தலில் ஆட்சியர் காட்டிய ஈடுபாடும், அதில் தங்கள் பகுதி மக்களை முதன்மைப்படுத்தியதும், வந்தேறிகளின் வளமான பொருளாதாரப் பின்னணிகளும் கதை மாந்தர்கள் வழியாக அறியத்தரும் நூலிழைகளாக நெய்யப்பட்டுள்ளன. உள்ளூர் நாட்டியக்காரிகளையும், வளமான வந்தேறித் தேவர் அடியார்களையும் புரந்த தொண்டை மண்டலச் செல்வந்தர்களால் தமிழ் மொழியும், தமிழிசையும், தமிழ்க்

கலைகளும் இரண்டாம் நிலையானதாக ஆக்கப்பட்டதும், இவற்றை விரும்புபவர்கள் (பூர்வகுடிகள்) உள்ளூர் அடித்தட்டு மக்களாகவே தங்களுக்குள் கூடிக் களித்து மகிழ்ந்து கொள்வதுமான நிலைகளே அதிகாரத் தன்மையால் விரும்பப் பட்டவையாக இருந்ததைப் புரிந்து கொள்ளவும் முடிகிறது.

நாட்டு வலம் வந்த மன்னன் ஆடல் வல்லியிடம் மயங்கியமைக்கு அவள் அழகின் மீதான மையலை விடவும், அவள் வைத்த வசிய மருந்தே காரணம் என்று மேட்டிமைத் தன்மையுள்ள மன்னனை அல்லது ஆண்களைக் காப்பாற்றும் நிலையை நாடகாசிரியர் வலிந்து கூறும் இடத்தில், அவ்வரிய வசிய மருந்து தயாரிக்கப் பயன்பட்ட மூலிகைகளின் பட்டியல், கடைச் சரக்குகளின் பட்டியல், நறுமண எண்ணைகள், பிற சாறுகளின் பட்டியல், அதைப் பயன்படுத்தும் பக்குவ முறைகளின் பட்டியல், மாந்திரீக வகைகளின் பட்டியல் என்று நீண்ட வரிசைகளை அடுக்கும் முறைகளால் நாடக ஆசிரியர் தன் புலமைத் திறமையை அழுத்தமாக வெளிப்படுத்தி உள்ளார்.

இயற்றப்பட்ட காலத்தில் இருந்து மதிகெட்டான் நாடகம் ஓலைச்சுவடியாகக் கிடைத்த தருமபுரியில் மட்டும் பொதுமக்களுக்காக நிகழ்த்தப் பெற்ற செய்தியை, அந்த ஓலைச்சுவடியைப் பதிப்பித்தவர் தன் ஆய்வுரையில் கூறுகிறார். இந்த நாடகம் நடிக்கப்பட்டு இருக்குமானால், இதன் கதை நாயகனான குந்திராசன் பாத்திரத்தில் தோன்றும் நடிகர் அவருடைய பாத்திரத்திற்கேற்ப எப்படி ஏற்ற இறக்கங்களோடு பாடி, நடித்துத் தன் திறமையால் பார்வையாளர்களைக் கவர்ந்திருப்பார் என்றும், அந்த இசைக் குழுவினர் அவருக்கு எந்த அளவுக்குத் தாளம் போட்டு இருப்பார்கள் என்பதெல்லாம் தற்போது கற்பனையில் காணவே பிரமிப்பைத் தருகிறது.

கூடுதலாக ஒரு செய்தி. மதிகெட்டான் என்ற சொற்பதம் அறிவு மயக்கம் என்ற பொருளில் சங்க காலம் தொட்டுத் தற்காலம் வரையில் தொடர்ந்து மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கொடைக்கானலில் இருந்து கேரளா போகும் வழியில் ''மதிகெட்டான் சோலை'' என்ற ஒரு பகுதியைக் குறிப்பிடலாம். அந்தப் பகுதியில் யாரும் வசிப்பதில்லை. பெரிய மரங்கள் அடர்ந்த காடுகளே உள்ளன. அரிய மூலிகை வகைகளும் அங்கு உண்டு. அந்தக் காட்டுக்குள் சென்றவர்கள் அங்குள்ள மூலிகைகளைத் தின்றால் மதி திரிந்து (அறிவு மயங்கி) எங்காவது சென்று விடுவார்கள் என்ற நிகழ்வுகளின் அடிப்படையில், காட்டுப் பகுதியான அச்சோலைக்கு, அப்பெயர் வந்ததாக அப்பகுதியின் வனத்துறையினர் தெரிவிக்கின்றனர் (மதிகெட்டான் சோலை, யூட்யூப்).

எல்லாம் தலையான பெருமாள் – மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் பிறந்த நாள் – சித்திரை, மூலம்

– மாரிராஜன்,
கோயில் & கல்வெட்டு ஆய்வாளர்

எல்லாருக்கும் தலையான ஒரு பாண்டிய அரசன். முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் திரு அவதாரம் செய்தருளின நாள் சித்திரை மாதத்து மூல நட்சத்திரம். வரலாற்று உலகில் உச்சம் தொட்ட பாண்டியன். பார்புகழும் பாண்டியர் பெருமையை மீட்டெடுத்த பாண்டியன்.

தமிழகத்தில் சோழர்களையும் சேரர்களையும் வென்று வடக்கே நெல்லூர் முதல் தெற்கே குமரி வரை கைப்பற்றி

வடவேங்கடம் முதல் தென்குமரி வரை தமிழக நிலப்பரப்பு முழுவதையும் பாண்டியரின் ராஜ்யமாக கைக்கொண்டு செங்கோல் செலுத்தி ...

" எம் மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியத் தேவர்"

என்னும் பட்டம் பெற்ற பாண்டியன் பிறந்தநாள். சுந்தரபாண்டியன் கி.பி.1251 இல் பாண்டிய வேந்தனாக முடிசூட்டப்பட்டார்.

சேரநாட்டை அரசாண்ட வீர ரவி உதய மார்த்தாண்டன் என்பவரை வீழ்த்தி கேரளாவை கைப்பற்றினார். சோழநாட்டின் அரசனான மூன்றாம் இராஜேந்திரனையும் வென்று சோழத்தை தனதாக்கினார்.

சிதம்பரம் கல்வெட்டு இவ்வெற்றியை இவ்வாறு கூறும்..

" காரேற்றத் தண்டலை காவிரி நாடனை கானுலவுந் தேரேற்றி விட்ட செழுந்தமிழ் தென்னவன் "

சோழநாட்டில் முகாமிட்டிருந்த போசாளர்களின் ஆதிக்கத்தை முற்றிலும் நீக்கி பாண்டியத்தை நிலை நிறுத்திய தென்னவன். வானர்களின் மகதநாடு கொங்கு மன்னர்களின் கொங்குநாடு இவற்றையும் கைப்பற்றிய பாண்டியன்.

இலங்கையை வென்றதால் சுந்தரபாண்டியனுக்கு இலங்கையை வென்ற இரண்டாம் ராமன் என்னும் பெயரும் உண்டு. விஜயகண்ட கோபாலனை கொன்று காஞ்சியை

கைப்பற்றி பிறகு வடக்கே சென்று காகதீய மன்னனான கணபதியை வென்று நெல்லூரை கைப்பற்றி அங்கே வீராபிசேகம் செய்தார்.

" வாக்கியல் செந்தமிழ் சுந்தரபாண்டியன் வாளமரில் வீக்கிய வன்கழற் கண்ட கோபாலனை விண்ணுலகிற் போக்கியபின் "

மொத்த தமிழ்நிலத்தையும் இலங்கையையும் கைகொண்டு எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியத்தேவர் என்றும் செந்தமிழ் சுந்தரபாண்டியன் என்றும், செழுந்தமிழ் தென்னவன் என்றும் தமிழோடு இவரது பெயர் கல்வெட்டில் காணப்படுகிறது.

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக இவர் பெற்ற ஒரு சிறப்பு பெயர்.

"எல்லா தலையான பெருமாள் "

சேந்தமங்கலம் வானிலை கண்ட ஈஸ்வரர் கோவில் கல்வெட்டில் இப்பெயரைக் காணலாம். இப்பெயரில் "எல்லாம் தலையான் " என்ற எழுத்துப்பொறிப்பில் நாணயங்களையும் வெளியிட்டார்.

No. 358.

(*A.R. No.* 80 *of* 1903).

IN THE SAME PLACE.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] அ[ரு]ளிச்செயல் [||*] செ[ச]ந்தமங்கலத்து உடையார் வாணிலைகண்ட
விரிஞ்ஞூர முடைய நாயனார் கொயில் தானத்தா[ற்]க்கு இந்நாயனார்க்கு-
2 த் தைம்மாத[ம்] எழுந்தருளக் கட்டின எல்லாந்தலையானபொருமாள் திருநாளைக்கும்
ஐய்யனங்கக்காறன்சந்திக்கும் திருப்பணிக்கும் திருநுந்தாவிள-
3 க்கு ஐஞ்சுக்கும் பெருமாள் குடுத்தருளின திருமுகப்படி பொன்னுக்கு உடலாக இறை-
யானரையூர்ப்பற்றில் மாண்டிபுரப்பறறில் கொ[ம்]மை-
4 [ப]யூர் நான்கெல்லைக்கும் உட்ப்பட்ட நன்சை புன்சை புறவடை கமுகு மாவடை
மரவடை குளவடை தறியிறை தட்டார்ப்-
5 [பாட்டம் செக்குக்க]டமை பட்டிதெண்டம் குற்றதெண்டம் உள்ளிட்ட அனைத்தாயங்-
களும் உட்ப்பட பதினெழ[ா]வது தைம்மாதம்முதல்
6 . . . . . [யாகத்] தந்தொம்[|*] இப்படிக்கு இவ்வொலை பி[டி]பாடாக கொண்டு
வஂநராஜித்தவரை செல்வதாக இவ்[வூர்] நான்கெல்லையும் திரு-
7 . . . . இக்கொயிலிலெ கல்லிலும் செம்பிலும் வெட்டி[க்*]கொள்க வ
விஜிதஹ|| இவை [கெ]ட்டுருடையா னெழுத்து வ

சிதம்பரம் மற்றும் ஸ்ரீரங்கம்கோவிலுக்கு பாண்டியன் அளித்த அறக்கொடைகள் ஏராளம். பொன்னால் வேய்ந்து பொன் வேய்ந்த மகிபதி என்று பெயர் பெற்றார். சிதம்பரம் மேலைக் கோபுரத்தை எடுத்தவரும் இவரே. சுந்தரபாண்டியன் கோபுரம் என்றே அழைக்கப்படுகிறது.

மதுரை மீனாட்சி அம்மன் கீழைக்கோபுரம் எடுத்தவரும் இவரே. அவனி வேந்தராமன் திருக்கோபுரம் என்பது கல்வெட்டுப்பெயர்.

ஸ்ரீரங்கம் கோவிலுக்கு இவர் அளித்த படகு துலாபாரம் உலகளவில் சிறப்பான வரலாற்று நிகழ்வு.

கடிகைகளில் தமிழ் பாடம் கற்பிக்க "முத்தமிழ் ஆசிரியரான தமிழ் கரைகண்ட சாத்தனார் " என்பவரை ஆசிரியராக நியமித்து அக்கடிகைக்கு பொய்யாமொழி மங்கலம் என்னும் ஊரை தானமாக அளித்த பாண்டியன்.

சிதம்பரம் கோவில் சரசுவதி பண்டாரத்திலுள்ள ஏட்டுச்சுவடிகளை மறுபிரதி எடுக்க 20 பண்டிதர்களை நியமித்து அவர்களுக்கு ஊதியமாக நிலம் வழங்கிய பாண்டியன்.

ஆலயப்பணியும் அறப்பணியும் ஒருங்கே ஆற்றி ஒட்டுமொத்த தமிழகத்தையும் ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்த இப்பாண்டியன் பிறந்த நாள் சித்திரை மூல நட்சத்திரம்.

திருவானைக்கா கோவில் கல்வெட்டு:

இவர் பிறந்த சித்திரை மாதத்து மூல நட்சத்திர நாள் " சேரனை வென்ற திருநாள் " என்ற பெயரில் ஒரு திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. இவர் பிறந்த நாளுக்கான வாழ்த்துப்பா ஒன்றை திருப்புட்குழி திருமால் கோவில் கல்வெட்டு இவ்வாறு பதிவு செய்கிறது..

"வாழ்க கோவில் பொன்வேய்ந்த மகிபதி.
வாழ்க செந்தமிழ் மாலை தெரிந்தவன்.
வாழ்க மண்டலம் யாவையுங் கொண்டவன்.
வாழ்க சுந்தர மன்னவன் தென்னவனே.."

செழுந்தமிழ் தென்னவன், செந்தமிழ் பாண்டியன் என்று என்றுமுள தமிழோடு தன்னை அடையாளப்படுத்தும் எல்லாருக்கும் தலையான சுந்தர பாண்டியன்.

நன்றி: பேராசிரியர் க.சங்கரநாரயணன்.

புகைப்பட உதவி:

திரு.பொன் கார்த்திகேயன், திரு. சென்னை மணிகண்டன், திரு.பாபு மனோ.

Madurai And Athens

– **Dr. Mrs. C. Rajeswari**
Translator, Publisher, Madurai

Athens, oldest city in Greece, birthplace of western civilisation, a forified city, centre for academics and arts, was ruled by Athena, a female deity. Madurai the oldest city of human civilisation, protected with forts and moats, centre for the oldest language Tamil language and literature and ruled by Goddess Meenakshi is called as Athens of the East. This article attempts to explore the similarities between these two cities.

Same old Madurai and Athens

There are some similarities and differences in the East and West cultures about Athens and Madurai. Madurai being the oldest city of the earth is highly appreciated for its antiquity and cultural heritage. Madurai is known as the Athens of East. Athens is a famous city state of Greece belonging to the classical age 479 to 323 BCE in par with our Sangam age. Madurai described in Madurai Kanchi shows both Athens and Madurai have common features like 'they never sleep'. Athens never sleeps is a common notion in the West. Madurai is a city that functions 24x7.

Acropolis and Mega polis

Athens is an Acropolis, a city state, protected by a fort. There is other three cities like Athens in Greece whereas Madurai, a megapolis protected by a fort, is the headquarters of Pandiyan dynasty. Madurai is a megapolis, a large city of civilization and culture and many seaports and other important cities were around it in the kingdom of Pandiyas The cities around Madurai are described in this text as the pendant of a gold chain with many gems and Madurai be the centre gem of it. Citadel of Athens was admirable and this Acropolis was built built 150m above the sea level. In Madurai the fort and moats are described vividly.

Kings from God - God to be the King

In the West, kings claim a divinity right that they are descendants of lord Almighty but here in Madurai LordShiva came down fro north to south and became a Pandiya king. He waged war on the queen, defeated her, crowned as the Pandya king and entitled as Sundra

Pandyan. His son and successor were Ukra pandyan. God came here to be the king of Madurai is a unique feature to be adored.

Meenakshi and Athena

Madurai was ruled by Queen Meenakshi preceded by her mother queen Kanchanamala whose temple is located near Meenakshi Amman Temple. It is a historical record that Meenakshi was the last princess of matriarchy in Tamilnadu. She is the native deity of Malayalis in Kerala as they follow matriarchy till date. Meenakshi is the royal deity of king Rajasekaran, father of Swami Ayyappa. So Ayyappa devotees also visit Meenakshi amman temple.

Similarly, we find Athena to be the protector Goddess of Athens. She is also named as Aethana Pallas, after her opponent, giant Pallas, who fought against her. The nomenclature Meenakshi Sundareswarar, shows Sundareswarar added to his opponent's name and also his spouse name to his name. It is here in the East in Hindu Pantheon male Gods are called along with their spouses name like Lakshmi Narayana, Valli Nayagam, Umapathy etc.

Academies in both cities

In the Greek classical period Athens was the centre for the arts, learning and philosophy. An Academy was there for developing art and culture. It was the birthplace of Socrates. Plato, Pericles, Aristotle are some of the prominent scholars in Athens. Madurai established Tamil Academies before and after deluges, where many Tamil poets under the headship of Iraiyanaar, Agathiyar and Mangudi Maruthanar concentrated on coMposing new Tamil literary texts. Madurai is still notable for its Language, Art and Culture.

Birthplace of Civilisation

Athens is praised as the birthplace of Western Civilization and Madurai the Athens of the East takes the same pride and lead being the forerunner of Eastern civilization.

Totem trees

Olive tree is the symbol of Athens and Kadamba tree is the totem of Madurai. Main story of Thiruvilaiyadal puranam is that Lord Indra found the Sivalingam under the shade of Kadamba tree and worshiped Him. Madurai is called Kadamba Vanam (a Grove of Kadamba trees).

Thus, Madurai and Athens enjoy a rich heritage status in language and culture.

சாதனைத் துறவி வீரமாமுனிவர்

பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்.

உலகெலாம் போற்றும் உயர் தனிச் செம்மொழியாம் தமிழுக்குக் காலத்தால் அழியாத அமரத்துவமான பங்களிப்புகளை நல்கியோரும் அப்பங்களிப்புகளால் அந்த உன்னத மொழியை உலகின் செம்மொழிகளில் முதன்மையானதாகவும் மூத்ததாகவும் வெளிச்சம்போட்டுக் காட்டியோருமான அயல்நாடுகளைச் சேர்ந்த அருள்தொண்டர்களின் வாழ்வும் பணிகளும் பற்றிய தொடர் இது என்பதை அனைவரும் அறிவோம். இத்தகு அருங்கொடைகளைத் தமிழுக்களித்த பெருமக்களுள் ஒரு சிலரே தமிழ் கூறு நல்லுலகத்து மக்களால் பெரிதும் அறியப்பட்டவர்கள். அவ்வாறு அறியப்படாதவர்கள் பலர் என்பதே உண்மை. அவ்வாறு அறியப்பட்ட அருளாளர்களைப் பற்றியும் ஓரளவே அறிவுலகில் அறியப்பட்டுள்ளது. பெரும்பாலான உண்மை வரலாறுகள் உலக மக்களுக்கு உரைக்கப்படாததால்தான், அவர்களைப் பற்றிய பொய்யும் புனைவும் திரிபுமான தகவல்கள் நஞ்சுள்ளம் கொண்ட சிலரால் பரப்பப்படும் போது பாமர மக்கள் அவற்றை நம்பிவிடும் அவலமும் நேர்ந்துவிடுகிறது. அவ்வகையில், தமிழ் மக்களால் ஓரளவுதான் அறியப்பட்ட - பிரமிக்கத்தக்க வைக்கும் உயர்பெரும் சாதனையாளரும் தூய நெறித் துறவியுமான வீரமாமுனிவர் என விதந்து போற்றப்படும் பெஸ்கி அடிகளாரது பங்களிப்புகள் பற்றிய ஒரு தொகுப்பாக இக்கட்டுரை அமையும்.

வீரத்துறவியும் சாதனைத் துறவியும்

சமய உலகில் நம் பாரத நாட்டில் பெரிதும் போற்றப்படுபவர் வீரத்துறவி என அழைக்கப்படும் சுவாமி விவேகானந்தர் ஆவார். ஒருவகையில், கிறித்து நெறித் துறவியான வீரமாமுனிவரையும் அவரோடு ஒப்பிடலாம். முன்னவரை வீரத்துறவி என்று போற்றினால், இவரை சாதனைத்துறவி என்று சாற்றலாம். முன்னவர் இங்கிருந்து அமெரிக்கத் திருநாட்டின் சிக்காகோ மாநகர் சென்று இந்து சமய

மாண்பை உணர்த்தி, ஈடிலாப் புகழ்பெற்றவர். இவர் இத்தாலியிலிருந்து இங்கு ஏசு நெறிபரப்ப வந்து இயேசு நெறியோடு இனிய தமிழையும் தம் பன்முகப் படைப்புகளாலும் பணிகளாலும் உலக மொழிகளின் உச்சியில் நிறுத்திய மெச்சுதற்குரிய மேன்மையாளர். தமிழ் இலக்கியப் பரப்பிலும் சரி, தமிழ்ச் சமய பரப்பிலும் சரி, இவரைப்போல், பன்முக ஆற்றல் கொண்டு பல் திறப் படைப்புகள், பல்வகை பணிகள் தந்தோர்- செய்தோர் எவரும் இல்லை எனத் துணிந்துரைக்கலாம். இவர் தொடாத துறையுமில்லை. தொட்டால் துலங்காத நிலையுமில்லை. 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி என்ற பாரதியின் 'பா' வரிகளுக்குச் சிறந்த சான்றாய் திகழ்ந்ததனால் தான், இவரைச் சாதனைத் துறவி எனப் போற்றுதல் பொருந்தும். இக்கூற்றுக்கான சில அடிப்படையான ஆதாரங்களையும் அரிய செய்திகளையும் சுருங்கத் தருவதும் இக்கட்டுரையின் ஒரு முக்கிய நோக்கமாகும்.

வீரமாமுனிவரின் இளமை வாழ்வும் இந்திய வருகையும்

இன்னொரு சாதனைகள் குவித்த அருளாளரான ராபர்ட் டி நொபிலியைப் போலவே, இவரும் இத்தாலி நாட்டிலிருந்து இனிய தமிழ் மண்ணுக்கு வந்தவரே. இத்தாலிய நாட்டில் உள்ள வெனிஸ் மாநிலத்தில் காஸ்திவியோனே தெல்லோஸ்டிவியரே எனும் ஊரில் 1680ஆம் ஆண்டு நவம்பர் எட்டாம் நாள் பிறந்தவர். ஜோசப் கான்ஸ்டன்டைன் பெஸ்கி என்பது இவரது இயற்பெயர். புகழ்மிக்க வீரர்கள் குடும்பத்தில் பிறந்தவர், கல்லூரிப் படிப்பை உரோமை நகரில் முடித்துவிட்டு, துறவற கல்விக்காகத் தமது 18ஆவது வயதில் இயேசு சபையில் சேர்ந்தார். பின்னர் மூன்றாண்டுகள் தத்துவ இயலும் அடுத்த நான்காண்டுகள் இறையியலும் கற்று, இயேசு சபைக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

பின்னர், அயலக அருட்பணியில் ஆர்வம் மிக இருந்ததால், 1710 ஆம் ஆண்டு தமிழகத்தில் உள்ள மதுரைப் பணித்தளத்தில் திருப்பணியாற்ற, போர்ச்சுக்கல் நாட்டு லிஸ்பன் வழியாக, கோவா வந்தடைந்தார். 1711 வாக்கில், மேற்கு கடற்கரையில் உள்ள கோவாவிலும் சிறிது காலம் இறையியல் கல்லூரியில் தங்கிப் படித்தபின், பாண்டிய நாடாகிய மதுரை வந்தடைந்தார் என்று இவரது வரலாறு கூறுகிறது. மதுரை மாவட்டத்தை மையமாகக் கொண்டு அவர்தம் பணியைத் தொடங்கினாலும், அக்காலச் சமூகச் சூழல் காரணமாக அவர் காமநாயக்கன்பட்டி, கோனான் குப்பம், கயத்தாறு, தஞ்சாவூர், அரியலூர், மறவ நாடு, வடுகப்பட்டி, திருக்காவலூர் என பல இடங்களிலும் சமயப் பணியும் சமுதாயப் பணியும் ஆற்றியுள்ளமை பற்றி அறிய முடிகிறது.

முனிவரின் பன்மொழிப் புலமையும் பைந்தமிழ்ப் பயிற்சியும்

வீரமாமுனிவர் தமிழகம் வரும் முன்னரே பல மொழிகளை அறிந்தவர் ஆகவும் இங்கு வந்த பின்பு தாய்த்தமிழோடு வேறு பல மொழிகள் கற்றவராகவும் இருந்தது நம்மை வியக்க வைக்கிறது. இவருக்கு அவரது தாய் மொழியான இத்தாலியோடு, விவிலிய மொழிகளான எபிரேயம், கிரேக்கம், இலத்தீன் மற்றும் போர்த்துகீசியம்

ஆகிய மொழிகளில் பயிற்சியும், இந்தியா வந்தபின் கற்ற சமஸ்கிருதம், தெலுங்கு, இந்துஸ்தானி, பார்சி மொழிகளில் அறிவும் பெற்றதாகப் பலரும் குறிப்பிடுகின்றனர். பார்சியும் இந்துஸ்தானியும் கற்றதற்கான சான்றுகள் இல்லை என முனைவர் எஸ். இராசமாணிக்கம் கூறினாலும் திருச்சிராப்பள்ளியை ஆண்ட சந்தா சாகிபு எனும் நவாபுடன் நல்லுறவு பேணவே, இவர் மூன்றே மாதத்தில் இந்துஸ்தானி, பாரசீக மொழிகளைக் கற்றதாக, மயிலை சீனி வேங்கடசாமி உள்ளிட்ட பலர் எழுதுகின்றனர். இவரது கல்வி அறிவையும் மொழிப் புலமையையும் வியந்து இவருக்கு இஸ்மாத்தி சந்நியாசி என சந்தா சாகிப்பு பட்டமளித்து, இவருக்கு மானியமும் இனாமாக சில ஊர்களும் கொடுத்ததாக, வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. சந்தாசாகிப்பு அரசவையில் இவர் திவானாக (அமைச்சராக) நியமிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இதைவிட, முக்கியமாக, இவர் அபாரமான - அதிசயத்தக்க புலமையை வெளிப்படுத்திய இவரது தமிழ்ப் புலமையை பற்றி எவ்வளவோ பேசலாம். நான்கே ஆண்டுகளில் தமிழில் சிறந்த கவிதைகள் எழுதும் அளவு தமிழைக் கற்று தேர்ந்தார் முனிவர். அக்காலத்தில் மதுரையில் புகழ்பெற்றுத் திகழ்ந்த சுப்பிர தீபக் கவிராயர் என்பவர், முனிவருக்குத் தமிழ் பயிற்றியவர்களில் முக்கியமானவர் என்று கூறப்படுகிறது. வெறும் மொழி அறிவும் இலக்கியப் பயிற்சியும் மட்டுமன்றி, ஆழமான இலக்கணப் புலமையும் அவர் பெற்றுயர்ந்ததாக, அவருடன் பணிபுரிந்த பூர்ஜேஸ் அடிகளாரும் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய லியோபெஸ் என்பவரும் குறிப்பிடுகின்றனர். முனிவரது அரும்பெரும் சாதனைகளுக்கு எல்லாம் அவரது பன்மொழி அறிவும் பைந்தமிழ் புலமையுமே அடித்தளமாக அமைந்தன எனச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இத்தகு வியத்தகு சாதனைகள் புரிந்த சாதனைத் துறவியாரின் பன்முகப் பங்களிப்புகள் பற்றி பக்கம் பக்கமாக எழுதினாலும் அடங்காது. ஆகவே, அவரது சாதனை மிளிரும் பன்முகங்களில், பத்து முகங்களை மட்டும் இக்கட்டுரையில் பதின்முகங்களாக சுருக்கி உரைக்க விழைகிறேன். அவ்வகையில், அவருக்கு அவரது சாதனைகளைச் சுட்டும் வகையில், பத்து பட்டப் பெயர்களோடு இக்கட்டுரையைத் தொடர்வோம்.

1. இலக்கியப் படைப்பின் இமயம்

1. காவியக் கருத்தா

முனிவரின் பன்முகச் சாதனைகளில், சமய, மொழி எல்லைகளைக் கடந்து பலரும் சிறப்பாகப் பாராட்டுவது, அவரின் இலக்கியப் படைப்புகள் பற்றியே ஆகும். அவற்றுள் அவரது மணிமுடிப் படைப்பு, 'தேம்பாவணி' எனும் தீந்தமிழ்க் காப்பியம் ஆகும். அயல்நாட்டவர் இங்கு வந்து அருந்தமிழில் காப்பியம் எழுதியது ஓரிருவர் மட்டுமே ஆகும். அவருள் முன்னவர் வீரமாமுனிவர். இயேசுபிரானின் வளர்ப்புத் தந்தையான சூசையப்பரின் (வளனாரின்) வாழ்க்கைக் கதையை

முழுக்க முழுக்க தமிழ் மணம் சொட்ட, காவியமாக வடித்திருக்கிறார். தமிழ் மரபுக்கொப்ப 'உலகு' என்ற சொல்லோடு காப்பியத்தைத் தொடங்கியுள்ள ஆரம்ப பாடல் இது.

"சீரிய உலகுமூன்றும் செய்தளித் தழிப்ப வல்லாய்
நேரிய எதிரொப்பின்றி நீத்தவோர் கடவுள் தூய
வேரிய கமலபாதம் வினையறப் பணிந்துபோற்றி
ஆரியவளன்றன காதைஅறமுதல் விளங்கச் சொல்வோம்."

இக் காப்பியத்தைப் பாராட்டாத புலவரும் அறிஞரும் இல்லை எனலாம். இது சீவகசிந்தாமணிக் கிணையானது' என பூர்ணலிங்கம் பிள்ளை எனும் தமிழறிஞர் போற்றுகிறார். மகாமகா உபாத்தியாய உ.வே. சாமிநாதையர், மறைத்திரு. பெர்சிவல் அடிகளார் அருள்தந்தை தனிநாயகம் அடிகளார், ஜே.ஜி. சுந்தரம், சித்பவானந்த சுவாமிகள், ஜி.யூ. போப்பையர் முத்தான பல்வேறு சான்றோர்கள் மனம் நெகிழ்ந்து பாராட்டிய நூலிதுவாகும். 'தமிழின் தலைசிறந்த நான்கு காப்பியங்களில் இது ஒன்று' என இராபர்ட் காலடுவெல் அடிகளாரும், 'முனிவர், திருத்தக்கதேவர் கம்பர், இளங்கோ முதலிய புலவர்கள வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர்' என சாஸ்தாங்குட்டிப் பிள்ளை என்பாரும் வியந்து போற்றியுள்ளனர். இந்நூலைப் பாராட்டி, பல புலவர்கள் பாடிய பாடல்கள் 'தேம்பாவணிக் கீர்த்தனைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

2. சிற்றிலக்கியங்கள்

காவியம் படைத்ததோடு, சிந்தைகவரும் சிற்றிலக்கியங்கள் பலவற்றையும் முனிவர் படைத்துள்ளார. அவற்றின் பட்டியல் இது.

1. திருக்காவலூர் கலம்பகம்

(20க்கும் மேற்பட்ட உறுப்புகளை அமைத்துப் பாடப்பட்ட விரிவான கலம்பகம். அன்னைமரி அனைவருக்கும் காவலாக விளங்குவதைப் போற்றும் நூல்.)

2. அடைக்கல நாயகி வெண்கலிப்பா

3. அன்னை அழுங்கல் அந்தாதி

4. அடைக்கல மாலை.

5. கித்தேரியம்மாள் அம்மானை முனிவரின் புகழ்பெற்ற நூல்களில் ஒன்று. பல விவிலியக் கதைகளை உள்ளடக்கி, எளிய நடையில் எழுதப்பட்ட புனித கித்தேரி என்ற மறை சாட்சி பற்றிய நூல்.)

6. கருணாம்பரப் பதிகம் (தேம்பாவணியின் ஒரு பிரிவாய் அமைந்த இனிமையான இறைத்துதிப்பாடல்கள்.)

7. வண்ணமாலை மற்றும் பல தனிப்பாடல்கள் இத்தகு கவிதை இலக்கியக் குவியலின் சொந்தக்காரராக ஒளிர்பவர் வீரமாமுனிவர்.

2. இலக்கண ஆசான்

இலக்கியங்கள் படைப்போர், இலக்கண ஆசான்களாக இருப்பதரிது. வீரமாமுனிவர், மேனாட்டார் தமிழ் கற்க உதவியாக, தமிழின் செந்தமிழுக்கும், ,(இலக்கியத் தமிழுக்கும்) கொடுந்தமிழுக்கும் (பேச்சுத் தமிழுக்கும்) இருவகை இலக்கண நூல்களை இலத்தீன் மொழியில் தயாரித்தார். பின்னர் தொன்னூல் விளக்கம் என்ற இலக்கண நூலைத் தமிழிலும் எழுதினார். இது சிலரால் குட்டித் தொல்காப்பியம் என அழைக்கப்படுகிறது. பிறகு 'கிளாவிஸ்' (திறவுகோல்) என்ற நூலையும் இலத்தீன் மொழியில் தமிழ் இலக்கண அறிமுகமாக எழுதினார். இதனை இவருடன் சமய ரீதியாகக் கருத்து முரண்பாடு கொண்டிருந்த இவாஞ்சலிக்கல் லுத்தரன் பிரஸ் நிறுவனத்தார் பின்னாளில் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

3. அகராதிகளின் தந்தை

அக்காலத்தில் செய்யுள் நடையில் இயற்றப்பட்ட நிகண்டுகளே, அகராதிகள் போலப் புழங்கி வந்த நிலையில், வீரமாமுனிவரே முதல் தமிழ் அகராதியை உரைநடையில் உருவாக்குகிறார்.

'அகராதி'என்ற பெயரே வீரமாமுனிவர் ஏற்படுத்தியதுதான் என்பர் ஆய்வாளர். அவர் முதலில் தயாரித்த 'சதுரகராதி'என்ற புகழ்மிக்க நூல் பெயர், பொருள், தொகை, தொடை என்ற நான்கு பகுப்புகளாக (சதுர்-நான்கு) அமைந்துள்ளது. இது பற்றி அறிஞர் சூ. இன்னாசி ஆழமாக ஆய்ந்து அரியதகவல்கள் தந்துள்ளார். அவ்வாறே தமிழ் - இலத்தீன் தமிழ் - பிரெஞ்சு என அமைந்த இரு மொழி அகராதி உருவாக்கியுள்ளார். ஒரு படி மேலே போய், போர்த்துக்கீசியம் தமிழ் - இலத்தீன் என அமைந்த மும்மொழி அகராதியையும் உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

4. உரைநடையின் முன்னோடி

முனிவரது சாதனைக் களஞ்சியத்தின் அடுத்த பிரிவாக, அவரது உரைநடைப் படைப்புகளைக் குறிப்பிடலாம். தமிழில் எல்லாம் செய்யுள்மயம்' என்றிருந்த காலத்தில் (பதினெட்டாம் நூற்றாண்டு தொடக்கத்திலும்) உரைநடைத் தந்தை' எனப் போற்றப்பட்ட தத்துவபோதகரைத் (இராபர்ட் - டி-நொபிலி) தொடர்ந்து, வீரமாமுனிவரும் எண்ணற்ற உரைநடை நூல்களை எழுதிக் குவித்தார். சுமார் 12 உரைநடை நூல்களை அவர் படைத்துள்ள குறிப்புகள் தெரிய வருகின்றன. சில

இன்னும் அச்சேறியதாகத் தெரியவில்லை. இவை பெரும்பாலும் திருச்சபைக் கொள்கை விளக்க நூல்கள், ஒழுக்க நெறி நூல்கள், சமய மறுப்பு (எதிர்ப்பு) நூல்கள், பாடநூல்கள் எனும் பகுப்பில் அடங்குவன. அவற்றுள் முக்கியமான நூல்கள் இவை: வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், வேதியர் ஒழுக்கச் சோதனை, பேதக மறுத்தல், லுத்தேரினத்தியல்பு, ஞானக்கண்ணாடி, ஞான உணர்த்துதல், பொது நிருபம், திருக்கடையூர் நிருபம் என்பன. திருச்சபைக் கணிதம் எனப்பட்ட அக்கால வழக்குக்கேற்ற, பஞ்சாங்க நூல் ஒன்றையும் முனிவர் எழுதியதாக தெரிகிறது.

5. சிறுகதைச் சிற்பி

தமிழின் முதல் கதை இலக்கியம் (உரைநடையில்) எனப் பலராலும் கருதப்படும் முனிவரின் 'பரமார்த்த குரு கதை'என்ற குரு - சிஷ்யர்கள் பற்றிய நகைச்சுவைக் கதை, மிகப் பலரும் அறிந்தது. இது மேனாட்டுத் தமிழ் மாணவர் தமிழ் படிக்க துணை செய்யும் பாட நூலாக எழுதப்பட்டது. இதைத் தம் கைப்பட முனிவர் தமிழில் எழுதி, பின்னர் இலத்தீனிலும் மொழிபெயர்த்தார். இதுபோல, 'தேம்பாவணி' காவியத்தில் இடம்பெறும் வாமன் கதையையும் எழுதியுள்ளார்.

வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள்

- தேம்பாவணி
- தமிழின் முதல் அகராதியான சதுரகராதி
- தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்)
- வேதியர் ஒழுக்கம்
- வேதவிளக்கம்
- திருக்காவலூர் கலம்பகம்
- கொடுந்தமிழ் இலக்கணம்
- செந்தமிழ் இலக்கணம்
- பர்வத காண்டம்
- ஞான உபதேசம்
- பரமார்த்தக் குருகதைகள்.

6. மொழிபெயர்ப்புக் கலை முதல்வர்

மொழிபெயர்ப்புப் பணியிலும் சில முன்னோடியான நூல்களை முனிவர் எழுதியுள்ளார். திருக்குறளின்அறத்துப்பாலையும் பொருட் பாலையும் இலத்தீனில் மொழிபெயர்த்தார். துறவியாதலின் காமத்துப்பால் மொழிபெயர்ப்பதைத் தவிர்த்து விட்டார்.

இவரை அடியொற்றியே எல்லீசர், ஜி.யூ. போப் போன்ற பிற அருளாளர்கள் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க தலைப்பட்டனர். விவிலியத்தில் வரும் தாவீதின் முதல் சங்கீதத்தையும் தமிழில் கலிவெண்பாவாகப் பெயர்த்தார்.

7. உரை வகுத்த அறிஞர் உரையாசிரியர்

தமது நூல்களுக்குத் தாமே உரை விளக்கம் எழுதிய உரை ஆசிரியராகத் திகழ்ந்தார். தேம்பாவணிக் காப்பியத்துக்கும் தொன்னூல் விளக்கம் என்ற தமிழ் இலக்கண நூலுக்கும் தாமே உரைக் குறிப்புகள் எழுதி வெளியிட்டார். திருக்குறளுக்கு எளிய மொழியில் - குறிப்பாக அவர் வாழ்ந்த பகுதியில் இருந்த பரதவ மக்களின் மொழியில் உரை விளக்கங்கள் எழுதினார். குறளுக்கு உரை

வகுக்கும் போது, ஊழ், புலால் மறுப்பு முதலிய கோட்பாடுகளுக்கு கிறிஸ்தவ நோக்கில் துணிவுடன் உரை கண்டெழுதினார்.

8. எழுத்துச் சீர்திருத்த ஏந்தல்

வீரமாமுனிவர் காலத்தில் பெரிதும் பனை ஓலைகளில் எழுத்தாணிகளால் எழுதப்பட்டதாலும் அச்சு இயந்திரம் பெருவழக்கில் இல்லாததாலும் தமிழ் எழுத்துக்களை எழுதுவதில் பல சிக்கல்கள் இருந்தன. அவற்றைக் களையும் நோக்கில், உயிர் மெய் எழுத்துக்கள், குறில் நெடில், எகர ஒகர எழுத்துக்கள் எழுதும் முறைகளில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். அவற்றுள் சில, இன்றும் பயன்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

9. மருத்துவமாமணி

மக்கள் ஆன்ம நலம் பேணும் அருளாளராகத் தம் வாழ்வை அமைத்துக் கொண்ட அடிகளார், மக்கள் உடல் நலம் பேணும் மருத்துவத் துறையிலும் ஈடுபாடுடையவராகப் பல செய்திகளை எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது. 'சதுரகராதி'யில் எண்ணற்ற காய்ச்சல் வகைகளைப் பட்டியலிட்டுள்ளார். தமிழ் இலத்தீன் அகராதியில் பல்வேறு நோய்களின் பெயர்களைப் பட்டியலிட்டுள்ளார். அறிஞர் மது.சா. விமலாநந்தம், முனிவர் நசகாண்ட வெண்பா 100, நவ காண்டம், குண பாடம், சிந்தாமணி ஆகிய மருத்துவ நூல்களை எழுதியுள்ளதாகக் குறிப்பிடுகிறார். வேறு பல மருத்துவ நூல்களும் எழுதி உள்ளதாகவும் சிலர் கருதுகின்றனர்.

10. சமுதாய நல்லிணக்கம் பேண உழைத்த சான்றோர்

முனிவர், கிறிஸ்தவ சமயம் பரப்பும் அருள் துறவி ஆயினும், அனைத்து சமய மக்களோடும் தலைவர்களோடும் நல்லுறவு பூண்டு, அக்காலத்தில் சமுதாய நல்லிணக்கம் பேண அயராது உழைத்துள்ளமை அவரது வரலாற்றில் புலனாகிறது. திருச்சியை ஆண்ட இஸ்லாமிய சிற்றரசன் சந்தாசாகிபோடு நெருங்கிய நட்புகொண்டு அவரது அரசவையில் அமைச்சராகவே முனிவர் அங்கீகரிக்கப்பட்டதை முன்னரே குறிப்பிட்டோம். தொண்டை நாட்டின் ஆரூர், உள்ளூர் மக்கள் மீது பசு கவர்ந்ததாகப் பழி சுமத்தப்பட்டபோது அவர்களுக்காகச் சந்தாசாகிப்பிடம் சமரசம் பேசி, அவர்களுக்கு விடுதலை பெற்றுத்தந்தார். அரியலூர் ஜமீன்தார் அரங்கப்ப மழவராயருடனும் மதுரை நாயக்க மன்னர் பங்காரு திருமலை நாயக்கரோடும் நெருங்கிய உறவு பூண்டிருந்தார். முனிவரின் தொடர்பு காரணமாக, இவ்விரு பெரு மக்களும், கிறிஸ்தவக் கோயில்களுக்கும், கிறிஸ்தவ மக்களுக்கும் பல்வேறு உதவிகளைச் செய்து வந்ததாகத் தெரிகிறது. நாயக்க மன்னர்களின் குடிவழிப் பட்டியலை ஒரு வாரிசு மரமாக (family tree) தம் சொந்தக் கையால் முனிவர் வரைந்து திருமலை நாயக்கருக்கு தந்து அவரை மகிழ்வித்ததாகக் கூறப்படுகிறது.

இவற்றோடு முனிவருக்குத் தோட்டக்கலை, வானியல் அறிவு, ஓவியக்கலை முதலியவற்றிலும் பெரும் திறன் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

பல்லோர் பாராட்டுரைகள்

இவ்வாறான பன்முக பங்களிப்புகள் தந்த சாதனை இமயத்துக்கு, தமிழ்ச் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் பல்வகைப் பாராட்டுகளையும் விருதுகளையும் அக்காலத்திலேயே வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. வீர ஆரிய வேதியன், திரு மதுரை செந்தமிழ் தேசிகர், இஸ்மதி சந்நியாசி என்பன சிலவாகும். (வீரமாமுனிவர்) என்ற பெயரே மதுரை தமிழ்ச் சங்கத்தில் 'தேம்பாவணி' அரங்கேற்றப்பட்ட பொழுது, அங்கிருந்த புலவர்கள் அவருக்கு வழங்கிய பாராட்டே என அறியப்படுகிறது. அவரது பிறந்த மூன்றாம் நூற்றாண்டில் அதாவது 1980 இல், இத்தாலியில் அவர் பிறந்த ஊரில் அவரது சிலை நிறுவப்பட்டு, 'தமிழ் மொழியின் தாந்தே' (இத்தாலி நாட்டுப் பெருங்கவி) என அதன் கீழ் எழுதப்பட்டு, ஒரு பதக்கமும் அஞ்சல் முத்திரையும் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறான, பெரும்புலவரும் பெரும் அருளாளருமான வீரமாமுனிவர் எனும் அருட் சாதனை இமயம் பற்றிய கட்டுரையை, அவரது 'தேம்பாவணி' காப்பியம் பற்றிய யோகி சுத்தானந்த பாரதியாரின் வாழ்த்துப் பாவுடன் நிறைவு செய்வோம்.

‘வீரமாமுனிவர் தைரியநாதர்
விரிதமிழ்க் கலை மணங்கமழும்
ஆரமாமுனிவர் அகத்தியர் போல
அருளினார் அரிய நன்னூல்கள்
சாரமாந் தேம்பா வணியினைத் தொடினும்
தமிழ்மணங் கமழுமென் கரமே
ஈரமாநெஞ்சில் இடம்பெற நட்டால்
இன்பமாய் மலருமென் வாழ்வே!”

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:
சம்சுல் ஹுதா பானு
99403 35306

மதுரை, சந்திரோதயம் பதிப்பகத்தின் நூல் விலைப்பட்டியல்

சந்திரோதயம் பதிப்பகம்
மதுரை. Ph. 7010997639

Mob.: 7010997639

வ. எண்	நூல்கள்	விலை (*Rs.)*
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் எளிய உரைநடையில்	*200*

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்

2.	உன்னோடு உரையாடுதல்	*100*
3.	காதல் மொழி	*80*
4.	பார்வையில் பூத்த நிலா	*100*
5.	தேனடையும் வரலாறு	*100*
6.	நுண்கலை மருத்துவன்	*200*
7.	தொடரும் புழுதிக்கால்கள்	*100*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்

1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	*200*
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	*200*
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	*200*
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	*200*
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	*200*
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	*200*
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	*200*
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	*200*
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – *I*	*200*
10.	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -*I*]	*200*
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - *II*]	*200*
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	*200*
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	*200*
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	*200*
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	*200*
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	*200*
17.	*Unique Fandom of MGR*	*200*
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	*200*
19.	எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் – *I*	*200*
20.	எங்க வீட்டுப்பிள்ளை	*200*
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	*200*

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	தலைமை பொறுப்பேற்கலாம்	*120*
2.	இணையத் தமிழ்	*150*
3.	ஊடகச் சட்டங்கள்	*250*

4.	ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்	200
5.	கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)	100
6.	மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)	50

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1	பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)	200
2.	பெண் தெய்வ வழிபாடு	200
3.	தேவேந்திரன்	200
4.	மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)	200
5.	இரு நிலத்தில் திருமுருகன்	200
6.	முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)	200
7.	வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்	200
8.	யானைக்கடவுள்	200
9.	பெண் பூப்பின் புனித வழிபாடு	200
10.	பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வரலாறும்	300
11	வழிபாட்டின் வேர்களைத் தேடி	300

சமய விளக்க நூல்கள்

1	சாமிகளின் சரித்திரம் (வரலாறும். வழிபாடும்)	300
2	விரதங்களின் விளக்கம்	200

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	பாடுபொருளும் பாசப்பொருளும்	250
2.	"பூ மர நிழலி"ன் களமும் காலமும்	200
3.	"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு	100
4.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்	100
5.	பயணக் கவிதைகள்	100

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	எட்டுத்திக் கும் செல்வீர்	200
2.	அவன் கடவுளுக்கு நிகரானவன்	200
3.	செக்கச் சிவந்த ரோஜா	200
4.	கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"	200
5.	கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"	200
6.	மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)	200
7.	கவிதை மொழிபெயர்ப்பு	200
8.	நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)	300
9.	மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்	200
10.	*Translating Tamil poetry*	300

சிறு கதை நூல்

1.	அமராவதியின் காதல் - சத்யப்பிரபா	120
2.	ரோஜா மொட்டு (கவிதை சித்திரங்கள்)	100
3.	மகிழ் பேரின்பம் (poems)	200
4.	பொன் வேலி (poems) நூல்கள்	200
5.	திருக்குறள் கதைகள் - பகை மாட்சி	100

தே. ஞானசேகரனின் நூல்கள் ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*Emerging Mallarism*	*100*
2.	*Festival of lord Indra*	*250*
3.	*Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)*	*200*
4.	*Re reading of Pallu literature (in print)*	*300*
5.	*Mallariyan Literature (in print)*	*200*
7.	*Frontyard without My Dad (Poem)*	*200*
2.	*Emerging Mallarism*	*100*

English Novel Part

1.	*Aranyani – Vijeni*	*300*
2.	*Genetic traits of Vengai anchor by Tamilmagan*	*250*
1.	*Love Thamizh (online multilingual monthly about Tamilnadu History Language and Culture)*	*500*

Tamil Classics in English (Selected Poems)

1.	*Ainkurunuuru*	*200*
2.	*Kurunthokai*	*200*
3.	*Puranaanuuru*	*200*
4.	*Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)*	*300*
5.	*A Classic Portrait of Madurai City (Madurai – Kanchi (Tamil) – the earliest heroic poetry)*	*300*
6.	*Songs of Classic Tamil Poetess Avvai*	*300*

Didactic Literature

1.	*Naaladiyaar*	*200*
2.	*Aacharak Kovai*	*200*

Medievel Literature

1	*A peasant with two wives (Mukoodal Pallu)*	*300*
2	*A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)*	*300*
3	*One line guidelines in Tamil*	*200*

திருக்குறள் ஆய்வுநூல் வரிசை

1	உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள்	*200*
2	வாழ்வியல் வழிகாட்டி திருக்குறள்	*200*

Sangam Classics in Modern Tamil

1.	குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்)	*200*

Studies on Tamil Grammar

1.	தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள்	*300*

ஜோதிட நூல்கள்

1. மேஷ ராசி சூட்சும ரகசியம்

2 ரிஷப ராசியின் சூட்சம ரகசியம்

3 நவரத்தினமும் உபரத்தினமும்

4 மிதுன ராசியின் சூட்சம ரகசியம்

ஆதிச்சநல்லூரில் நடந்த வழக்கு

முத்தாலங்குறிச்சி காமராசு
திருநெல்வேலி

ஆதிச்சநல்லூரில் 1876 ல் இருந்தே அகழாய்வு நடந்தாலும் கூட இங்கே அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என பலதரப்பட்ட மக்களிடம் கோரிக்கை இருந்தது. இந்த நிலையில் எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராசு மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றை 2017 ல் தொடர்ந்தார். இந்த வழக்கில் 2004 நடந்த அகழாய்வு அறிக்கை வேண்டும். மீண்டும் ஆதிச்சநல்லூர், கொற்கை மற்றும் சிவகளையில் அகழாய்வு செய்யவேண்டும். இங்கே அருங்காட்சியகம் அமைக்கவேண்டும் போன்ற கோரிக்கையை வைத்தார். தற்போது இந்த மூன்று கோரிக்கையும் நிறைவேறி விட்டது. ஆதிச்சநல்லூரில் மத்திய மாநில அரசுகள் அகழாய்வு செய்துள்ளது. 2004ல் நடந்த அகழாய்வு அறிக்கை வெளி வந்துள்ளது. மத்திய அரசு சார்பில் ஆதிச்சநல்லூரில் இந்தியாவிலேயே முதல் முதலாக சைட் மியூசியம் அமைக்கப்பட்டுள்ளது. மாநிலஅரசு ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளையில் அகழாய்வு செய்த பொருள்களை திருநெல்வேலி மாவட்டம் கன்னியாகுமரி & மதுரை நெடுஞ்சாலையில்உள்ள ரெட்டியார் பட்டி மலையில் அருங்காட்சியகம் வைத்து காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பணி 80 சதவீதம் முடிந்து விட்டது. கீழடியை போல மூன்று மடங்கு பெரிய அளவில் இந்த அருங்காட்சியகம் அமையவுள்ளது. ஆதிச்சநல்லூரில் 1902ல் அகழாய்வு செய்த இங்கிலாந்தை சேர்ந்த அலெக்ஸாண்டர் இரியா தாமிரபரணி கரையில் 37 இடங்களில் அகழாய்வு செய்ய வேண்டும் என எழுதி வைத்து விட்டு சென்றுள்ளார். தற்போது மத்திய அரசு ஆதிச்சநல்லூரில் புதைக்கப்பட்டவர்கள் எங்கே வாழ்ந்து இருப்பார்கள் என ஆய்வில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்காக திருக்களூர், ஆதிச்சநல்லூர், அகரம் ஆகிய இடங்களில் அகழாய்வு செய்து வாழ்விடம் இதுதான் என நிரூபத்து உள்ளனர். ஆதிச்சநல்லூரில் மத்திய மாநில அரசுகள் தற்போது நடத்திய அகழாய்வின் அறிக்கை இதுவரை வெளிவர வில்லை. அந்த அறிக்கை வெளியே வந்தால் தாமிரபரணி கரை நாகரீகம் மேலும் பல அபூர்வ தகவலையும், தமிழர்களின் தொன்மையையும் வெளிபடுத்தும் என நம்புகிறோம்.

மனிதத்தின் பன்முகம்

— முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ

அடுத்து ஆட்சியைப் பிடிக்க அரசியல்வாதிகள் போடுவர் திட்டம் இவரது குட்டை அவர் உடைக்க அவரது முகத்திரையை இவர் கிழிக்க குப்பையைக் கிளறிக் கிளறிதாங்கவியலாத முடை நாற்றம் நிரந்தரமாக என்றுமே பட்டை நாமம்

நொந்ததே என்று தளர்பவருக்கும் வந்திடும் ஒரு நாள் புது வாழ்வு கடந்ததை எண்ணிக் கலங்காது இழந்ததை எண்ணிப் புலம்பாது வருவதை எதிர்கொள்வோருக்கு வாழ்வில் என்றுமே தாழ்வில்லை

வாஞ்சையென்றே எண்ணி ஏமாறாதீர் கொஞ்சமேனும் கருணையற்ற பிள்ளை நெஞ்சமதில் அன்பின்றித் துரத்தியதால் பஞ்சைப் பராரியாய் அலையும் பெற்றோரே நஞ்சு தோய்த்து அவர் உதிர்க்கும் இன்மொழியை வாஞ்சையென்றே எண்ணி ஏமாறாதீர்

உயிர் குடிக்கும் துணிவு பெற்றது போலி மதவாதிகளின் கூட்டம் கடவுள் எமக்கே உடைமை என்றே கூசாது பொய்யுரைத்துப் போராட்டம் மாந்தர் யாவரும் சமம் என்றாலோ சகித்திடாது செய்வர் ஆர்ப்பாட்டம் உண்மையை மறைத்துப் பழியுரைத்து நன்றே நடத்திடுவர் பித்தலாட்டம்

எல்லாமே பணம் எல்லாமே பணம்பிச்சாண்டியை மதிப்பவருண்டோ பெருமைமிகு பெரியகோவிலில் சொக்கரிடமும் மீனாளிடமும் கருணை வேண்டி சிறப்புத் தரிசனம் செய்யச் சென்றால் சொக்கருக்கும் வேண்டுமந்தப் பணம்காசு பணம் துட்டு மணி மணி

எண்ணிக் குமைந்து மந்தராகியவரும் பண்பினில் சிறந்தால் மாந்தராகிவிடுவார் அன்பில் திளைத்துப் புனிதராகியே மன்பதை காத்திடும் தன் மனச்செல்வம்

பசிப்பிணியும் மாநிலத்தே ஒழிந்திடுக பல்லுயிரும் இன்புறவே நல்லறம் ஓங்கிடுக பாரெல்லாம் அன்புநெறி தழைத்திடுக பாங்குடனே சிறந்தென்றும் வாழ்ந்திடுக

சக்தி வடிவென்றே பாடலெழுதுவார் ஒரு சிலர் மறைப்போசைப் பாடலெழுதுவார் மறு சிலர் பெண்ணுக்குப் பரிந்து பாடலெழுதுவார் அவர் இது பொல்லாத உலகம் பெண்ணே இது புரியாதென்றால் வாழ்வில்லை கண்ணே

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

முருக வழிபாட்டின் தோற்றமும் தொடர்ச்சியும்

[SYMBOL AND TRAVEL OF LORD MURUGA]

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

முருக வழிபாட்டை மனித குலத் தோற்றத்தில் இருந்து தேடிக்கண்டறியலாம். முருக வழிபாட்டின் தோற்றம், காலந்தோறும் முருக வழிபாடு அடைந்த மாற்றம், கௌமாரம் என்ற தனி மதம், சைவம், வைணவம், பௌத்தம் என்று பல்வேறு மதங்கள், முருகனை தம்முடையவனாக்கிக் கொள்வதற்கென உருவாக்கிய கட்டுக் கதைகள், வட நாட்டிலும் தென்னாட்டிலும் காணப்படும் முருக வழிபாடு, இந்தியாவிலும் பிற நாடுகளிலும் காணப்படும் முருக வழிபாடு என முருகனின் வழிபாடு குறித்து நீண்ட சமூகப் பண்பாட்டு ஆய்வு வரலாறு உள்ளது.

ஆதி பெண் தெய்வ வழிபாட்டுக்கு அடுத்த நிலையில் மனித சமுதாயம் கண்டறிந்த வழிபாடு குமரன் அல்லது மகன் வழிபாடு. அகால கட்டத்தில் கணவன் என்ற உறவோ தெய்வ வழிபாடோ கிடையாது. உருவ அமைப்பில் வேறுபட்டு தெரிந்தவன் பெண்ணிடமிருந்து தோன்றிய ஆண்மகன் ஆவான். அவன் உடலளவில் வலிமை உடையவனாக இருந்ததால் போற்றுதற்கு உரியவன் ஆனான். அவனது உறுப்பும் [PHALLUS] வழிபடு பொருளாயிற்று. அவன் என்திசென்று விலங்குகளை வேட்டையாடப் பயன்படுத்திய வேல் கம்பு அவனது ஆயுதமாக போற்றப்பட்டது. இவன் அழகன்; குமரன்; வேல் தாங்கிய வீரன். ஆனால் கூட்டத்தின் தலைவன் அல்லன். அவன் தாயே தலைவி ஆவாள். அவளே அன்னை மகா சக்தி.. அவள் காட்டிய வழியில், அவள் அளித்த ஆயுதமாகிய வேலைக் கொண்டு இவன் பல வீரச்செயலகளை நடத்தி வந்தான். அனைவரையும் காக்கும் அன்னை அவளது வீரப் புதல்வன் என்ற இருவருமே ஆதி தெய்வங்கள். இவன் தாயின் குழந்தை என்பதால் இவன் சிறுவன் என்ற பொருளில் சேயோன் எனப்பட்டான்.

சங்க காலத்து முருகன்

முருகன் என்ற பொதுச்சொல்லை மக்கள் அதிகம் பயன்படுத்தினாலும் அவன் ஒவ்வொரு இடத்திலும் காலத்திலும் மதத்திலும் நாட்டிலும் வெவ்வேறு பெயரால் குறிப்பிட்டுள்ளனர். தொல்காப்பியம் முருகனை சேயோன் என்கிறது. அவன் குறிஞ்சி நிலத்தின் தெய்வம் ஆவான். சங்க இலக்கியத்தில் குறிஞ்சி நிலமே கூடலுக்குரிய

இடமாகும். தலைவன் திருமணத்துக்கு முன்பு தலைவியுடன் கூடி மகிழ்ந்து காலங்கழித்த பின்னர் அவளைத் தேடி அவன் வராத போது அவனைக் காண வேண்டும் என்ற ஏக்கத்தால் அவள் உண்ணாமல் உறங்காமல் தவித்து உடல் நலிந்து மகளின் இந்நிலையைக் கண்ட தாய் அவளுடல் நலிவுக்கான காரணத்தை அறிய அவ்வூர் சாமியாடியும் மருத்துவனுமான *[SHAMAN]* வேலனை அழைத்துக் குறி கேட்கிறாள். இங்கு வேலன் என்பவன் குறிஞ்சி நிலத்துத் தெய்வமான சேயோனின் பிரதிநிதி ஆவான், தெய்வமேறி ஆடல் என்பது மந்திரச் சமயச் சடங்குகளில் *[magico religious ritual.]* ஒன்றாகும். இன்றைக்கும் தொடரும் இந்நடைமுறை மனிதன் தன வாழ்வில் தெய்வம் என்ற ஒன்றைக் கண்டுபிடித்த காலத்தில் இருந்து தொடர்ந்து வருகிறது. ஆக குறிஞ்சி நிலத் தெய்வமான சேயோனின் சாமியாடி வேலன் எனப்பட்டான்.

சங்க காலத்தில் வேலனை முருகன் என்றும் அழைத்ததாக இலக்கியச் சான்றுகள் கிடைக்கின்றன. குறிஞ்சித் திணையின் கருப்பொருள் கூடலும் கூடல் நிமித்தமும் என்பதாகும். அகத்திணையியலை களவியல் [திருமணத்துக்கு முந்தைய காதல் நிகழ்வுகள்]. கற்பியல் [திருமணத்துக்குப் பிந்தைய இல்லற நிகழ்வுகள்] எனப் பிரித்த தொல்காப்பியர் களவு என்பதில் குறிஞ்சித்திணை ஒழுக்கத்தைச் சேர்த்தார். களவொழுக்கத்தைப் பற்றிய பாடல் ஒன்றில் நற்றிணையில் [82:4] 'முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல' என்று முருகன் புணர்ந்து மகிழ்ந்த வள்ளியைப் போல என்ற உவமை காணப்படுகிறது. இப்பாடலடியில் முருகன் என்பவன் வள்ளியைத் திருமணத்துக்கு முன்பாக கூடி மகிழ்ந்தான் என்ற தகவல் பதிவாகியுள்ளது. களவொழுக்கத்துக்கான காரணிகளாக மூன்றினை வரையறுக்கும் தொல்காப்பியர் சுட்டிய களிறு தரு புணர்ச்சி என்பதே வள்ளி திருமணத்தில் யானை வந்ததும் மிரண்டு போய் 'உன்னை திருமணம் செய்துகொள்கிறேன் என்னைக் காப்பாற்று' என்று வள்ளி முருகனைத் திருமணம் செய்துகொள்ள ஒப்புதல் தெரிவிக்கும் நிகழ்வாகும். புரனாமக் ஒரு கதையை வளர்த்தெடுக்கும் போது புனைவுகள்; மற்றும் கூடுதல் கதாபாத்திரங்கள் [விநாயகர்] சேர்க்கப்படுவது இயற்கை.

வேலன், சேயோன், முருகன் மற்றும் வள்ளி திருமணம் ஆகியவை சங்க காலம் தொட்டு இருந்து வந்த பழந்தமிழ்த் தெய்வங்களும் கதை நிகழ்வுகளும் ஆகும்.

சங்க காலத்தில் கந்து வழிபாடு

தொல்காப்பியர் வழிபாடு பற்றி குறிப்பிடும் நூற்பாவில் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றினைக் குறிப்பிடுறார். சங்க காலத்தில் நடுகல் நட்டு வழிபடுவதும் கந்து எனப்படும் கம்பம் வைத்து வழிபடுவதும் வீர வழிபாட்டின் சின்னங்கள் ஆகும். கந்தழி என்பது புலிவேட்டையில் மறைந்த வீரன், நாட்டை காப்பாற்றுவதில் பகைவனின் வேலுக்கு பலியாகி இறந்த வீரன் என ஆண்மகனின் வீரத்தை போற்றி கல்லோ கம்பமா நட்டு வணங்கி வந்த முன்னோர் வழிபாட்டு முறை ஆகும். கம்பும் கழியும் இறந்த சிறந்த ஆண்மகனுக்கு அடையாளமாக இருந்து ஆண்மைக்கும் அடையாளமாயிற்று. பவுத்தம் தமிழ்நாட்டில் பரவிய போது பல்லவர்களின் ஆதரவு பெற்று விளங்கியது பல்லவ மன்னர்கள் முதலில் குகைகோயில்களை உருவாக்கினர்.

சம நிலங்களில் கந்து [கம்பம்] இந்திரன் கோயிலுக்கு அடையாளச் சின்னமாயிற்று. பூம்புகாரில் இருந்த இநதிரனின் கோயிலைக் 'கந்துடைப் பொதியில்' என்று பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. கந்து என்பது ஆண்குறியின் அடையாளம்; போதி இல், பொதியில் என்பன புத்த கோயில்களின் பெயர்கள் ஆகும். தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில், மருத்துவா மலை [வள்ளிமலை, இந்திரன் பொத்தை],, சபரி மலை, சதுரகிரி, பழனி, பொதிகை [பொதியில்] போன்ற மலைப்பகுதிகளில் பவுத்தர்கள் மறைந்து வாழ்ந்தனர். காலத்தால் பிந்திய திருமுருகாற்றுப்[படையும் முருகனின் கோயில்களை, மன்றம், பொதியில், கந்துடை நிலை என்ற பெயர்களில் குறிப்பிட்டுள்ளது. ஆக கந்து என்ற பெயரில் வழிபடப்பட்ட இந்திரன் அல்லது பவுத்தக் கோயில்களை பிறகாலத்தில் கந்தன் கோயில்களாக மாற்றிவிட்டனர். வடநாட்டில் இருந்து ஸ்கந்தன் கதை இந்திரனின் மருமகன் அல்லது காவல் வீரனின் கதையாக பவுத்தர்களால் முதன்முதலில் தமிழகத்துக்கு வந்தது.

வட நாட்டு ஸ்கந்தன்

வட நாட்டில் ஸ்கந்தன் என்றொருவன் போற்றப்பட்டான். இவனை மக்கள் தேவர்களின் காவலனாகக் கருதினர். ஸ்கந்தனுக்குத் தேவேந்திரன் தனது வஜ்ராயுதத்தைக் கொடுத்து அசுரர்களைக் கொல்லப் புறப்பட்ட படையின் சேனாதிபதி ஆக்கினான். ஸ்கந்தன் தேவர்களின், தேவர்களைக் காத்து அசுரர்களை அழிக்கும் பணியில் உதவிய மாவீரன் என்பதால் இந்திரன் தன் மகளை இவனுக்குத் திருமணப் பரிசாக கொடுத்துத் தன் அருகிலேயே வைத்துக் கொண்டான். வட நாட்டில் இருந்து பௌத்த சமயம் தென் பகுதிக்குப் பரவி அங்குள்ள காஞ்சிபுரத்தில் இருந்து போதிதர்மர் வழியாக சீனா, ஜப்பான் எனப் பரவிய போது மண்ணின் கடவுளரும் சேர்ந்தே பயணப்பட்டனர். அவவாறு பயணித்த சரஸ்வதி, பிரமன், கணபதி ஆகியோருள் ஸ்கந்தனும் இடம்பெற்றான்.

தேவசேனாதிபதி ஸ்கந்தன்

ஸ்கந்தனுக்கு சீனாவில் வியே து ஓ என்று பெயர்; [ஜப்பானில் இதா தென்]. இவன் அங்கும் தேவேந்திரனின் படைத் தளபதியே ஆவான். தேவேந்திரன் அளித்த வஜ்ராயுதத்தை படுக்கைவசமாக தனதிரு கரங்களில் ஏந்தி இருப்பான். புத்தர் கோயில்களில் புத்தருக்கு நேரே ஸ்கந்தனுக்கு சந்நிதி உண்டு. சீனாவில் ஸ்கந்தன் புத்த மடங்களின் காவல் தெய்வம். புத்த தர்மத்தை தனக்குப் பிறகு மாரனிடமிருந்து [ஆசை] பாதுகாக்கும்படி புத்தர் இவனுக்கு ஆணையிட்டார். பவுத்தக் கடவுளான காவல் தெய்வம் என்ற கருத்து சீனா, ஜப்பானில் இருப்பதை போலவே கேரளா, கர்நாடகா,

ஆந்திரா போன்ற மாநிலக் கோயில்களிலும் உண்டு. இங்கு சுப்பிரமணியன் என்ற பெயரில் நாகங்கள் சூழ காணப்படும் இவன் புதையலின் காவலன் ஆவான்.

இந்திராணி என்ற தேவர் குல அரசிக்கு இந்திரிய தானம் செய்யும் பொறுப்பில் இருந்தவனே இந்திரன் எனப்பாட்டான். இந்திரர்கள் மாறினாலும் இந்திராணி மாறுவதில்லை என்பது நியதி. இந்திர பதவிக்கு ஆசைப்படுவோர் இந்திராணியைக் கவர்ந்து செல்ல முயல்வர். ஆக இந்திரன் என்பது ஒரு ஆள் அல்ல அது ஒரு பொறுப்பு. இந்திரன் குழந்தைப் பிறப்பில் ஆணின் பங்கினை உணர்த்தும் அடையாளமாக விளங்கினான். குழந்தை பிறப்பில் ஆணின் பங்கு இருப்பதை உணர்ந்தது தான் ஆதி கால அறிவியலின் முதல் கண்டுபிடிப்பாகும். இந்திரனைக் குறிக்க வெண்மை நிறமும் லிங்க பாணமும் அடையாளங்களாக விளங்கின. பவுத்தர்கள் இந்திரனை முதல் தெய்வமாகப் போற்றினர் அவர்கள் எழுப்பிய பவுத்த மடங்களில் இந்திரனுக்கெனத் தனிச் சந்நிதி அமைத்தனர் அவை சைவ எழுச்சி காலத்தில் சிவன் கோயில்களாக மாற்றப்பட்டன. வழிபாட்டிலும் சமயத்திலும் இந்திரனின் இடம் சிவனுக்கு வழங்கப்பட்டது. இந்திரனின் மருமகன் சிவனின் மகனானான்.

சிவசக்தி இணைப்பும் முருகனும்



சிவா + சக்தி → ஸ்கந்தன்

சிவனை குறிக்கும் நேர் முக்கோணமும் சக்தியைக் குறிக்கும் தலை கீழ் முக்கோணமும் சேர்ந்ததே கந்தனின் அறுகோண வடிவம் ஆகும் என்ற கருத்தியலும் நிலவுகிறது. அறுவகைச் சமயங்களுள் சைவம், சாக்தம் இரண்டையும் இணைத்து கௌமாரச் சிந்தனைக்குள் கொண்டு செல்கின்றனர். ஏனெனில் கந்தம் என்ற சொல் தூண், மணம், இந்திரியம், அணு, விரைத்த ஆண்குறி [PHALLUS] ஆகிய பொருட்களை அளிக்கிறது. கந்தம் என்பது வழமை குறியீடாக விளங்குகிறது. அறுகோணம் என்பது சிவ சக்தி சம்போகத்தைக் குறிப்பதால் கந்தன் என்பவன் மக்கட்செல்வத்தை அளிக்கும் வளமையின் அடையாளம் ஆகிறான். ஸ்கந்த புராணம் தமிழில் கச்சியப்ப சிவாசார்யாரால் கந்த புராணம் என்று கி.பி. 1350இல் இயற்றப்பட்டது. இதில்

வடநாட்டுக் ஸ்கந்தனை தமிழ்க் கந்தனாக்கும் கதைகளும் சமபவங்களும் இணைக்கப்பட்டன. இக்கதையில் ஸ்கந்தன் இந்திரனின் மகள் தேவசேனையின் கணவன். இந்த மூல கதையை கச்சியப்ப சிவாசார்யார் வள்ளியின் மணாளனான முருகனுடன் இணைத்து ஒரே கதையாக்கி அதற்குப் புராண வடிவம் கொடுத்தார். கந்தன் பிறப்பு கார்த்திகை பெண்கள் வளர்த்தது, சக்தி வேல் வழங்கியது, வள்ளி தெய்வானை திருமாலின் கண்ணீர் துளிகளில் இருந்து பிறந்தது, நவ காளி, நவ வீரர். என பலரின் பங்களிப்பும் இக்கதையில் இடம்பெற்றது.

கந்தனோடு இணைந்த கடவுள் சொந்தங்கள்

மூன்றாம் நூற்றாண்டு வேலன், அசைவம் சாப்பிடுவான். அவன் முருகன் என்ற பெயரில் ஆறாம் நூற்றாண்டில் எழுந்த நூல்களிலும் வள்ளியின் கணவனாக, குன்றக்குறவர் குலத்தைச் சேர்ந்தவனாகக் காணப்பட்டான். தமிழ்நாட்டில் பவுத்தம் பரவிய காலத்தில் உலவிய இந்திரன் கதையில் உள்ள தேவசேனாதிபதியை மக்கள் முருகனோடு இணைத்து நோக்க வாய்ப்புகள் உண்டு. பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு சைவ வைணவ எழுச்சி ஏற்பட்ட காலத்தில் தோன்றிய ஸ்தல புராண நூல்களில் முருகன், கந்தனோடு இணைக்கப்பட்டான். இந்திரனின் மருமகனை திருமாலின் மருமகனாகவும் மாற்றினர். வள்ளி மற்றும் தேவசேனையின் கணவனும் ஆனான். புத்த கடவுளராக விளங்கிய விநாயகர், ஸ்கந்தன் ஆகியோர் சிவ சக்தி சேர்க்கை இல்லாமல் தனித்தனியாக [சிவனின் நெற்றிக்கண்ணின் தீப்பொறிகள் நீரில் விழுந்தது, சக்தியின் அழுக்கை உருட்டி திரட்டி வைத்தது என்று] அவர்களின் மகன்கள் ஆக்கப்பட்டனர். அது வரை கோயில் கட்டி வணங்கப்பட்டு வந்த இந்திரன், பிரமன் ஆகியோர் சிவனால் சபிக்கப்பட்டவர்களாக கதைகள் எழுதப்பட்டன. பவுத்த

தெய்வமாக வஜ்ராயுதம் ஏந்திய ஸ்கந்தன் பின்னர் சக்தி வேல் ஏந்தியவனாக கோயில்களில் இடம்பெற்றான்.

சித்தர்களின் சுப்பிரமணியர்

சைவம், வைணவம் பவுத்தம் என்று பல சமயங்கள் முருகனை, கந்தன் என்றும் கார்த்திகேயன் என்றும் கொண்டாடி வந்த நிலையில் சித்தரியம் அவனை வேறு விதமாகப் போற்றியது. பவுத்தர்களும் சமனர்களும் மானர்களின் செல்வாக்கு இழந்து வைதிக சம்யவாதிகளிடம் வாதில் தோற்றும், மன்னர்களால் கலுவேற்றபாட்டும், கொடிய தண்டனைகள் விதித்தும், அடித்தும் உதைத்தும் பல்வேறு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட போது அவர்களில் சமணர்கள் சைவர்களாக மாறி உயிர் பிழைத்துக்கொண்டனர். பவுத்தர்கள் மேற்கு தொடர்ச்சி மலைகளின் குகைகளில் போய் ஓடி ஒளிந்துகொண்டனர். அவர்கள் முருகனையும் சிவனையும் [நடராசர்] மறைசமயக் கோட்பாடுகளின் அடையாளமாக்கிக் கொண்டனர். இவர்கள் சிவ புராணக் கதைகளையும் திருமாலின் அவதாரக் கதைகளையும் ஏற்கவில்லை. மனிதனின் புவியுலக வாழ்க்கை சிறப்பாக இருக்க உடல்நலம் பற்றி கவனம் செலுத்தினர். பரிபாஷையைப் பின்பற்றினர். பிராணாயாமம்,, இரசவாதம், சோதிடம், வானசாஸ்திரம், தற்காப்புக் கலை என்று அறிவியல்களில் நாட்டம் செலுத்தினர்.

போகர் சித்தர் (பழனி

வள்ளலார், அறுவகை சக்கரம் மற்றும் குண்டலினி என்ற கருத்தாக்கத்திற்குள் முருகனைக் கொண்டு போய் அவனைச் சுப்பிரமணி என்று குறிப்பிட்டார். சிறந்த

மணி, அப்பழுக்கற்ற மணி அல்லது வெண்மை மணி என்ற பொருளில் சுப்பிரமணி என்ற சொல்லைப் பயன்படுத்தினார். . விசுக்தி எனப்படும் இதயப்பகுதியில் அதன் இடது புறத்தில் ஆறு தலை உடைய ஒரு நாடி உண்டு அதைச் சுப்பிர மணி என்று குறிப்பிட்டார். புருவ மத்தியில் ஆறு பட்டையாகத் தோன்றிய ஜோதிமணியை ஆறுமுகம் அல்லது சண்முகம் என்றார். ஆறு ஆதாரச் சக்கரங்களில் தோன்றும் ஆறு ஒளியையும் சுப்பிர மணி சுத்தமான ஒளி என்றார்.

பிராமணர்களின் சுப்பிரமணி

சித்தர்கள் [பவுத்தர்கள்] முருகனை சித்த சுத்த கோட்பாடாக வணங்கிப் போற்றிய காலத்தில் மீண்டும் வைதிகர்கள் முருகனை தமக்கென்று சொந்தம் கொண்டாடினர். வேலன் கந்தனாகி கார்த்திகேயனாகி சுப்பிரம்நியறான் பிறகு சுப்பிரமணி என்பது சித்தரியக் கோட்பாடான சுத்த மணி அல்ல அந்த பெயரை வேறு வகையில் ஆராய்ந்து பொருள்கொள்ளவேண்டும் என்று தெய்வத்தின் குரலாக பரமாச்சார்யார் தெரிவித்தார். ‘ சு பிராமணர் என்றால் நல்ல பிராமணன், தேர்ந்த பிராமணன்; பிரமம் என்றால் சத்யமான பரமாத்மா சொருபம் என்று மாத்ரமே அர்த்தம் பண்ணிக் கொள்கிறோம். பிரம்ம என்ற பதத்துக்கு இன்னொரு முக்யமான் அர்த்தம், வேதம் என்பது. வேதத்தை அனுசரிப்பது. அனுஷ்டிப்பது. அதாவது வைதிகம் என்பது தான் பிராமண்யம். அதை முக்கியமாகக் கொண்டவர்கள் பிராமணர்கள்; வேதங்களின் பரம தாத்பர்யமான பிரமமாகிற பரமார்த்த சொரூபமாகவே இருப்பதால் சுப்பிரமணியராக இருக்கப்பட்ட மூர்த்தி’ என்று சந்திரசேகரேந்திர சுவாமிகள் சுப்பிரமணியரை வேதமாகவும் பிரமமாகவும் கருதி சிறந்த பிராமணர் என்று கொண்டாடுகிறார்.



சண்முகா கோவில், பெங்களூரு

சங்க இலக்கியத்தில் காணப்பட்ட சேயோன், அவனது சாமியாடி வேலன், வட நாட்டிலும் பவுத்தத்திலும் உள்ள இந்திர சேனாதிபதி ஸ்கந்தன், புராணங்களில் சிவனின் குடும்பத்தைச் சேர்ந்த கந்தன், சித்தர்களின் முருகன் [சுப்பிரமணி]. இன்று முழுக்க முழுக்க பிராமணர்களின் தெய்வமான சுப்பிரமணியராகக் கோட்பாட்டளவில் வளர்ந்து வந்துள்ளான். [அடுத்த கட்டுரையில் குறிஞ்சிக் கடவுளான முருகன் மருத நிலக் கடவுளான வரலாற்றைக் காண்போம்].

மருதத்து மருகனான குன்றத்துக் குமரன்

குறிஞ்சி நிலத்தெய்வ்மான சேயோனை, குன்று தோறாடி வந்த அக்குமரனை இடைக்காலத்தில் மருத நிலத்தெய்வமான இந்திரனின் மருகன் [மருமகன்] ஆக்கிவிட்டது ஏன் என்று இக்கட்டுரை ஆராய்கிறது. குறிஞ்சி நிலத்தில் மனித இனத்தின் பண்பாடு காதல் வாழ்வு மூன்று மாதம் [களவியல் - தொல்காப்பியம்] மட்டுமே இருக்க வேண்டும் பின்னர் அவ்வாழ்க்கை கற்பு வாழ்க்கையாக இல்லறமாக நல்லறம் [கற்பியல் – தொல்காப்பியம்] காக்கப்பட் வேண்டும் என்று தமிழர் இலக்கணம் வகுத்து வாழ்ந்தனர்.

குறிஞ்சியை விட்டுக் \கீழே இறங்கினால் அடிவாரத்தில் மேய்ச்சல் நிலங்கள் அதிகமுள்ள பகுதியில் இனிய இல்லறம் நடைபெற்றது. தலைவன் போருக்குச் சென்றாலும் அவன் விரைவில் மழைக்காலம் வந்ததும் தலைவியுடனுறைய திரும்பி வருவான் என்று தலைவி ஆற்றி இருந்தாள். இங்கு மாயோன் கடவுளாக வந்கப்பட்டான். தலைவன் கோ என்று அலைப்பட்டான். இது வளர்ச்சி காலகட்டம் ஆகும். ஆனால் வல்லரசு போல ஆணாதிக்கமும் அவனது அதிகாரமும் உச்சத்தில் இருந்த/இருக்கும் இடம் என்றால் அது மருதம் மட்டுமே .

மனித நாகரிகம் வளர வளர பெண் முதன்மை சமுதாயம் மாறி ஆண் முதன்மை சமுதாயம் தோன்றி இன்று வரை நிலைபெற்றுள்ளது. இன்றைய நுகர்வு கலாசாரத்தில் பெண்கள் நுகர் பொருளாக அங்கீகாரம் பெற்றதற்கு ஒரே காராணம் ஆணாதிக்கம் உச்சத்தில் எடுப்பதாகும். ஆண்களின் விளையாட்டு போட்டிகள் நடக்கும் இடத்தில் 'சியர் கிர்ல்ஸ்' என்ற பெயரில் இறுக்கமான உடையில் உற்சாகம் ஊட்டும் பெண்களின் ஆட்டம் இடம்பெறுவது பெண்களை இச்சமுகம் நுகர் பொருளாக ஏற்றுக்கொண்டதற்கான ஆதாரம் ஆகும். இந்நிலை தோன்றுவதற்கு அடிப்படை வகுத்து கொடுத்தது மருத நிலக் கலாச்சாரம் ஆகும். மருத நிலத்தில் பெண்கள் இரு வகைப்பட்டனர். குல மகளறி புதல்வன் தாய் எனப்பட்டனர். பொது மகளிர் பலவகைப்பட்ட பரத்தையராக இருந்தனர். இங்கு பல தார மணம் ஆணின் கவுரமாகக் கருதப்பட்டது.

குன்றத்தில் தமிழர் அகத்திணை முறைப்படி வள்ளியைக் காதலித்துக் கடிமணம் புரிந்த குமரன் தொல்காப்பியம் காட்டும் களிறு தரு புணர்ச்சி, கூடலும் கூடல் நிமித்தமும் போன்ற இலக்கணக்கூறுகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினான். தென்னகத்தில் ஏற்பட்ட கடல்கோளுக்குப் பிறகு இங்கிருந்து உயிர் பிழைக்கக்

கடலில் நீந்தியும் நிலத்தின் வழியாக நடந்தும் வெவ்வேறு திசைகளில் புலம்பெயர்ந்த பல நாடுகளில் வள்ளி முருகனை பச்சை வண்ணமாக பசுமையின் சின்னமாக வேளாண் கடவுளாகப் போற்றி வழிபட்டனர்.

ஆற்று நீருக்கு அணைகட்டி மழை நீரை ஏரி, குளம், கண்மாய்களில் சேமித்து வைத்து ஆண்டு முழுக்க வேளாண் பணிகளை செய்து இயற்கையின் சவாலை எதிர்கொண்ட இறுமாப்பினால் நதிக்கரையில் வாழ்ந்த மக்கள் வேளாண் நிலங்களை தமது உடைமையாக்கி அதற்கு வாரிசுகளையும் நியமிக்க எண்ணம் கொண்டு பல மனைவியரை மணந்து குடும்பம் என்ற அமைப்பை தோற்றுவித்தனர். இங்கு அவர்களின் தெய்வமாக குழந்தைகளை உற்பத்தி செய்ய மூலகாரணமான ஆண் அவனது அடையாளமாக் இந்திரிய தானம் அளிக்கும் இந்திரன் போற்றப்பட்டான். மக்களின் அருஞ்செயலாகப் போற்றப்படும் கருத்தியல் அந்தந்த சமூகத்தில் நிலத்தில் கடவுளாக்க்கப்படுவது உலக இயற்கை.

வெண்மை நிற யானை மேல் இந்திரன்

மருத நிலத்தின் இந்திர விழா

கடவுள் தகுதி பெற்ற ஆண்மைப் பண்பு அதற்குரிய வடிவமாக லிங்கக் குறியையும் [PHALLIC SYMBOL] இந்திரனையும் சுக்கிலத்தின் கருத்தியலை உணர்த்தும் வகையில் வெள்ளை யானையையும் கொண்டிருந்தது. வேளாண் தொழில் இன்றி ஓய்வாய் இருந்த மருத நிலத்து வேளாண் மக்கள் ஒரு மாத காலம் ஆற்றங்கரைகளில் விழா

கொண்டாடினர். பங்குனி பவுர்ணமியன்று காமன் விழாவுடன் தொடங்கி சித்திரை புர்ணமியன்று இந்திர விழாவுடன் நிறைவு பெற்றது. இந்திர விழா மருத நிலத்தின் திருவிழாவாகத் தோன்றி பின்னர் பட்டினங்களில் கடற்கரைகளில் கொண்டாடப்படும் விழாவாகப் தமிழகம் முழுதும் பரவியது. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இந்திரவிழாவை பற்றிய நிறைய தகவல்களைக் கொண்டுள்ளன.

மருத நிலத்துத் தலைவனான இந்திரனைப் பெருமைப்படுத்தவும் சிறுமைப்படுத்தவும் காலத்துக்கேற்றபடி கதைகள உருவாகி புராணங்கள் எனப்பட்டன. இந்திரன் மருத நிலத் தலைவன் என்பதும் அவன் மகள் தெய்வ யானையை மணந்த குன்றத்துக் குமரன் மருத நிலத்தின் மருமகனாகவும் போற்றப்பப்ட்ட காலத்தில் சைவ சமை எழுச்சி தோன்றியது. அவ்வமயம் சிவமபெருமான் பெருங்கடவுளாக்கப்பட்டு புத்த கடவுளாக போற்றப்பட்ட இந்திரன் காமந்தககாரனாகக் கருத்து மாற்றம் செய்யப்பட்டான். இந்திரனுக்கு தோற்றுவிக்கப்பட்ட லிங்க பாணக் கோயில்கள் சிவனுக்குரியதாயின. புத்தர் சிலைகள் அங்கிருந்து நொறுக்கி அகற்றப்பட்டன. பவுத்தர்களை [சாக்கியர்களை] அழிக்க வேண்டும் என்று கருத்து பிரசார நோக்குடன் பதிகங்கள் தோறும் இடம்பெற்றன. இந்திரனை வேதக் கடவுளாகக் கொள்ளாமல் பவுத்த கடவுளாகக் கருதியதால் சைவ சமயம் அவனை வெறுத்து ஒதுக்கியது. ஆனால் அவன் மருமகன் முருகனை தனது மகனாக ஏற்றுக்கொண்டது. அதனால் தேவ சேனாதிபதியான முருகன் சிவபாலனாக கந்தனாக உருமாற்றம் பெற்றான். சைவர்களின் எழுச்சி கண்டு உயிருக்குப் பயந்து மேற்கு மலைத் தொடர்ச்சியின் குகைகளில் ஒடி ஒளிந்த பவுத்த துறவிகள் சித்தர்கள் என்ற பெயரில் முருக வழிபாட்டை பரிபாஷையுடன் தொடர்ந்தனர்.

மருத நிலத்திற்குத் தலைவனனாக ராஜாவாக வேந்தனாக இந்திரன் இருந்தான். உயர்வு நவிற்சிக் கதைகள் உருவான போது அவன் தேவ ராஜா என்றும் தேவேந்திரன் என்றும் போற்றப்பட்டான். இந்த அடை மொழி அவனது பெருமையை உணர்த்துவதை விட அவனை வணங்கி வந்த மக்களின் வளர்ச்சியையும் உயர்வையும் எடுத்துக்காட்டுகிறது. அவனது ஒரே மகளும் யானை என்ற பெயரிலே அறியப்பட்டாள். தேவ என்ற சிறப்பு அடைமொழி சேர்த்ததால் அவள் தேவ யானை ஆனாள். [அடை மொழி ஆராய்ச்சி மிகவும் பயனளிக்கும். மேலூர் என ஒன்றிருந்தால் கீழூர் என்பற ஊர் இருந்திருக்கும் என்று ஊகித்து அறியலாம்].

தேவயானை குன்றத்துக் குமரனுக்கு மனைவியாக்கப்படடு இரு நிலங்களுக்கு இடையே பண்பாட்டு கலப்பு உண்டாகி குன்றத்துக் குமரன் மருத நிலத்து மருமகன் ஆக்கப்பட்டான். இதற்கு முன்பு இந்நாட்டை விட்டு அயலகம் சென்றோரும் இலங்கை போன்ற நாடுகளில் பூர்விகமாகக் குடியிருக்கும் மக்களும் குமரனை வள்ளியோடு மட்டுமே சேர்த்து வணங்கி வர இந்தியாவில் வடக்கே ஸ்கந்தன் தேவகுஞ்சரியை மணந்த கதையாகவும் தெற்கே கந்தன் தேவயானையை மணந்த கதையாகவும் இந்நிகழ்வு விரிவானதற்கான காரணங்களை ஆராயலாம். கந்த புராணம்

தேவ யானைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. பணடைய தமிழ் மரபினர் இன்றும் வள்ளியை மட்டுமே முருகனின் துணையாகக் கொண்டு வணங்குகின்றனர்.

கந்த புராணம் எனும் மகாபுராணம்

வடக்கே எண்பத்தோர் ஆயிரம் சுலோகங்களைக் கொண்ட மஹா புராணம் என்று போற்றப்படும் ஸ்கந்த புராணம் கி.பி.எட்டாம் நுற்றாண்டில் இயற்றப்பட்டது. அதனைமத் தழுவி தமிழ்நாட்டில் கி.பி. பதினான்கா நுற்றாண்டில் கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்த புராணம் தேவயானை திருமணம் பற்றி உரைக்கின்றது.. இதில் வள்ளி இரண்டாம் மனைவி ஆக்கப்டுகிறாள். சிவனின் நடனம் கண்டு களித்திருந்த திருமாலின் கண்களில் துளிர்த்த ஆனந்தக் கண்ணீர் துளிகளில் இருந்து இருவருமே தோன்றியவர்கள் எனினும் அமிர்தவல்லி என்ற தெய்வயானை மூத்தவள் சுந்தரவல்லி என்ற வள்ளி இளையவள் ஆக்கப்பட்டாள். இது தான் காலம் செய்யும் கதை மாற்றம்.

மருதநிலத்தலைவன் வேந்தன் இந்திரனான வரலாறு

இனிய இல்லறத்துக்கு எடுத்துக்காட்டாக் முல்லைத்திணை விளங்கியது. ஆனால் மருதநிலம் என்பது நிலவுடைமைத்துவ சமுதாயத்தைக் கொண்டிருந்ததால் அங்குப் பெண்களுக்குப் பேச்சுரிமை மறுக்கப்பட்டது.ஆணாதிகாரம் கோலோச்சியது. வாரிசுரிமை கொண்ட குடும்பமைப்புத் தோன்றிய இடம் மருதம் என்பதால் அங்குக் குடும்பர்களின் [குடும்பத் தலைவர்களின்] அதிகாரம் வலுப் பெற்றது. உடல் வலிமை பெற்ற மள்ளர்களின் ஆதிக்கம் மிகுந்தது. சங்க இலக்கியத்தில் வீரன் என்ற சொல்காணப்படவில்லை. மல்லன், மள்ளன் என்ற சொறகளே வீரர்களைக் குறிக்கின்றன. மல்லாடலில் [மல் யுத்தம்] சிறந்தவன் மல்லர். வீரத்தில் சிறந்தவர் மள்ளர். மதுரையை சங்க இலக்கியம் மல்லல் மூதூர் என்கிறது. இவர்களின் தலைவனாக மன்னன் இருந்தான்

சங்கம மருவிய காலத்தில் மூன்றாம் நுற்றாண்டில் பவுத்த சமயம் பரவிய பொது இங்கு புத்தருடன் இந்திரனும் உயர் தெய்வமாகப் போற்றப்பட்டான். அப்போது மருத நிலம் தனது தலைவனை வேந்தன்/ மன்னன் என்ற நிலையில் இருந்து இந்திரன்/ தேவேந்திரன் என்றாக்கி கொண்டது. இடி வேந்தனானான இந்திரனின் கருத்தியல் மழை வளம் நாடி நிற்கும் மருத நில மக்களுக்கு மிகவும் ஏற்புடையதாகதாகத் தோன்றியதால் இந்திரன் என்ற பெயரை ஏற்றுக்கொண்டனர். மழைக் கடவுளான இந்திரனுக்குக் காமன் விழாவுடன் சேர்த்துப் பெரு விழா எடுத்தனர். சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சிலம்பும் மேகலையும் இந்திர விழா பற்றி குறிப்பிடும் போது முக்கியமாகத் தெரிவிப்பது அங்குப் பரவி இருந்த பரத்தமை ஒழுக்கத்தை என்பதை மறந்துவிடக் கூடாது. ஒரு ஆண் பல பெண்களோடு குடியிருக்கலாம் அது தவறில்லை என்ற கருத்தை வலியுறுத்துவது இந்திர விழாவின் சாராம்சமாக இருந்தது. இந்தக் கருத்தியலை ஏற்றுக்கொண்ட நிலவுடமைத்துவ [மருதம்] பொருள்முதல்வாத [காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகற்] சமுதாயம் இந்திரனைத் தமது தலைவனாக

ஏற்றுக்கொண்டதில் வியப்பில்லை. குறிஞ்சித் தலைவனை சேயோனை தமக்கு உறவாக்கிக் கொண்டனர்.

குறிஞ்சித் தலைவனாகிய முருகனைத் தமது தலைவனாகிய இந்திரனுக்குத் தளபதியாக்கிக் கொண்ட மருதநில சமுதாயம் இந்திரன் மகளை முருகனுக்கு மனைவியாக்குகிறது. எட்டாம் நுற்றாண்டில் வடக்கே புராணங்கள் என்ற பெயரில் பக்திஆற்றுப்படை நூல்கள் தோன்றின. அவற்றில் மகாபுராணம் எனப்பட்டது கந்த புராணம். அப்போது தமிழகத்திலும் புராணக் கதைகள் செல்வாக்குப் பெறத் தொடங்கின. கிபி ஆறாம் நுற்றாண்டு முதல் ஒன்பதாம் நுற்றாண்டு வரை பவுத்தம் செல்வாக்க இருந்த காலத்தில் இந்திர வழிபாடும் தமிழகத்தில் தலைத்தொன்கியற்ற்ஹு. பின்பு பக்தி இயக்கம் வளரத் தொடங்கியதும் சமன் பவுத்தக் கோயில்கள் இடிக்கபப்ட்டு சைவ வைவன்வ கோயில்கள் தோன்றின. அப்போது இந்திரன் சபிக்கப்பட்டவன் ஆனான். சைவ ஸ்தலபுராணங்கள் சிவபெருமானை வணங்கித் தவமிருந்து இந்திரனின் சாபம் தீர்த்த கதைகளை எழுதிப் பரப்பின.

மல்லர் - மள்ளர்

மருத நிலத்தின் வீரமும் காதலும்

மருத நிலத்தில் முல்லை நிலத்து மாயோனைத் தெரிவு செய்யாமல் குறிஞ்சி நிலத்து சேயோனை தெரிவு செய்து இந்திரன் மகளுடன் மணம் செய்வித்து தங்கள் மருமகனாக்கிக் கொண்டது ஏன் என்ற வினா எழுகின்றது. மருத நிலத்தில் வீரமும்

காதலும் முக்கியப் பண்புகளாக விளங்கின. வீர விளையாட்டுகள் மருத நிலத்தில் ஆண்டில் பாதி மாதங்கள் நடைபெற்றன. ஆடி மாதத்தில் விதைப்பு தொடங்கி மார்கழிப் பனிக்கு முன்பாகவேமுடித்துவிட்டு தை முதல் வைகாசி வரை நடைபெற்றன. மல்லாடல் வேளாண் மக்களின் விருப்ப விளையாட்டாக இருந்தது. ஜல்லிக்கட்டு, மாட்டு வண்டி பந்தயம் நடத்தி மகிழ்ந்தனர். காளை மாடு இவர்கள் வாழ்வின் ஓர் அங்கமாயிற்று. வீரத்தின் சின்னமாயிற்று. பொலி காளைகள் வளர்ப்பு சிறந்த முறையில் நடைபெற்றது. கோயில் காளைகள் வளர்க்கப்பட்டன.

மருத நில மாந்தர் வீர விளையாட்டுக்களில் மட்டுமின்றி காதல் [காம] விளையாட்டுகளிலும் கை தேர்ந்தவர்களாக பரத்தமையை வளர்ப்பவர்களாக இருந்தனர். முருகன் நேர்மையான வீரத்துக்கும் நியாயமான காதலுக்கும் அடையாளமாகப் போற்றப்பட்டான். எனவே மாயோனை விட சேயோனே மருத நிலக் கடவுளான இந்திரனுடன் சமபந்தம் வைத்து கொள்ளத் தகுதியுடையவனாக தெரிவு செய்யப்பட்டான். முருகனுக்கு தெய்வயானையை மணம் செய்வித்ததால் மருத நில மக்கள் அவளுக்கு முதல் மனைவி என்ற தகுதியை வழங்கினர். இந்திராணிக்குக் கணவனாக வருபவனுக்கு இந்திர பதவி கிடைத்ததைப் போல தெய்வயானைக்குக் கணவனாக வந்தவன் மருத நிலத்தின் சேனைத் தலைவன் தகுதியைப் பெற்றான். முருகன் தெய்வயானை திருமணம் மருதை என்று பலகாலத்தில் அழைக்கப்பட்ட மருத மரங்கள் நிறைந்த மதுரை நகரின் தென்புறத்தே உள்ள தென்பரங்குன்றில் நடந்ததாக வரலாறு புனையப்பட்டு அங்குள்ள குகைக் கோவிலில் புடைப்புச் சிற்பங்களும் செதுக்கப்பட்டன. முருகன் மருத நிலத்தின் மருமகன் ஆன நிகழ்வு எட்டாம் நுற்றாண்டுக்குள் நடந்திருக்க வேண்டும்.

குன்றக் குமரனின் வள்ளிக் குறத்தி

கந்த புராணம் வள்ளியை காமம் மிகுந்த முனிவர் ஒருவற் மானைப் புணர்ந்ததால் பிறந்த குழந்தை என்று சித்திரிக்கிறது. அவளை மலை குறத்தி என்று சாதாரண மானிடப் பிறவியாக சுட்டாமல் முனிவரின் மகள் என்று சுட்டிக் காட்டியது அவளை உயர்த்தி காட்டுவதற்காகப் புனையப்பட்ட கதை ஆகும். இக்கதை தமிழகத்தில் நின்று விட்டது என்பதை குமரகுருபரரின்

''காமம் மிகுந்த கலை முனிவன் கண்ணருளால்
வாம மடமானின் வயிற்றுதித்து''

என்ற வரிகளும் உணர்த்துகின்றன. பிற்காலத்திய தமிழ்ப் பாடல்கள் வள்ளியை மலைக் குறத்தி, கோலக் குறத்தி, ஞானக் குறத்தி என்று பலவகையில் குறத்தி என்றே குறிப்பிடுகின்றன. அருணகிரிநாதர்

''நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்''

என்றார். ஆசியவியல் ஆய்வியல் நிறுவனம் நடத்திய கருத்தரங்கில் *Murugan and Valli* என்ற கட்டுரையில் மேனாட்டறிஞர் கமில் சுவலபில் வள்ளி முருகன்

திருமணத்தை மிகச் சிறந்த திராவிடத் தொன்மம் என்பார் வள்ளி முருகன் திருமணத்தை வள்ளி முருகன் திருமணத்தை வள்ளி முருகன் திருமணத்தை [Lovely myth of Murugan and Valli as an indigenous – autochthonous myth, A Dravidian myth, pg 40-41, 1981]

வள்ளி இருக்கும் தமிழகக் கோயில்கள்

வள்ளி தமிழகத்தில் வள்ளி மலை, வேளிர் மலை போன்ற இடங்களில் வழிபடு தெய்வமாக முருகனுடன் உடனுறை நாயகியாகக் காட்சி அளிக்கிறாள். திருவண்ணாமலையில் ஒரு வள்ளி மலை உண்டு. இங்கு வள்ளியுடன் மட்டும் முருகன் காட்சி தருகிறார். குமரி மாவட்டத்தில் நாகர் கோயிலுக்கு வடக்கே பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவேரகம் என்ற ஊரில் புனச் சோலை, வள்ளி சோலை, கிழவன் சோலை என்ற சோலைகள் உள்ளன. இங்கு உலகத்தில் மிக உயர்ந்த வள்ளி முருகன் சிலைகள் இடம்பெற்றுள்ளன. இந்த எட்டடி உயர்ச் சிலையில் காட்சி தரும் முருகனை இலட்சன குமரன் என்று இங்குள்ளோர் குறிப்பிடுவர்.

திருவேரகத்தில் வள்ளி திருமணம் ஆண்டுதோறும் சிறப்பாக் நடக்கும். வள்ளி திருமண நிகழ்ச்சி ஒவ்வொன்றும் ஒரு விழாவாக நடத்தப்படும். வள்ளி குமரனைத் திருமணம் செய்வதை எதிர்த்த குறவர்களைக் குமரன் போரிட்டுக் கொன்றதை விளக்கும் வகையில்; குறவர் படுகளம் நிகழச்சி நடக்கும். குரவர்கள் இவ்விழாவில் அதிக எண்ணிக்கையில் வந்து பங்கு பெறுவர்.



இந்திரன் பொத்தை குகைக்கோவில்

இலங்கையில் கதிர் காமத்தில் வள்ளி தெய்வானை கோயில் உண்டு. இதற்கு அருகே கோயில் வந்ததில் புத்தர்ரின் பொக்கிஷமும் வேறு சில புனிதப் பொருட்களும் உள்ளன. புத்த மரபுப்படி புத்தரின் பொக்கிஷக் காவலன் முருகன் என்பதால் அவரது பொக்கிஷமும் பொருட்களும் முருகனின் பொறுப்பில் அவனது கோயில் வனத்தில் வைக்கப்பட்டுள்ளன. பவுத்தம பரவிய பிறகே தேவேந்திரனின் தளபதியாக கந்தன் என்பவன் போற்றப்பட்டான். அவனே தேவசேனாதிபதியான கந்தனாக முருகன் கதைக்குள் புகுத்தப்பட்டான். அது வரை வள்ளியும் முருகனும் தனிக் கடவுளராக வணங்கப்பட்டனர்.

சங்க இலக்கியத்தில் காலத்தால் பிந்தியதாகக் கருதப்படும் திருமுருகாற்றுப்படை மற்றும் பரிபாடல் தவிர்த்து வேறு எங்கும் முருகன் வள்ளி பற்றி கடவுட்கதைகள் கிடையாது. நற்றிணையில் [அஉ- ச]மட்டும் 'முருகு புணர்ந்தியன்ற வள்ளி போல' என்று ஒரு தொடர் இடம்பெற்றுள்ளது. இதுவும் காதல் மனத்துக்கு உதாரணமாக் காட்டப்பட்டுள்ளதே தவிர கடவுளராக இல்லை. மற்ற பாடல்களில் வள்ளி என்பது வள்ளிக்கொடியையும் கிழங்கை மட்டுமே குறிக்கின்றது. வள்ளிக் கிழங்கு என்பது மலைகளில் கிடைக்கும் சுவையான இயற்கை உணவு என்பதால் இப்பெயர் மலை வாழ் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டது.

இலங்கையில் பால்மா மடத்தில் முருகனுக்கு இரண்டு ஆளுயர் சிலைகள உள்ளன. பவுத்தம் வந்த பிறகு புத்தருக்கும் மற்றவருக்கும் பெரிய சிலைகள் வைக்கும் பழக்கம் தமிழ்நாட்டில் தோன்றியது. முதலில் குகைகளில் புடைப்பு சிற்பமாக இங்கு பெரிய சிலைகளை செதுக்கினர்.பவுத்த சமயத்தில் புத்தர் கோயில் இருக்குமிடங்களில் தேவவருக்கு ஞானாபிஷேகம் செய்வித்த தேவ்ந்திரனின் சேனாதிபதியான முருகனுக்குச் சிலைகளும் கோயில்களும் எழுப்பினர். அவர்கள் முருகனை பொக்கிஷக் காவலராக போற்றினர். அதன் பொருட்டு தேவேந்திரனின் மகள் குமரனுக்கு மனைவி ஆக்கப்பட்டாள். தமிழகத்தில் பவுத்தம் பரவிய போது இங்கிருந்த மருத நில வேந்தனும் இந்திரனும் தேவேந்திரனுக்கு நிகராக போற்றப்பட்டனர்.

முருகனின் குகைக் கோயில்கள்

பவுத்த சமயத்தை போற்றிய பல்லவர் காலத்தில் தேவசேனாதிபதியான முருகனுக்கும் குகைகளில் கோயில்கள் தோன்றின. கழுகு மலை, திருக்கழுக் குன்றம், குன்றக்குடி, குடுமியா மலை, சித்தன்ன வாசல், வள்ளிக் கோவில் போன்ற இடங்களில் முருகனுக்கு கோகி கோயில்கள் உண்டு. காஞ்சியில் இருந்து பல்லவ மன்னனான தர்மபாலர் சீனாவுக்குச் சென்று புத்த சமயத்தைப் பரப்பிய போது முர்கனும் அங்கும் அவன் தேவ சேனாதிபதியாகவே போய்ச் செர்ந்தான். பவுத்த கதையில் அவன் ஒரு மன்னனின் மகளை மணம் முடிப்பான். ஜப்பான் இந்தோனேஷியா போன்ற பவுத்த சமயம் பரவியுள்ள அனைத்து நாடுகளிலும் முருக வழிபாடு தேவேந்திரனின் சேனாதிபதி என்ற கருத்திலேயே நடைபெறுகிறது. குன்றத்துக் குமரனாக வள்ளி மணாளனாக அல்ல.

மலேஷியாவில் பத்து மலைக்குகை கோயில், இயோ என்ற இடத்தில் உள்ள கல்லு மலைக் கோயில், பெனாங்கில் உள்ள தண்ணீர் மலைக் கோயில் மலாக்காவில் உள்ள சன்னாசி மலைக்கோயில் ஆகியன மலையில் பவுத்தர்கள் மலையில் முருகனுக்கு எழுப்பிய கோயிலகள் ஆகும்.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள சிக்கந்தர் பள்ளிவாசல்

மருத நிலத்தின் வேளாண்கடவுள் முருகன்

முரகனை மருத நிலத்தின் தெய்வமாக கொண்டதற்கு இன்னொரு முக்கிய காரணம் பழந்தமிழரும் இங்கிருந்து புலம்பெயர்ந்த தமிழரும் வள்ளியை வளமையின் சின்னமாக பசுமையின் அடையாளமாக கொண்டு வழிபட்டதே ஆகும். வள்ளி பசுமைக்குரியவள்என்பதாலஅரபுநாடுகளில்முருகனைபச்சைநிறத்துக்குரியவனாகப் போற்றுவதை காணலாம். கடல் கோளின் போது கடலில் நீந்திச் சென்று அரபு வலிக்குதா பகுதியின் கடற்கரையில் கரைஎரியவர்கள் அங்கு முருகனையும் வள்ளியையும் வளமைக்கடவுளாக வேளாண் கடவுளாகவே வணகுகின்றனர்.

சுமேரியாவில் தும்முஸ் என்ற பகுதியில் தும்மு சித் என்ற பெயரில் வணக்கப்படும் கதவும் தமிழ் சித்தன் என்ற முருகனே ஆகும். அவனது இணையான வள்ளி அங்கு இனானா எனப்படுகிறாள் என்று என்சைக்லோபிடியா தெரிவிக்கிறது.. தும்முஸ் என்பது தமிழ் [துமுழு] என்பதன் திரிபாகக் கருதப்படுகிறது.

இலங்கையில் மகாகாவ்யம் என்ற பவுத்த காவியம் முருகனை வேளாண் கடவுளாக போற்றுகிறது. கதிர்காமம் என்பது [திணை]கதிர் கிராமம் என்பதன் மருவிய வழக்கு என்று சிலர் கருதுவர். இவனே உலகத்தில் முதன்முதலில் வேளாண்மை செய்தவன் என்று இங்குள்ளோர் நம்பி இவனை வணங்குகின்றனர். பெரு நாட்டில் இருந்து ஈஸ்டர் தீவுகள் வழியாக நியுஜிலாந்து வந்து சேர்ந்த தமிழர்கள் முருகனை குமாரா என்று அழைத்து வணங்கி வருகின்றனர். கிழக்கு ஆப்பிரிக்காவில் முருகனை முருங்கு என்ற பெயரில் ஆண் குறியை சின்னமாக வைத்து மலைக் கடவுளாக சில பழங்குடியினர் வணங்குகின்றனர்.

அல்காதரும் பசுமை வேளாண்மையும்

ஈரான் நாட்டில் அல்-காதர் என்று அழைக்கப்படும் தெய்விக ஞானம் பெற்றோர் முருகன் என்று நம்பப்படும் சொருஷ் என்ற தெய்வத்தை வணங்குவர். இவன் வேளாண் கடவுள் என்பதால் இவனது அடியவர்களான அல் காதர்கள் பச்சை உடை அணிந்து பச்சை தலைப்பாகை கட்டி கடல் வழியாக பாதுகாப்பாக வந்து சேர உதவிய மீனின் மீது நிற்பர். இதுவே இவர்களின் தோற்றமாகக் கொண்டு மற்றவர்கள் இவர்களைப் போற்றுகின்றனர். காதர் என்ற பெயர் இவர்கள் புறப்பட்டு வந்த கதிர்காமத்தைக் குறிப்பதாகக் கருதுவோரும் உண்டு. கதிர் என்பது காதர் என்ரு மருவி இருப்பதாகவும் நம்புகின்றனர். அல் காதர்கள் வேளாண் கடவுளான முருகனின் அடியாவ்ர்கள் ஆவர்.

அல் காதருக்கென்று வழிபாட்டுத் தலங்கள் உண்டு. இவை இன்று மசூதிகள் எனப்படுகின்றன. ஈராக்கில் மொசுல் என்ற இடத்திலும், துருக்கியில் அல் சம்ந்தாக் என்ற இடத்திலும் அல்காதற் மசூதிகள் உள்ளன. ஜெருசலேம் நகரில் மலைக் கோயில் எனப் போற்றப்படும் அல் காதற் மாடக் கோயில் ஒன்று உள்ளது.

அல் காதர் வெண் பாறையில் நின்றார். உடனே அது பாசம் படர்ந்து பசுமை ஆயிற்று எனவே அவர் நிற்கும் இடங்கள் எல்லாம் பசுமை செழித்து படரும் என்ற நம்பிக்கை உண்டாகி அவரோடு பச்சைவண்ணம் இணைக்கப்பட்டது. அவரைக்கட்டாந்தரையில் வைத்து வழிபட்டாலும் அந்த இடம் பசுமையாகி விடும் எனபது பழங்காலம் முதல் இன்று வரை நிலவி வரும் நம்பிக்கை ஆகும்.

முருகனின் மனைவி தெய்வயா

தெய்வயானை பற்றிய கதையைக் கந்த புராணத்தில் காணலாம். பிரஜாபதி தட்சனுக்கு தேவசேனா, தைத்யசேனா என்று இரு புதல்வியர் இருந்தனர். மானசா ஏரியில் இருவரும் விளையாடிய போது அங்கு வந்த கேஷி என்ற அசுரன் அவர்களை மணந்து கொள்ள விருப்பம் தெரிவித்தான். தைத்ய சேனா அஞ்சி சம்மதித்தாள், ஆனால் தேவசேனா மறுத்துவிட்டதால் அவன் அவளைச் சிறைப்பிடித்தான். தன் மகளை அசுரனிடமிருந்து மீட்க அவனுடன் போர் தொடுக்க முனைந்த இந்திரன் கந்தனை சேனாதிபதியாக நியமித்தான். அசுரனிடம் இருந்து மீட்டு வந்த பின்பு தன் மகளை கந்தனுக்கே மணமுடித்துக் கொடுத்தான். இதுவே முருகனுக்கும் தெய்வயானைக்கும் திருமணம் நடந்த வரலாறு.

தெய்வயானையின் பிறப்பு திருமணம் குறித்து தமிழ்நாட்டுக்கு ஏற்ற வகையில் இன்னொரு கதையும் உண்டு. தியாகேசப் பெருமானின் ஆனந்த தாண்டவத்தை ரசித்துக்கொண்டிருந்த திருமாலின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது. வலது கண்ணின் கண்ணீர் துளியில் இருந்து தெய்வயானையும் [அமிர்தவல்லி] இடது கண்ணின் கண்ணீர் துளியில் இருந்து வள்ளியும் [சுந்தரவல்லி] தோன்றினர். தெய்வயானை ஆறாவது சக்தியாக சஷ்டி தேவியாக இருந்து சிவபெருமானை

நோக்கித் தவம் செய்து முருகனைக் கணவனாக அடையும் வரத்தைப் பெற்றாள். தவம் செய்த புண்ணியத்தால் இந்திரனின் மகளாகப் பிறக்கும் பாக்கியத்தையும் பெற்றாள்.

சீனா முருகன்- வியே து ஓ ; ஜப்பான் முருகன் - இதா தென்

லாடன் கோயில்

குஜராத்தில் இருந்து தெற்கு நோக்கி வந்த லாட சந்நியாசிகள் முருகனை வட நாட்டுப் புராண முறையில் கந்தனாகக் கொண்டு தெய்வயானையுடன் இணைத்து கோயில் கட்டி வழிபட்டனர். மதுரை நரசிங்கம்பட்டியில் உள்ள சிறிய குகைக் கோவிலான லாடன் கோயிலில் முருகன் நெற்றிப்பட்டத்துடன் அருகில் தெய்வயானையுடன் காட்சி தருவார். இக்கோயில் தொல்லியல் துரையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் இங்கு வழிபாடுகள் அனுமதிக்கப்படவில்லை. இது தவிர வேறெங்கும் முறக்கண் தெய்வானையுடன் மட்டும் இருக்கும் தனிக் கோயில் இருப்பதாகத் தெரியவில்லை.

நிறைவு

மருத நிலம் மனித நாகரிகத்தின் உச்சத்தை அடைந்த போது மனித உறவுகள் பரிணமித்தன. அது வரை தாய் மகன்; கணவன் மாணவி, தந்தை அண்ணன் என்று வளர்ந்து மருதத்தில் மகள் மருமகன் என வளர்ந்தது. மண்ணையும் பெண்ணையும்

பொருளாக போற்றிய சமுதாயம் என்பதால் மகளைப் பாதுகாக்க இந்திரன் வீரத்தின் விளைநிலமாக் விளங்கிய குறிஞ்சித் தலைவன் குன்றக் குமரனை அழைத்து அவனுக்குத் தன பெண்ணை தாரை வார்த்துக் கொடுத்தான். பெண்ணை அசுரனிடம் இருந்து காப்பாற்றியதால் முருகன் அப்பெண்ணை உடைமையாக்கிக் கொண்டான். இது காதலால் நடைபெற்ற திருமணம் அல்ல; காப்பாற்றியதற்கு கிடைத்த சன்மானம். இவ்வாறு மனித குல வரலாற்றில் பெண்ணின் வரலாற்றுடன் இணைந்து முருகனின் வரலாறும் நடை போடுகிறது.

முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் இருந்து வெளிநாட்டுகுக்குச் சென்றவர்கள் முருகனை வள்ளியுடன் வைத்து பசுமைத் தெய்வமாகப் போற்றுகின்றனர். பவுத்த சமயத்தினர் ஜப்பானில் முருகனை இந்திரனின் சேனாதிபதியாகக் கொண்டு இதா தென் என்று அழைக்கின்றனர். அங்கு அவன் இந்திரனின் மருமகன் இல்லை. இந்திரனின் மருமகன் என்ற கருத்து இந்தியாவில் மட்டும் இந்து சமய எழுச்சியின் போது தோன்றிய புராணக்கதை ஆகும். அது தென்னகத்திலும் பரவி செல்வாக்குப் பெறக் காரணமாக் இரு ந்து இங்கு மருத நிலத்தில துவரை இருந்துவந்த இந்திரனின் வழிபாடு ஆகும். எனவே மருத நிலத்தவர் இந்திரனின் மருமகனாக முருகனை ஏற்றுக்கொண்டனர்.. சைவ சமயம் தொடர்ந்து இந்திரனை காமாந்தகாரன் என்று பழித்துப் பிரச்சாரம்ஸ் செய்ததால் இன்று மருத நிலத்து வேளாண் மக்களிடையே இந்திரன் மறைந்து விட்டாலும் அவன் மருமகன் முருகன் வழிபாடு நிலைத்து நிற்கிறது. தெய்வங்களை காலத்துக்கு ஏற்ப மாற்றுவதும் மற்றொன்றுடன் இணைப்பதும் 'வழுவல, கால வகையினானே'.

TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor

Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D
Translator, Publisher, Madurai

Chapter - 3

1032AD, Golden Island

The sea is roaring. The downpour is heavy. Astronomers told the rains will start in another two weeks, but their calculation is wrong. The monsoons have started. At this time, the ship must have reached the Swarna Dweep or the Golden Island Rajendra Chola, the crown prince of the great Chola dynasty standing on the deck of the ship. The ship is sailing with fifteen sails. This monsoon may change the route of the ship. His bodyguards are standing a little away from him in this pouring rain. The raindrops shatter from his steel body.

It is getting dark. He looks like an iron statue installed as a watch guard for the ship.

The prince could come downstairs and take a rest. If anyone goes and tells him, he will stare at him and say, 'I know that'. So there must be some reason behind this.

No one could read his mind. He may be thinking of all the two hundred and forty men in the crew who are going to drown in this sea. Or he may be worrying about the promise he has given to his dad Raja Raja Chola that he will put down the sea piracy in that ocean. He might be finding a way to reach the shores after getting drowned. Who knows?

His ideas are innovative; new; great and sometimes mysterious, too. They were never discussed and finalized.

Now the southern part of Naval Dweep is in the hands of Cholas. Faraway places like Kalinga, Nakkavaram [Nicobar Islands] Kadaaram, Malaiyur, Swarna Dweep, and a few others are also under the control of Cholas. Everyone agrees that the strong and powerful heir to rule this vast empire is none other than Rajendra Chola. Here arises a problem. If Rajendra Chola is killed, then the power and strength of the Chola dynasty will decline. And it is very important to sustain the glory of a kingdom than to construct it. Only Rajendra Chola can do it. His enemies are well aware of that.

Before he started his journey, the ministers and Kammiyars [Blacksmiths] planned for the journey. The fame of the Chola Navy is spread far and wide up to Rajputs in the North.

Chalukyas, Sathavakanas, and Mountain kingdoms knew the power of this navy. Chola king is not interested in waging war against any of these kingdoms as they were not equal rivals for him. His interest was to find routes to promote his trade and commerce. He could travel smoothly without any interruption from West to East with his fleet of ships loaded with commercial commodities. Silk and gold were brought from China and Greece and sold to other countries from Tamil Nadu. There were many officers appointed to collect the excise taxes from foreign traders. The Chola King was a techie in supporting the Brahmins and patronizing them. He donated fertile villages in the name of ChadurVedi Mangalam to the Vedic Brahmins. So he was unopposed by any and proved to be a benevolent despot.

In spite of this, now the king has to fight against the roaring nature. It is not as simple as he dealt with the people.

Waves were dashing against the ships on all sides. One huge wave jerked the ship. Rajendra was standing firm, holding a rope of the sail in one hand and his other hand resting on his waist. He was standing still, unmoved by the noise and slash of the waves. The ship was moving in all directions as if it was going to turn upside down. Rainwater fills the deck. Although there is an outlet for the rain waters to drain, sailors are filling the water in huge containers and pouring them out. Few are fastening the loosened sails.

It is a shame that the Chola fell prey to the sea because there are many men who could scrutinize and predict the sea current in his dynasty. From the reign of Karikal Chola, the ships were sent to Rome, Iona (Greece), Sumatra, and other places successfully. Rajendra could not guess where it went wrong. A sailor Perumchathan approached him and told 'the ship is traveling in the right direction", He confirmed it by showing the sky 'Look there shines Jupiter'

Since the clouds are dark, the stars could not be seen. And the reflection of lightning confirmed that the shore was near.

The prince is now clear that the ship will reach the shore, but still, he could not get the answer to the question, Where it went wrong? He had come to Sumatra seven times and never had this thing has happened before.

Perunchatthan came forward with a reply to the prince's question, "Sometimes the seasonal changes are inevitable".

'When it was decided to start before one week it was Valuthi who changed the date to the middle of the new moon and full moon?'

Yes My Lord, So?

He belongs to Pandyas

So?

I have to think in all possible ways. We are defeating the enemies in the outside world, but there is an enemy inside our palace.

No my Lord, Don't suspect him. I knew him from his childhood days. For four generations, his family is working in our kingdom. His great-grandfather worked under the great Sundara Chola and he was the commander-in-chief of the Sri Lankan war.

'Yes. So they were carrying the vengeance for three generations. A hundred year old poison. Winning the trust and killing that person. He knew very well, the consequences of my sudden demise in this Chola kingdom will ruin the empire. It is he who had done it. Look, my dad is growing old. He is close to sixty. Let us think of this angle.

'If you had that suspicion earlier, you could have stopped the journey.'



'I knew that the downpour will be heavy when we approach Sumatra. This travel had proved it.

'Don't get confused. We will have an inquiry after we returned to Thanjavur. It is not good to stand in this heavy rain for a long time. Come, let us go down.

Prince Rajendra looked at him sharply. Perunchathan could not bear that sharpness and dropped his head down.

'You have a lot of concern over me. But all the while, you are looking for a moment to kill me.'

'Oh Lord' cried Perunchathan. At the same moment, his hand tightly held his poniard, a small dagger in his waist. Is it for attack or defense?

'No task for poniard, Perunchaathan'. Before the prince complete his sentence, an arrow flew from a distance and pierced Perunchaathan.

He cried 'Long live Pandya Kingdom' and fell down. The prince kicked him into the sea.

He tried twice to kill the prince by poisoning him. Once he tried to stab him with his knife. All his efforts went futile.

Now he has planned to kill him in nature's roar. As he will also die with the prince, nobody can suspect his conspiracy. So he planned the travel in the time of the cyclone and steered the ship in a different direction for two days; so that the prince will get caught in the cyclone.

How can everything be taken as accidental?

Perunchaathan had a significant place in the long history of Cholas. He planned his every move to get strongly placed in the good books of the Chola kings, but the samurai-type bodyguards of the prince smelled out. Prince was shocked at knowing his motif.

This is not a usual journey. He has to finish an important task in Swarna Dweep so he showed keen interest in coming to this island. It is a search from the period of his great-grandfather Karikal Chola and it is something to do with the poetess Venni Kuyaththiyaar.

The commander-in-chief came near the prince, bowed, and said, 'My Lord. We are close to the shore'

The coffee maker is sending a beep-beep sound.

The beep sound is heard somewhere a thousand years ago.

It took a few minutes for Dev to realize his situation. He had traveled along with prince Rajendra Chola in his dreams. It seemed to be a real experience. If he closes his eyes, he can see Rajendra Chola standing amidst the roaring waves. He can feel the chillness of the sea. Usually, the dreams will be in fragments. The characters and places change frequently. Sometimes it would be like watching a foreign language movie at a film festival.

This is not a dream. It is an experience. The salt and dampness of the cyclone are felt. He could well remember the pose of the prince standing on the deck and also feel the breath and warmth of his body.

Oh, then, this is not a dream, a dream at all.

This is the second time he experiences such things.

The first time he saw Brahmadhesam, the place where Rajendra Chola expired. The second time is the prince's travel to Swarna Dweep.

'Hi Dev, what's wrong? You look haunted,' asked Shakil with concern.

I met Rajendra Chola, in person

In your dream?

No; not in my dream. In reality.

Shakil could not believe what Dev said. He was with the prince for four hours. Dev felt like sobbing. He was tired and lying down idly in bed. He is panicking. He is slowly losing himself and dancing to somebody's tune. He felt that he had been motivated and driven to some task.

He seems worried that his idle lying down may bring another hallucination

'Look at bro's box. How many messages? Next MM meet is convened. Today we shall rock', told Shakil. Dev sacked away from the prince and got ready for the MM meet. Or this laziness may lead to another hallucination. He was a bit interested as well. He could not judge himself, panic or curious?.

சிலப்பதிகாரம் காட்டும் மதுரை
(ஊர் காண் காதை)

முனைவர் சி.முத்துச்செல்வி
உதவிப்பேராசிரியர், இளநிலைத் தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி

தமிழ்த் தாய் பெற்றுள்ள காப்பியச் செல்வங்களுள் தலை சிறந்தது சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காவியம் ஆகும். அதில் ஊர்காண் காதையில் இடம்பெற்றுள்ள அன்றைய மதுரை நகரின் வாழ்விடங்களைக் காட்சிப்படுத்துவதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.

சிலப்பதிகாரம் உருவான கதை

சேர நாட்டின் மன்னன் சேரன் செங்குட்டுவன், கற்பில் சிறந்த கண்ணகியினுடைய கதையினை கேள்வியுற்று அதன் வரலாற்றினை ஒரு பெரும் காப்பியமாகப் படைக்குமாறு தனது சகோதரனான இளங்கோவடிகளை வேண்டுகிறான். கண்ணகி கோவலன் மீது கொண்ட உண்மையான காதல். அதன் காரணமாக மதுரையை எரித்து நீதியை நிலைநாட்டி விண்ணுலகம் செல்கிறாள், அக்கதையைக் கேள்வியுற்ற இளங்கோவடிகள் கண்ணகியின் மீது கொண்ட மரியாதை காரணமாக இக்காப்பியத்தை இயற்றினார். சேர, சோழ, பாண்டிய நாடுகளை அடிப்படையாகக் கொண்டு இக்காப்பியத்தில் கதை நிகழ்கிறது.

இளங்கோவடிகள் காலம்

தமிழ் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தை எழுதியவர் இளங்கோவடிகள். இவர் சேர அரசன் செங்குட்டுவனுடைய தம்பியெனவும், இளவரசுப் பட்டத்தைத் துறந்து துறவறம் மேற்கொண்டவர் எனவும் சொல்லப்படுகிறது. இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு சிலப்பதிகாரம் சமணமத நூலாகும். ஆயினும் அந்நூலில் பிற மதத்தினரைப் புண்படுத்தாதக் கருத்துக்களே நிறைந்துள்ளன. இவர் சமண சமயத்தைத் தழுவியவராக இருந்தும் தாம் இயற்றிய நூலில் வைணவத் திருமாலையும் சைவக் கொற்றவையையும், போற்றும் பகுதிகள் அந்தந்த சமயத்தவரால் பெரிதும் போற்றப்படுகின்றன.

மதுரையின் இயற்கை வளம்

புறஞ்சேரியில் உள்ள சோலை, நீர் நிறைந்த ஓடை, தோட்டத்தில் கதிர்கள் முற்றி வளம் கொழிக்கும் வயல்கள், பறவைகள் ஒலி எழுப்பும் அதிகாலைப் பொழுதில் தாமரை

மலர்களின் குவிந்த இதழ்கள் விரிய ஞாயிறு பாண்டிய மன்னனின் ஓங்கி உயர்ந்த நான்மாடக் கூடல் என்னும் மதுரை நகரைத் துயில் எழுப்பிய இயற்கைக் காட்சி சிலப்பதிகாரத்தில் மிக அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளது. அதனை,

"பரிஞ்சிறைப் பொழிலும் பிறங்கு நீர்ப் பண்ணையும்

....

ஓங்கு உயர் கூடல் ஊர் துயில் எடுப்ப"

(சிலப்பதிகாரம், ஊர்காண் காதை, பாடல் வரி : 1-6)[1]

இளங்கோவடிகள் சிலை
காரைக்குடி

என்ற பாடல் புலப்படுத்துகிறது. இதே கருத்தை அரண் செய்யும் விதமாக மதுரைக் காஞ்சியில், அகன்ற நீர்ப்பரப்பில் உயர்ந்த அலைகள் எழுந்து ஒலிக்கும் கடலை எல்லையாகக் கொண்டு தேனடைகள் தொங்குகின்ற உயர்ந்த சிகரங்களைக் கொண்ட மலைகள் தோன்றிய இவ்வுலகத்தில் ஆகாயத்தின் கண் காற்று வலமாக சுழன்று வீசிவிட்டு சிவந்த கதிர்களை உடைய ஆயிரும் இரவு பொழுதை உண்டாக்கும் வெண்ணிற கதிர்களையுடைய ஞாயிறும், திங்களும், குற்றம் இல்லாமல் விளங்கித் தோன்றின. மேகங்கள் மழை வேண்டும் காலத்து பிளையாது தம்முடைய பெய்தல் தொழிலால் உதவி புரிந்தன. அதனால் எல்லா திசைகளிலும் விளைச்சல் பெருகி வளம் கொழித்தது. ஒரு விதைப்பில் விதைத்த விதை ஆயிரமாய்ப் பெருகி விளைந்தது. விளை நிலங்களும் மரங்களும் பல்லுயிர்க்கும் தான் பயன் கொடுக்கும் தொழிலை ஏற்றுக் கொண்டு தவறாமல் வழங்கின என்பதை,

"ஓங்கு திரை வியன் பரப்பின
ஒலி முந்நீர் வரம்பு ஆக
தேன் தூங்கும் உயர்சிமைய

....

....

(மதுரைக் காஞ்சி பாடல் வரி : 1-12)[2]

என்ற மதுரைக் காஞ்சி பாடல் இங்கு நிளைவுகூறத்தக்கன.

அறம் வாழ்வித்தோர் வாழ்விடங்கள்

அறத்தை வளர்த்தெடுக்கும் இடங்களும் அவ்வறசிந்தனைகளை காலங்காலமாக நிலைபெறச் செய்வதற்கு உறுதுணையாக இருக்கும் அறவோர்களும், அவர்கள் தங்கி இருக்கும் இடங்களும் ஊர்காண் காதையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வகையில் மதுரை நகரில் வெற்றிக் கண்ணுடைய சிவபெருமான் கோயிலும், கருடக் கொடியினைஉடையதிருமாலின்கோயிலும், வெற்றிதரும்கலப்பையைஆயுதமாகமவுடைய பலராமன் கோயிலும், சேவற்கொடி உடைய முருப்பெருமான் கோயிலும், தவமுனிவர்கள்

தங்கியிருக்கும் இடங்களும் அறத்தை நிலைபெறச் செய்யும் அரசர்கள் தங்கியிருக்கும் அரண்மனைகளும் மதுரை மாநகரில் அழகுற அமைந்திருந்தது. என்பதை,

"நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்
ஊவணச் சேவல் உயர்ந்தோன் நியமும்
....
அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்"
(சிலப், ஊர்காண், கா, பாடல் வரி : 7-12)[3]

என்ற பாடலால் அறிய முடிகிறது.

இதே கருத்தை வலியுறுத்தும் விதமாக பத்துப்பாட்டு நூல்களுள் ஆறாவதாக இடம்பெற்றுள்ள மதுரைக்காஞ்சியில் பல கோயில்கள் அமைந்திருந்த செய்தியும், அக்கோயில்களில் கொண்டாடப்பட்ட விழாக்கள் பற்றிய செய்தியும் இடம்பெற்றுள்ளன. அதேபோல் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆட்சியில் மதுரை நகரம் செல்வத்தால் செழித்திருந்த செய்தியும், வணிகத்தால் உயர்ந்திருந்த செய்தியும், மக்கள் பகையும், அச்சமும் இன்றி இனிது வாழ்ந்தமையும் அறம் நிலைபெற்று விளங்கும் நாடாக பாண்டியநாடு இருந்தமையை,

"ஓங்கு நிலை வயக்களிறு
....
உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக"
(மதுரைக் காஞ்சி பாடல் வரி : 15-23)[4]

என்ற பாடல் வரிகளால் அறிய முடிகிறது.

பருவநிலை மாற்றமும் பெண்களின் செயல்களும்

பெண்கள் வைகை ஆற்றில் உள்ள நீர்த்துறையில் படகு விட்டும், தோணி செலுத்தியும், புனல் ஆடியும் மகிழ்வர். மேலும், குளிர்ந்த வாசம் உடைய முல்லைப் பூவும்இ குளத்து நீரில் பூத்த செங்குவளை மலரும் கண்களைப் போல மலர்ந்திருக்கும் நெய்தல் மலரும், ஆகிய இவற்றை கூந்தலில் அழகாக சூடி வெள்ளை மல்லிகைப் பூமாலையுடன் குளிர்ந்த செங்கழுநீர் பூக்களால் தொடுத்த மாலையைக் கொற்கைத்துறையில் விழைந்த முத்துமாலையோடு சேர்த்து அணிந்திருப்பர். தெற்குப் பொதிகை மலைச் சந்தனக் குளம்பு பூசிக்கொண்டு பெண்கள் அங்கிருந்த சோலையிலே பொழில் விளையாடி மகிழ்வர். இங்கனம் பெண்கள் புனலாடிப், பொழிலாடிப், பகல் பொழுதை எல்லாம் கழிக்க சூரியன் மறைய மாலைக் கழிந்து அந்தி வேளையில் நிலவு தோன்றியது. பெண்கள் தங்கள் கணவர் விரும்பும் அணிமணி பூண்டு அழகிய கோலம் புனைந்து கணவருடன் மகிழுந்து இருந்த காடசியை,

"தண்ணறு முல்லையும் தாழ்நீர்க் குவளையும்
கண்ணவிழ் நெய்தலும் கதுப்புஉற அடைச்சி"
(சிலப்ப, ஊர்காண் கா, பாடல் வரி : 76 - 85)[5]

என்ற பாடல் வரிகளால் அறிய முடிகிறது.

கார்கால மதுரை

பெண்கள்அரக்குப் போன்ற நிறமுடைய சிவந்த பட்டாடையை அணிந்திருப்பர். கூந்தலில் கொத்தாக உள்ள வெட்பாலை பூவை அணிந்து சிறுமலை என்னும் மலையில் பூத்தசெந்தாளிப் பூவுடன் குறிஞ்சி மலரையும் சூடிக்கொண்டு கும்குமக் குழம்பை மார்பெல்லாம் அணிந்து, செங்கொடுவேரின் பூவாலான அழகிய மாலையைச் சூடிக்கொண்டு சிவப்புச் சுண்ணம் அணிந்த மேனியில் அழகிய பவள மாலையை அணிந்து மலைகளின் முடியை சிதைத்த வச்சிரப்படை உடைய தேவேந்திரனுக்கு கூடல் நகரமாகிய மதுரையில் தனது சிவப்பு செல்வங்களை காட்ட முற்படுவது போல கார்காலம் காற்றோடு வலம் வர தொடங்கியது. என்பதைஇ

'செங்கொடு வேரிச் செழும்பூம் பிணையல்
சிந்துரச் சுண்ணம் சேர்ந்த மேனியில்
....
....
கார் அரசாளன் வாடையோடு வரும்''
(சிலப்பதிகாரம் ஊர்காண் காதை பாடல் வரி : 91 - 96)[6]

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றது

குளிரில் கூடல் மதுரை

கார்காலம் தொடர்ந்து குளிர்காலம் வருவதாயிற்று. அப்போது மாளிகை மாடத்தில் அகில் கட்டையை போட்டு எரித்த விறகில் விழுந்த நெருப்பை கணப்புச் சட்டியிலே போட்டு அதன் அருகே அமர்ந்து குளிர்காய்ந்ததுப்படி மகளிர் வாசனைச் சந்தை மார்பில் பூசி காதலருடன் கூடி மகிழ்ந்திருப்பர். குளிர் மிகுதியால் மாளிகை மாடத்து சிறிய ஜன்னல் கதவுகளையும் மூடுவர், குளிர்காலத்தை தொடர்ந்து கூடல் மதுரையில் முன்பனிக்காலம் வந்ததும் மாட மாளிகையில் இருந்து ஆண்களும் பெண்களும் முற்றத்தில் வந்து அமர்வர். அதை,

'காலம் அன்றியும் நூலோர் சிறப்பின்
முகில்தோய் மாடத்து அகில்தரு விறகின்'
(சிலப்பதிகாரம் ஊர்காண் காதை பாடல் வரி : 97-98)[7]

என்ற பாடலால் அறியமுடிகிறது.

காமன் விழாக்காலம்

முன்பனின்னாலத்தில் மரக்கலத்தில் சோழநாட்டின் கடற்கரைப் பட்டினமாகிய தொண்டியில் இருந்து கப்பப் பொருளாகக் கொண்டுவரப்பட்ட, அகில், வண்ணப்பட்டாடை, வாசனைப்பொருள்கள், கற்பூரம் போன்றவை மதுரையிலே மாநகரிலே நிறைந்திருக்கக் கூடிய பங்குனி மாதத்தில் காமன் விழா நடைபெறும். என்பதை,

‘வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட
அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
தொகு கருப்பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்’
(சிலப்பதிகாரம் ஊர்காண் காதை பாடல் வரி : 107 - 110)[8]

என்ற பாடல் புலப்படுத்துகின்றது

இளவேனிற்காலம்

மாலை போல் பூக்கும் குருக்கத்தி கொடி வீசிப் படரவும் காடும் சோலையும் மலர்கள் பூத்துச் சிரிக்கவும் பாண்டியனின் பொதிகை மலைப் பூங்காற்று மதுரை நகருக்குள் புகுந்தது. உயிர்கள் தழுவி மகிழும் இன்பத்தை தரும் இளவேனில் அரசோச்சும் காலம் ஆகும். இந்தக் காலத்தில் கொடி போன்ற அழகிய பெண்கள் தம் கணவருடன் கூடி மகிழ்ந்திருப்பர்.

கோடை முடியும் காலம்

இளம் யானைக் கன்றுகளின் கூட்டத்தோடு வரும் ஆண் யானைகள் அஞ்சும்படி வெயில் காயும் குன்றுகள் சூழ்ந்த மலைநாட்டின் காடுகள் தீப்பற்றி எரிய நெருப்பை மூட்டி கூற கோடை வெப்பம் மதுரை நகரை கொளுத்தியது அவே ஃப்ரம் ஓடை முடியும். என்பதை எடுத்துரைத்தது கோடை முடியப்போவதை வேணும். வெளிநாடு போவது போர் கவிஞர் வர்ணித்துள்ளார் அதனை

“வேனின் வேந்தன் வேற்றுப்புலம் படர
ஓசனிக்;கின்ற உறு வெயில் கடை”
(சிலப்பதிகாரம் ஊர்காண் காதை பாடல் வரி : 124-125)[9]

என்ற வரிகள் புலப்படுத்துகிறது.

ஆடல் மகளிர் வாழும் வீதி

சுட்ட செங்கல் சுமக்கின்ற குற்றத்தைச் செய்யாத சிறப்புடைய உயர் குடியினரும் முடி மன்னரும் கூட தங்கி வாழும் சிறப்புடையவை கூத்தியர் வாழும் மாளிகைகள், இவர்கள் அரசர் முன் ஆடுவது மற்றவர்களுக்கு முன் ஆடுவது என்னும் இருவகைக் கூத்தின் இயல்பை அறிந்தவர்கள். ஆடலும் பாடலும் தாள ஒலியும் வகையும் இசைக் கருவிகளின் தன்மையும் நன்கு அறிந்த இவர்கள் நீற்றல், இயங்கல்இ கிடத்தல் இருத்தல் என்னும் நான்கு வகையினையும் குரல்முதலhகிய எழுவகையிலும் சிறப்புறப் பாடும் தன்மையர் இவர்களில் சிறந்தவர்களான தலைக்கோல் பட்டம் பெற்ற ஆடல் அழகிகளுடன் பின்பாட்டுப் பாடுபவரும், வாத்தியம் இசைப்பவரும்இ ஆடத் தொடங்கும் முன் பாடும் கூத்தியும் ஆட்டத்தின் இடையிடையே பாடும் கூத்தியும் நான்கு வகைப்பட்ட பலரும் விரும்பும் ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன் அன்றாடம் பெறும் உரிமை உடைய அழகிய பெண்களும் இருந்தனர். அறுபத்து நான்கு கலைகளிலும் தேர்ச்சி பெற்ற கணிகையர்கள் வாழும் வீதியாக மதுரை நகரம் காட்சியளித்தது என்பதை,

'பண்ணும் கிளையும் பள்ளித்த தீஞ்சொல்
என்னன் கலையோர் இருபெரு வீதியும்'
(சிலப்பதிகாரம் ஊர்காண் காதை பாடல் வரி : 166-167)[10]

என்ற வரிகளால் அறிய முடிகிறது

மதுரையில் வணிக வீதி

மூடுவண்டியும் ஈருருளைச் சகடமும், தேரின் தாமரைத் தட்டும், உட்புகுந்து மறைத்துக் கொள்ள உதவும் உடல் கவசமும், மணிகள் பதித்த அங்குசமும், தோலால் செய்த தாளமும் அரைப் பட்டியும், வளைத்தடியும், வெண்சாமரும், பன்றி முகம் எழுதிய சித்திரச் சீலையும், கரிய குத்துகோல்களும், செம்பினால் செய்தவையும் வெண்கல வேலைப்பாடமைந்தவையும் கயிற்றால் பின்னியவையும் மாலையாகத் தொடுத்தனவும் கருக்கரிவாளும், தந்தத்தில் கடையப்பட்டவையும் வாசப்புகைக்கும், வண்ணச் சாந்துக்கும் வேண்டியவையும், பூமலராள் செய்தவையும் நிறைந்து வேறுபாடு காண முடியாதபடி குவிந்து கிடக்கும். அரசர்களும் வந்து காண விரும்பும் அங்காடி வீதிகள் மதுரையில் அழகுற காட்சி அளித்தன. அதனை,

'வேதினத் துப்பவும் கோடுநடை தொழிலவும்
புகையவும் சாந்தவும் பூவின் புனைநவும்
வகைதெரிவு அறியா வளம்தலை மயங்கிய
அரசுவிழை திருவின் அங்காடி வீதியும்'
(சிலப்பதிகாரம் ஊர்காண் காதை பாடல் வரி : 176 – 179)[11]

என்ற பாடல் எடுத்துரைக்கிறது.

மேலும், பன்னிரண்டு வகைக் குறைகளில் மிகவும் கொடியது காசு பாதம் என்னும் தோஷம் (வைரம், நவமணிக் கற்களுக்குப் பல தோஷங்கள் உண்டு என்பது சோதிட நூல் உணர்த்தும் உண்மை) எனவே காசுபாதம், அழுக்கு. புள்ளி இரேகை என்னும் நான்குவகைக் குறைகளும் இல்லாத, சோதிடநூல் வல்லுநர் கூறும் சிறப்புடையவையும், நான்குவகை நல்ல நிறமும், ஒளியும் சிந்தும் வைரக்கற்களும், நீரோட்டம் கருமை என்னும் குற்றங்கள் இல்லாத பச்சை மரகதக் கற்களும் குறையில்லாதப் பதுமம், நீலம், விந்தம், படிதம் என்னும் நான்கு வகையான மாணிக்கங்களும், பூசநட்சத்திரம் போன்றும் பூனைக்கண் போன்றும், பொன்ரேகை போலும், தெரியும் புஷ்பராகக் கற்களும், தீதகன்ற - சூரியனின் ஒளியும் தேனின் நிறமும் கொண்ட வைடூரியங்களும் இருள்தெளிந்தது, போல் ஒளிவிடும் நீலமணிக்கற்களும், மஞ்சளும் சிவப்பும் கலந்த கோமேதகக் கற்களும், ஒரே கல்லாக இருந்தாலும் ஐந்து வேறுபட்ட ஒளி வீசும் மாணிக்கம் புஷ்பராகம், வயிடூரியம், நீலம், கோமேதகம் என்னும் நன் மணிகளும் காற்று, மண், கல், நீர் இவற்றால் உண்டான அழுக்குகள் நீக்கப் பெற்ற நல்ல ஒளி வீசும் வெள்ளிச் சுக்கிரனும், செவ்வாயும் போல வெள்ளையும் இளஞ்சிவப்பு நிறமும் உடைய முத்துக்களும், நடுவே துளையுள்ளவை கல் இடுக்கில் சிக்கியதால் வளைந்தவை முறுக்கிக் கொண்டிருப்பவை என்னும் குறைகள் இல்லாத நல்ல பவளங்களும், இவற்றின்

தோற்றம், வளர்ச்சி, தன்மை, குணங்களை முற்ற உணர்ந்த வணிகப் பெருமக்கள் நிறைந்த பகுதியில் மக்கள் எந்த வித பகைவர் பயமும் இன்றி வாழ்ந்து வந்தமையை,

'வகைதெரி மாக்கள் தொகைபெற்று ஓங்கி
பகைதெறல் அறியாப் பயம்கெழு வீதியும்'
(சிலப்பதிகாரம் ஊர்காண் காதை பாடல் வரி : 199- 200)[12]

என்ற பாடலால் அறியமுடிகிறது.

பொருள் விற்கும் வீதி

சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம், என்பவை பொன்னின் நான்கு வகைகள் இந்த நான்கு வகைப் பொன்னின் தன்மையையும் நன்கு ஆராய்ந்து தெளியும் தேர்ந்த அறிவுடைய பொன் வணிகர்கள் பொன் வாங்க வருபவர் எந்தப் பொன் எங்கே விற்கிறது என்று தெரியாமல் திண்டாடித் தவிப்பதைத் தவிர்க்க இந்த வகைப் பொன் இங்கே விற்கிறது. என்பதற்கு அடையாளமாகப் பலவகைக் கொடிகளைப் பறக்கவிட்டு இருப்பார்கள். இப்படிப்பட்ட கொடிகள் பறக்கும் பொன் விற்கும் வீதியும், பருத்தி நூலிலும், எலிமயிரிலும் நெய்யப்பட்ட கட்டுக்கு, பட்டு நூலிலும், நூற்ற இழை தெரியாது நெருக்கி நெய்யப்பட்ட கட்டுக்கு, நூறு நூறு என்று அடுக்கி வைக்கப்பட்ட பல நூறு அடுக்குகளை உடைய புதுமணம் வீசும் துணிக்கடை வீதியும் நிறுத்துக் கொடுக்க துலாக்கோலும் அளந்து கொடுக்கப் பறையும் மரக்காலும் கொண்ட வணிகர்கள் மிளகுப் பொதிகளுடன் பலவகைக் கூலப்பொருட்கள் குவிந்து வைத்திருக்கும் கூலக் கடைத்தெருவும் மதுரையில் அமைந்திருந்தது. அதனை,



"பால் வகை தெரியாப் பல்நூறு அடுக்கத்து
நறு மடி செறிந்த அறுவை வீதியும்"
(சிலப்பதிகாரம் ஊர்காண் காதை பாடல் வரி : 206 - 207)[13]

பகுதி பகுதியாக வேறுபாடு தெரிய அமைத்த அரசர் அந்தணர், வணிகர், வேளாளர், என்ற நான்கு வகையினரும் வாழும் தெருக்களும் வீதிகள் சந்திக்கும் இடங்களின் முச்சந்தியும், நாற்சந்தியும், கோவில் கடைத் தெருக்களும், ஊர்ப் பொது மன்றும், சந்துகளும் குறுந்தெருக்களும் அலைந்து திரிந்து வான்முகட்டைக் கிழித்துக்கொண்டு பரவும் சூரியக்

கதிர்கள் நுழைய முடியாதவண்ணம், பலவண்ணக் கொடிகள் பறந்து பந்தல் போல் நிழல் கொடுக்கும் பாண்டிய மன்னனின் புகழ் உடைய மதுரை நகரம் அமைந்திருந்தது.

‘பல்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்
அந்தியும் சதுக்கமும் ஆவண வீதியும்
....
(சிலப்பதிகாரம் ஊர்காண் காதை பாடல் வரி : 212 – 217)[14]

என்ற பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

தொகுப்புரை

இவ்ஆய்வின் வழியாக சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில் இடம்பெற்றுள்ள மதுரை நகரம், அந்நகரில் உள்ள கோயில்கள், அறவோர் வாழ்விடங்கள், பல்விதப் பொருட்களையும், விற்பனை செய்யும் அங்காடி வீதிகள், ஆடல் மகளிர் வாழும் வீதிகள், கணவருடன் இனிது மகிழ்ந்திருக்கும்; பெண்களின் பல்வேறு செயல்கள், கார்கால, கோடைகால பருவநிலை மாற்றங்கள் பற்றிய கருத்துக்களை அறியமுடிகிறது.

குறிப்பு

1.சிலப்பதிகாரம், ஞா. மாணிக்கவாசகன் (உ.ஆ) ஊர்காண் காதை பாடல் வரி : 1-6
2.மதுரைக் காஞ்சி பாடல் வரி : 15-23
3. சிலப்பதிகாரம், ஞா. மாணிக்கவாசகன் (உ.ஆ) ஊர்காண் காதை பாடல் வரி : 7-12
4. மதுரைக் காஞ்சி பாடல் வரி : 15-23
5. மேலது, பா. வரி 76-85
6. மேலது, பா. வரி : 91 - 96
7. மேலது, பா. வரி : 97-98
8. மேலது, பா. வரி : 107 – 110
9. மேலது, பா. வரி : 124-125
10. மேலது, பா. வரி : 166 - 167
11. மேலது, பா. வரி : 176 - 179
12. மேலது, பா. வரி : 199 - 200
13. மேலது, பா. வரி : 206 - 207
14. மேலது, பா. வரி : 212 - 217

துணைநின்ற நூல்கள்

1. சிலப்பதிகாரம் தெளிவுரை, ஞா. மாணிக்கவாசகன், உமா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு டிசம்பர் – 1995
2. சிலப்பதிகாரம், கழக வெளியீடு, ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ), சைவசித்தாந்த 3.
3.நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி, முதற்பதிப்பு : 1992
3. சிலப்பதிகாரம், (மூ.உ), வ.த.இராம சுப்பிரஅணியம், பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு,2009.
4. பத்துப்பாட்டு (மூ.உ), மோகன்

வரலாற்றில்போர்வாட்கள் –3

அண்ணாமலை சுகுமாரன்
சென்னை

பொன்முடியார் எனும் சங்ககாலப்பெண்புலவர்,

> "ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே
> சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
> வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
> நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
> ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கி
> களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"
> – *(புறம்: 312)*

எனப் புறநானூற்றில் கூறியுள்ளார்.

-- இதில் வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே என்று கொல்லர்களை சிறப்பிக்கிறார் .பிறகு அங்கே வடிக்கப்பட்ட வாளைக்கொண்டு அதாவது ஒளிறு வாள் கொண்டு ,யானையே வெல்லும் காளையர் வீரம் பற்றி சிறப்பிக்கிறார் .

சமுதாயத்தில் வேலும், வாளும் செய்யும் கொல்லர் இன்றும் அதேபெயரில்கொல்லர் என்று 2000 ஆண்டுகள் கழித்தும் வழங்குவது தமிழின் சிறப்பு வேளாளர்க்கு இணையாக அவர்களை கம்மாளர் என்று அழைத்திருக்கிறார்கள்

தென்னிந்தியாவில் செய்யப்பட்ட போர்வாட்களுக்கு உலகெங்கும் பெரும் வரவேற்பு இருந்தது எகிப்தில் பிரமிடுகள் கட்டும் பொது அங்கு பாறைகளை வடிக்க தென்னிந்திய உளி முதலிய கருவிகள் பயன்பட்டதாகக்கூறப்படுகிறது இங்கிருந்து போன போர்வாட்களுக்கு ஒருதனி சிறப்பு அப்போது இருந்திருக்கிறது .

தொல்தமிழகத்தின் வெளி நாடுகளுக்கான ஏற்றுமதியில் போர்வாட்களுக்கு சிறப்பான இடம் இருந்திருக்கக்கூடும்ஒவ்வரு குடியிருப்பு கிராமங்களிலும் பலவித தொழில் நிபுணர்கள் இடம் பெற்றிருந்தனர் .அவர்களில் கொல்லர்களுக்கு தனி இடம் இருந்தது .அவர்களின் முக்கியபணியாக மன்னர்களின் படைகளுக்குவேண்டிய போர்க்கருவிகள் தொடர்ந்துசெய்தல் முக்கியப்பொறுப்பாக இருந்திருக்கிறது

அதேசமயம் அத்தகைய கொல்லர்களுக்கு வேண்டிய எககு இரும்பு தனியே அடர்ந்த காடுகளின் நடுவே இரும்பு தாதுக்களும் ,அவைகளை உருக்கத்தேவையான எரிபொருளாக மரங்களும் கிடைக்கும் இடங்களில் அமைந்திருந்தன

அவர்கள் இத்தகையையிரும்புத்தாதுக்களை உருக்கவும் நுண்ணிய தரம் வாய்ந்த இரும்பாக மாற்ற சில மூலிகைகளையும் அப்போது பயன்படுத்திருக்கின்றனர்.அது என்னவாக இருக்கும் என்ற ஆவல் என்னிடமும் இருந்தது .19 நூற்றாண்டில் எழுதப்பட்டிருந்த ஒருஆய்வு கட்டுரையில் அந்த மூலிகை ஆவாரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.இதை பயன்படுத்திப்பார்க்கவேண்டு.அத்தகைய உயர்வெப்பம் கிடைக்க சில தனி வகை மரங்களும் அறிந்திருக்கக்கூடும்.இத்தகைய தொழில் நுட்பங்கள் இப்போது மறைந்துவிட்டது.

நம்மை ஆண்டுகொண்டிருந்த ஆங்கிலேயர்கள் இங்கிருக்கும் தொழில் நுட்பம் ,தாதுஇவைகளை தாங்கள் மட்டுமே பயன்படுத்தி இலாபம் அடைய அவர்களும் இத்தகைய தொழில் நுட்பங்களை அழிக்க துணைபோயினர் தொழில்புரட்சி காரணமாக ஐரோப்பியாவிலும் பல்வேறு தொழில்கள் பெருகின .அவர்கள் அப்போது நிலக்கரி பயன்படுத்த அறிந்திருந்தனர் .இந்தியர்களுக்கு அப்போது நிலக்கரி என்பது அறிந்திருக்கவில்லை

இந்தியாவில் உருக்குஇரும்புசெய்தால் 40% செலவு மிச்சம் ஆகும் என்று இந்தியாவில் இரும்புதயாரிக்க எண்ணினர் அதற்க்கு ஆசியாவிலேயே முதலில் அமையவிருந்த இரும்பு தாதுவை உருக்கு ஆலை அமைந்த இடம் தமிழ் நாட்டில் இருந்த பரங்கிப்பேட்டைதான் . இதில் இருந்தே இரும்பு உருவாக்கத்தில் தமிழ் நாடு பெற்றிருந்த முக்கியத்தை உணரலாம்.

கடலூரிலிருந்து 35கி.மீ. தூரத்தில் கடற்கரையில் அமைந்துள்ள பரங்கிப்பேட்டை முன்பு "போர்டோ நோவோ' என்று அழைக்கப்பட்டது! இங்கு போர்ச்சுகீசியர், டச்சுக்காரர்கள், பிரிட்டிஷார் என அடுத்தடுத்து அங்கே ஆதிக்கம் செலுத்தினர். மேலும் இங்குதான் மைசூர் மன்னருக்கும் பிரிட்டிஷ்காரர்களுக்கும் இடையே போர் நடந்தது. பல நதிகள் கடலில் சங்கமிக்கும் கழிமுகப் பகுதியான இம்மாவட்டத்தினை தென்பெண்ணையாறு, கெடிலம், வெள்ளாறு, மணிமுத்தாறு, கொள்ளிடம் ஆகிய நதிகள் கடந்து செல்கின்றன.

இவ்வூர் முகமதியர் காலத்தில் மஹ்மூதுபந்தர், எனவும் போர்ச்சுகீசியர், காலத்தில் போர்டோநோவோ (புதிய துறைமுக நகரம்) மற்றும் நாயக்கர் காலத்தில் முத்து கிருஷ்ணபுரி என்றும் அறியப்பட்டிருக்கிறது

வங்காள வளைகுடா கடலோரத்தில் அமைந்துள்ள இவ்வூர் போர்ச்சுகீசியர்கள் மற்றும் பிரிட்டிசாரால் காலனி ஆதிக்கத்தில் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இது முக்கிய கப்பல் துறைமுகமாகவும் விளங்கியது.

ஆசியாவின் முதல் இரும்பு தொழிற்சாலை இங்கு நிறுவப்பட்டிருந்தது 1830 இல் ஆசியாவின் முதல் பெரிய அளவிலான இரும்பு ஊருக்கு ஆலை பரங்கிப்பேட்டையில் கிழக்கிந்திய நிறுவனத்தில் முதலில் வேலை செய்த திரு ஹீத்(JOSHUA MARSHALL HEATH)என்பவரால் வெள்ளாறு கடலில் சேரும் முகத்துவாரத்தில் அருகே ஆரபிக்கப்பட்டது .ஆரம்பத்தில்

POTONOVO IRON WORKS எனும் பெயரில் இரும்பு ஆலை நடத்தப்பட்டது. பிறகு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் கிழக்கிந்திய கம்பனியில் இருந்து வாங்கிய கடனால் *The Indian Iron and Steel Company* என்று பெயர் மாற்றம் பெற்றது

பின்பு தொடர்ந்து நீடித்த நெருக்கடியால் மூக்கிந்திய கம்பனியால் எடுக்கப்பட்டு *The East India Iron Company'*என்று பெயர் மாற்றம் பெற்று சில ஆண்டுகள் கழித்து *1874* இல் நிரந்தரமாக மூடப்பட்டது ஆனால் இதில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புகள் அதன் தரத்தால் உலகெங்கும் பயன்படுத்தப்பட்டது .இன்றும் எழும்ப ர் ரயில் நிலையத்தில் அதன் இரும்புத் தூண்களில் *Made in Porto Novo'.* என்ற பொறிப்பைக்காணலாம் என்று கூறப்படுகிறது .

மேலும் பறங்கிப்பேட்டையில் தயாரிக்கப்பட்ட இரும்பு, அதன் தரத்தின் காரணமாக இங்கிலாந்தில் உள்ள *BRITAANICA TUBULAR* மற்றும் *STAIN STRAIT BRIDGE* ஆகியவற்றில் பயன் படுத்தப்பட்டது- மும்பையில் உள்ள *Bandra* ரயில் நிலையத்தில் பயன் படுத்தப்பட்டது என்று *S.B. JOSHI* எனும் ஆய்வாளர் *"HISTORY OF METAL FOUNDING ON INDIAN SUBCONTINENT SINCE ANCIENT TIMES" (pp97)*தனது எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

இத்தகைய உயர்தர இரும்பு உருக்கு சேலத்திற்கு அருகில் இருக்கும் கஞ்சமலை எனும் மலையில் சுற்றி உதிரியாகக்கவிந்திருந்த தாதுக்களில் இருந்து பெறப்பட்டது கஞ்சமலை என்பது சேலம் மாவட்டத்தில் உள்ள ஒரு மலை ஆகும். இந்த மலை சித்தர்கள் அதிகம் வாழ்ந்த பகுதியாகக் கருதப்படுகிறது. . மலையின் உச்சியில் மேல்சித்தர் கோயில், கரியபெருமாள் கோயில் ஆகியன உள்ளன. சித்தர் கோயிலின் அருகில் ஒரு நீரோடை ஓடுகிறது. இந்த மலையில் காளங்கிநாதர் என்ற சித்தர் வாழ்ந்தார் என்பதற்கான குறிப்பு திருமூலர் திருமந்திரத்தில் உள்ளது. மலையின் தென்பகுதியில் சடையாண்டி ஊற்று உள்ளது. மேல்சித்தர் கோயில் அருகில் ஒரு ஊற்றும் நீரோடையும் நல்லணம்பட்டி அடிவாரத்தில் உள்ளது. இந்த மலையில் சடையாண்டி சித்தர் வாழ்ந்ததற்கான அடையாளம் காணப்படுகிறது.மேலும் சித்தர் கோவில்,வற்றாத நீருற்றைக் கொண்டுள்ளது. இந்த மலையில் இரும்புத்தாது அதிகம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.இம்மலையில் மூன்று அடுக்குகளாக இரும்புத்தாதுகள் உள்ளன.இவை நல்ல தரம் வாய்ந்தவை.*n*சுமார் *5* ஆண்டுகளுக்கு முன் நான் கஞ்சமலை சென்று அங்கே இருக்கும் நீர்நிலையில் குளித்து சித்தரை வழிபட்டதுண்டு

நான் சில நாட்களாக கஞ்சமலையைப் பற்றியும் சித்தர் காலாங்கி நாதர் பற்றியும் படித்து வந்தபோது ,சென்னை மறைமலை நகரில் வசிக்கும் திரு சரவணன் என்பவரும் எனோ சித்தர் காலாங்கி நாதர்க்குறித்து கஞ்சமலைக்குறித்து சில ஐயங்களை எழுப்பினார்

.அப்போதுதான் இவைகளைக்குறித்து சிந்தித்திருக்கும் போது இவரும் காலாங்கி நாதர் பற்றி கேட்டது எனக்கு வியப்பாகவே இருந்தது .சித்தர்களின் ஆளுமை உலகில் பரவும் காலம் விரைவில் வரும் கஞ்ச மலையைச் சுற்றி சிதறிக் கிடக்கும் *float ore* எனும் உதிரித் தாதுதான் அள்ளிச் செல்லப் பட்டிருக்கிறது. அதுவே பல லட்சம் டன்கள் இருக்கும். புதியதாகத் தாது வெட்டி எடுத்ததாகத் தெரியவில்லை. கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளுக்கு முன், சாலை வசதி இல்லை, ரயில் வசதி இல்லை. சுமார் இருநூறு கி.மீ. தூரம். கனமான இரும்புத் தாதுவை சேலத்தில் இருந்து பரங்கிப்பேட்டைக்கு எப்படிக் கொண்டு சென்றிருப்பார்கள் ? இப்போது வியப்பாக இருக்கலாம் ஆனால் அப்போது . காவேரி-கொள்ளிடம்- வெள்ளாறு வழியே

பரிசல்களில் கொண்டு சென்றிருக்கிறார்கள். அப்போது "வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி" யில் ஆண்டில் ஆறு மாதம் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்திருக்கிறது அப்போது கர்நாடகாவில் கே.ஆர். சாகர், கபினி அணை, இங்கே மேட்டூர் எதுவும் இல்லை

ஆனி முதல் மார்கழி-தை வரை தண்ணீர் ஓடியிருக்கும். சுமார் முந்நூறு கி.மீ. கஞ்சமலை இரும்புத் தாது. காவிரியில் மிதந்து வந்திருக்கிறது, இது ஆங்கிலேயருக்கு சாத்தியம் ஆகிஇருந்திருக்கிறது சேலத்தை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள இரும்புத்தாதுவின் அளவு சுமார் 75 மில்லியன் டன்கள். மலையைச் சுற்றியும் கீழே விழுந்த தாதுதான் இதுவரை எடுக்கப்பட்டுள்ளது 1960களில் இந்தத் தாது சேலத்திலிருந்து ரயில் மூலம் கடலூர் துறைமுகம் சென்று அங்கிருந்து ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. சேலத்தில் தற்போது செயல்படுவது இரும்பு உருக்காலை அல்ல;இரும்பு உருட்டாலை. இங்கே எந்தக் கனிமமும் உருக்கப்படுவதில்லை. மாறாக ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகடுகள் தயாரிக்கப்பட்டு உருட்டி அனுப்பப் படுகின்றன. (இந்தத்தகவல்களைப்பற்றி மறைந்து விட்ட நண்பர் சிங்கநெஞ்சம் சம்பந்தம்.அவரது பிளாகில் எழுதி இருக்கிறார் ,இவைகளைக்காணும் போது அவரின் நினைவுகள் என்னை கனியவைக்கிறது

இவைகளை அறியும் போது என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ! என்றுதான் ஏங்கத்தோன்றுகிறது நம்மிடம் கிராமங்களில் இருந்த கொல்லர்கள் இரும்பை பயன்படுத்தி வேளாண்மை ,மற்றும் போர்கருவிகளான வேல் ,வாள் இவைகளை செய்து குவித்தனர் , அடர்ந்த காடுகளில் உள்ளே ,இரும்புத்தாதுக்கள் கிடைக்கும் ,அவைகளை உருக்க எரிபொருளாக தனித்துவமான மரங்கள் மூலிகைகள் அங்கே கிடைக்கும் அத்தனைப்பகுதிகளுக்கும் சென்று ஆங்காங்கே சிறிய அளவில் இரும்பு உருக்கி தொழில் செய்தவர்கள் உயர்தரஇரும்பைத்தந்தவர்கள் எப்படி மறைந்து போனார்கள் ,? எப்படி அழித்தொழிக்கப்பட்டார்கள் என்ற சோக வரலாற்றை இன்னமும் சொல்ல நினைக்கிறேன் . இது ஒரு புறம் என்றால் நமது பண்டைய சித்த மருத்துவர்கள் இரும்பை உண்ணும் மருந்தாகச் செய்து அற்புதங்கள் செய்திருக்கிறார்கள் .

உடம்பு இரும்பு போல் இருக்கிறது என்றுகூறுவார்கள் ,நமது வைத்தியர்கள் இரும்பையே எளியமுறையில் உண்ணத்தக்க மருந்தாக மாற்றி இருந்திருக்கிறார்கள் .அயபற்பம் எத்தகைய நோயையும் தீர்க்கும் என்று அறியப்பட்டுள்ளது .இன்னம் அயசெதூரம் ,அய வெள்ளை என எத்தனையோ அற்புத மருந்துகள் இன்னமும் கிடைக்கிறது .இவைகளின் செய்முறைகளில் எத்தகைய அதிக வெப்பம் தேவைப்படாமல் ,சில எளிய மூலிகைகளைப்பயப்படுத்தியே இரும்பின் தன்மையை மாற்றி இருந்திருக்கிறார்கள் இத்தகைய மருத்துவ தயாரிப்பில் விழுதி இலை, பொற்றிலை கையான்,புளிப்பு மாதுளை இன்னமும் நிறைய மூலிகை கள்பயன்படுத்தி இத்தகைய அற்புதங்களை சாதித்திருக்கிறார்கள்

பெரிய அளவில் இரும்பை உருக்க ஆவாரம் பயன்பட்டதை முன்பே சொல்லி இருக்கிறேன் இவைகளை இன்னமும் நாம் மறைத்து வைத்திருந்து பயனில்லை . இத்தகைய தொழில் நுட்பம் நம்மிடம் இருந்து பறிபோவதற்கு முன் அல்லது மறக்கடிக்கப்படுவதற்குமுன் , இவைகளைப்பற்றி எழுதி அவைகள் நம்முடையவை என்று உலகிற்கு அறிவிக்கும் கடமை தமிழருக்கு உண்டு .இன்னமும் சொல்ல நிறைய இருக்கிறது நன்றி

HUTHA

Hutha

Health Care Products

நலம்..தரம்..சுவை..! இதுவே எங்கள் தாரகமந்திரம்.

மசாலா வகைகள்

*மஞ்சள் தூள்
*தனி மிளகாய் தூள்
* பிரியாணி மசாலா
* 4 in 1 புளிக்குழம்பு மசாலா
* சாம்பார் மசாலா
*மட்டன் & சிக்கன் பெப்பர் தொக்கு மசாலா
* மருந்துக் குழம்பு மசாலா
* முடக்கற்றான் ரசப் பொடி
*மட்டன் & சிக்கன் குழம்பு மசாலா

ஹெல்த் மிக்ஸ்

* ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* கர்ப்பிணிகளுக்கான ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* டயாகேர் ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* பீட்ரூட் ஊட்டச்சத்து மால்ட்

பொடி வகைகள்

* பிரண்டை இட்லிப்பொடி
*பருப்பு சாதப்பொடி
*கொள்ளுப்பொடி

சைவ தொக்கு வகைகள்

* புளியோதரை தொக்கு
* கோங்குராத் தொக்கு
* தக்காளித் தொக்கு
* மல்லித் தொக்கு
* பூண்டு தொக்கு
* முருங்கைக் கீரை சூப்
* வத்தக்குழம்பு தொக்கு
*லெமன் சாதத்தொக்கு
*பிரண்டைத்தொக்கு

பிரசவ லேகியம் (On Order)

கோதுமை இடியாப்பம் மாவு

அசைவ தொக்கு வகைகள்

*வஞ்சிரக் கருவாட்டுத் தொக்கு
*மாசிக் கருவாட்டுத் தொக்கு
*இறால் தொக்கு

Mfg & Marketed by:
HUTHA HEALTH CARE PRODUCTS
Chromepet, Chennai - 600044
PH: 9025303765

உறுப்பினர் கட்டணம்

ஆண்டுச் உறுப்பினர் கட்டணம்.....1200/-
அரையாண்டுச்உறுப்பினர் கட்டணம் ..... ரூ. 600/-
அன்பளிப்பு ரூபாய் 120/-

தனிச்சுற்றுக்கு மட்டும்